# மணல் வீடு

கதைகள்

சி. சு. செல்லப்பா

MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

ஜோதி நிலையம்

திருவல்லிக்கேணி :: சென்னை

சுதேசமித்திரன் வெளியீடு — 2
முதற் பதிப்பு 1945

M. I. P. PROJECT
Micr[illegible]

M. I. P. PROJECT
Microfilmed.

பதிப்புரிமை

விலை ரூ. 1-0-0

17167

கபீர் அச்சுக்கூடம், சென்னை

65.

# மணல் வீடு

மறைமலையடிகள் நூல்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1

சமித்தின் வெளியீடு
விற்பனையுரிமை

**ஜாதி நிலையம்**
**ல்லிக்கேணி :: சென்னை**

விலை ரு. 1-0-0

42893

## ஜோதி சிறுகதைத் தொகுதிகள்

| | | | |
|---|---|---|---|
| காணாமலே காதல்<br>கு. ப. ராஜகோபாலன் | 1 | 12 | 0 |
| அபலே<br>என். எஸ். ஸ்ரீநிவாஸன் | 1 | 12 | 0 |
| மலரும் மணமும்<br>பி. எஸ். ராமையா | 4 | 0 | 0 |
| விடி வெள்ளி<br>ரா. ஆறுமுகம் | 3 | 8 | 0 |

அடுத்து வருபவை

முத்துச் சிமிக்கி
'கம்பதாஸன்'


கந்தர்வன்
லா. ச. ராமாமிர்தம்

காதற் கடிதங்கள்
புரசு பாலகிருஷ்ணன்

நாடோடியின் படகு
'உமாசந்திரன்'

வெண்கலச் சிலே
'லக்ஷ்மி'

சூரியகாந்தி
ந. சிதம்பர சுப்ரமண்யன்



ஸ்ரீ. சி. சு. செல்லப்பா, சிறந்த சிறு கதை எழுத்தாள ஒருவர். மதுரை ஜில்லாவைச் சேர்ந்த வத்தல குண்டில் ..ந்தவர். மதுரை காலேஜில் இவர் படித்துக் கொண் ..ந்த சமயம் தமிழ் இலக்கிய மறு மலர்ச்சியின் போக்கு ..ர் மனதைக் கவர்ந்தது. அப்பொழுது நடந்துகொண் ..ந்த சுதந்திரச் சங்கு, மணிக்கொடி இரண்டிலும் ..தகள் எழுத ஆரம்பித்தார். இவருடைய 'ஸரஸாவின் ..ம்மை' என்ற கதை 'மணிக் கொடி' யில் வெளியான ..து இலக்கிய உலகத்திலேயே ஒரு பரபரப்பை உண் ..க்கியது. மணிக்கொடிக்குப் பிறகு கலைமகளில்

இவருடைய கதைகள் வெளி வந்தன. 'ஜயபாரதி' தமிழ் நாடு, பாரத தேவி, முதலிய பத்திரிகைகளில் உதவி ஆசிரியராக இருந்திருக்கிறார். 1941ல் நடந்த தனிநபர் சத்யாக்கிரகத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார். தற்போது 'சந்திரோதயம்' என்ற பத்திரிகையில் துணை ஆசிரியராக இருக்கிறார். இவருக்கு வயது முப்பத்து மூன்று. 'ஸரஸாவின் பொம்மை' என்ற பெயருடன் இவருடைய சிறு கதைத் தொகுதி ஒன்று ஏற்கனவே வெளி வந்திருக்கிறது.

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| புதியவள் | ... | 1 |
| வேண்டாத விடுதலை | ... | 11 |
| மணல் வீடு | ... | 21 |
| ஒரு பழம் | ... | 29 |
| கைதியின் கர்வம் | ... | 40 |
| யானை விளக்கு | ... | 50 |
| தாய் | ... | 61 |
| கோதான் பலன் | ... | 67 |
| வந்தேமாதரம் | ... | 74 |
| செய்த கணக்கு | ... | 82 |
| சிப்பாய் இதயம் | ... | 88 |
| இணைப்புச் சங்கிலி | ... | 98 |
| லக்ஷிய சோதனை | ... | 110 |
| அங்கச்சி | ... | 121 |
| பைராகி | ... | 130 |
| கொண்டு வந்த சீர் | ... | 137 |

# புதியவள்

"சீதாபதி, இந்த வண்டிக்கு வாயேன். ஒரு இடம் காலி இருக்கிறது" என்று அம்மாமி வண்டியி லிருந்து கூப்பிட்டாள்.

"எங்கே இருக்கு? இடம் இல்லே போலிருக்கே" என்று அவர் கீழே நின்றுகொண்டு கேட்டார்.

"அடேயப்பா, உனக்கு இங்கே இடம் போரா தாக்கும்? புவனத்தைக் கொஞ்சம் நகர்ந்துகொள்ளச் சொன்னால் போச்சு. புவனம், உன் ஆத்துக்காரருக்குக் கொஞ்சம் இடம் விட்டி அம்மா" என்று குறும் பாகச் சிரித்துக்கொண்டே அம்மாமி என் பக்கம் திரும்பினாள்.

எனக்கு உள்ளூற எவ்வளவு சந்தோஷம்! அதை வெளிக் காட்டாமல் மறைத்துக்கொண்டு அவர் உட்காருவதற்குப் போதுமான இடத்துக்கு மேலேயே விட்டு வண்டியின் உட்புறம் ஒதுங்கினேன்!

"நன்னா இருக்கு. யஜமானருக்கு இடம் விடணு மானா எங்களைப்போட்டு நெரிக்கணுமாடி அம்மா?" என்று என் பின்னால் உட்கார்ந்து கொண்டிருந்த சின்ன மாமியார் குத்தலாகச் சொன்னதுந்தான் பின்னால் ஆள் இருப்பதாக எனக்கு ஞாபகம் வந்தது. கேலி எனக்குச் சுருக்கென்றது.

மாவிளக்கு ஏற்றுவதற்கு மாரியம்மன் கோவி லுக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தோம். இரண்டு வில் வண்டிகள் காளைகள் பூட்டித் தயாராக நின்று கொண் டிருந்தன. எல்லோரும் வண்டியில் ஏறிக்கொண்டு விட்டார்கள். அவர் மட்டும் இரண்டு வண்டிகளுக்கும் நடுவில் நின்றுகொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் தான் அம்மாமி அவரை எங்கள் வண்டிக்கு அழைத்

தாள். அவருக்கு இடம் இருப்பதை அறிவிப்பது போலவும், வருகிறாரா என்று அறியவும், பார்த்ததும் பார்க்காததுமாக அவர் பக்கம் திரும்பி இருந்தேன்.

அதே சமயம் மற்ற வண்டியிலிருந்து, "அண்ணா, இந்த வண்டியிலே ஒரு இடம் இருக்கு; வா அண்ணா" என்று லக்ஷ்மி உரக்கக் கூப்பிட்டாள்.

அப்பொழுதே எனக்குக் கொஞ்சம் விலுக்கென்றது. அதற்கேற்றாற்போல் எங்கள் வண்டியை நோக்கி இரண்டு எட்டுகள் எடுத்துவைத்த அவர் சட்டென்று அந்த வண்டிப்பக்கம் திரும்பி, "இடம் இருக்கா?" என்று கேட்டுக்கொண்டே நடையை மடக்கவும், எனக்கு மனசு கலங்கியது. ஏமாந்த நினைப்புத் தோன்றியது.

"நிறைய இடம் இருக்கு அண்ணா" என்று வண்டியில் இருந்த குழந்தைகளை எல்லாம் அதட்டி நகரச்சொல்லி லக்ஷ்மி இடம் ஒழிக்கவும், அவர் சட்டென்று தாவி அதில் உட்கார்ந்துகொண்டு விட்டார். இவை யெல்லாம் சில விநாடிகளில் நடந்துவிட்டன.

அங்கிருந்துகொண்டே, "நான் உங்கள் வண்டிக்கு வரவில்லை!" என்றார் அம்மாமியைப் பார்த்து.

அம்மாமி மிகவும் கேலியும் பரிகாசமுமாக இருப்பாள். சட்டென்று சமாளித்துக்கொண்டு, "நீ வராவிட்டால் எனக்கு என்னடாப்பா நஷ்டம்? புவனந்தான், பாவம், ஏமாந்து போனாள். அழாதே அம்மா, புவனம்" என்று கலகலெனச் சிரித்துவிட்டாள்.

"ஆமடா, சீதாபதி, அவள் உனக்கு இடம் விட்ட வேகத்திலே என் கை அப்பளமாகப் போயிடுத்துடாப்பா" என்று சித்தி தானும் கேலியில் கலந்து கொண்டாள்.

வண்டிகளில் இருந்தவர்கள் எல்லோரும் கொல்லென்று சிரித்து விட்டார்கள். என்னை ஊசியால் குத்தியதுபோல் இருந்தது, அந்தப் பரிகாச வார்த்தைகளைக் கேட்டபோது.

"பார்த்தேளா, அம்மாமி! நீங்கள்தானே இடம் விடச் சொன்னீர்கள்? நான் ஒன்றும் ஏமாறவில்லை. அசடாக்காதேயுங்கள்!" என்று அவர்கள் கேலியைத் தாங்கியும் தாங்காமலும் பதில் சொன்னேன்.

அப்போது, "லக்ஷ்மி அந்த வண்டியிலிருந்து உன்னைக் கூப்பிடுகிறாள் பாரு" என்று யாரோ சொன்னார்கள். லக்ஷ்மியின் குரல் உச்சஸ்தாயியில் கேட்டது.

"மன்னி, நீயும் கூப்பிட்டாயே; யார் வண்டிக்கு வந்தான் பாரு அண்ணா!" என்று உதடுகளைப் பிதுக்கிக்கொண்டு கேட்டாள்; தன் வெற்றியை எனக்குத் தெரிவித்தாள்.

நொந்தபுண்ணில் குத்துவதுபோல் இருந்தது இது எனக்கு. எல்லோருடைய சிரிப்பும் கலந்தன. ஆளுக்கு ஒருவிதமாகக் கேலி செய்தார்கள். "அவன் இடத்தையும் சேர்ந்து உட்கார்ந்துக்கோடி அம்மா" என்றாள் சித்தி. லக்ஷ்மிக்கு ஒரு பதிலும் சொல்ல எனக்குத் தோன்றவில்லை.

"நல்லதாச்சு, போங்களேன். சௌகர்யமாக உட்கார்ந்து கொள்ளுகிறோம்" என்று கேலிக்கு ஈடு கட்டிப் பதில் கூறிவிட்டேன்.

ஆனால் ஒப்புக்குத்தான் நான் அந்த வார்த்தைகளைக் கூறினேனென்பதும் எனக்குத் தெரியாமல் இல்லை. பிரமாதமான விஷயம் இல்லை அது. ஆனாலும் அவரும் வந்து உட்கார்ந்துகொள்ளப் போகிறார் என் பக்கம் என்று அல்ப சந்தோஷப்பட்ட என் மனசு அவர் வராததும் அடைந்த ஏமாற்றத்தைச் சொல்லி முடியாது. அந்த ஏமாற்றத்துக்கு அவர்கள் கேலி, தூபம் போட்டதுபோல் இருந்தது.

அதற்குள் வண்டிகள் இரண்டும் கிளம்பிவிட்டன.

"ஏண்டி, மாரியம்மனுக்குக் கண்மலர் எடுத்து வைத்துக் கொண்டேளா?" என்று சித்தி சாவகாசமாக ஞாபக மூட்ட, எங்கள் சம்பாஷணை வேறு விதமாக மாறியது. போனவருஷம் கோவிலுக்குப்

போனபோது மாடு தும்பு தெறித்து வண்டி குடை சாய்ந்தது முதலான விஷயங்களில் ஸ்வாரஸ்யமாக ஈடு பட்டுப் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் அவ்வளவு ஸ்வாரஸ்யமாகச் சம்பாஷணையில் ஈடுபடாததை அவர்கள் கவனித்துவிட்டார்கள் போலிருக்கிறது.

“ஏன் அக்கா அவளைத் தொந்தரவு பண்ணுகிறீர் கள்? அவள் பாவம் ஆத்துக்காரர் வண்டிக்கு வரவில்லை என்று ஏமாந்துபோய்க் கிடக்கிருள்” என்று கேலி செய்துகொண்டே வந்தாள் அம்மாமி.

அந்தப் பேச்சை மீண்டும் எடுப்பதே எனக்குக் கசப்பாகத்தான் இருந்தது. நான் பாசாங்குக் கோப மாக ஒருதரம் மாமியைப் பார்த்ததும், “இனிமேல் சொல்லவில்லையடி அம்மா” என்று அம்மாமி குத்திப் பேசி நிறுத்தினுள்.

“போங்கள் அம்மாமி கேலி பண்ணிண்டு!” என்று நான் முகத்தை எதிர்ப்பக்கம் திருப்பிக்கொண் டேன்.

மாரியம்மன் கோயிலை நோக்கி வண்டிகள் வேக மாகப் போய்க்கொண்டிருந்தன. காளைகள் பெரு நடையும் ஓட்டமும் கலந்து போட்டுச் சென்றன. சாலைமரங்கள் எங்கள்மீது மோதுவனபோல் எதிர் நோக்கி ஓடிவந்தன. சாலைக்கு இருபுறமும் கதிர் படிந்த வயல்கள் ஒரே மஞ்சள் தரையாகத் தென் பட்டன.

அவற்றை யெல்லாம் பார்த்துக்கொண்டே வண் டிக்கு வெளிப்புறம் தலைநீட்டிக்கொண்டு இருந்தேன். சற்று முன் நடந்த அந்தச் சம்பவம் மட்டும் என் மனத்தைவிட்டு அகலாமல் உறுத்திக்கொண்டே இருந்தது. கேலியிடையே நான் அவ்வளவு ஆழ்ந்து சிந்தித்து இராத அந்தச் சம்பவத்தைப் பற்றிய நினைவு கள் என் தனிமை மனத்தில் பலமாக மோதி அலையத் தொடங்கின.

**நா**ங்கள் கோவிலுக்குப் போவதற்குள் வண்டிச் சக்கரங்கள் எத்தனை தரம் சுற்றி இருக்கும் - அத்தனை தரம் நினைத்திருப்பேனோ என்னவோ: "மன்னி, யார் வண்டிக்கு அண்ணா வந்தான் பாரு" என்று உதட்டைப் பிதுக்கி லக்ஷ்மி ஏளனமாகக் கூறின அந்த வார்த்தைகளை.

லக்ஷ்மி வாய்திறந்து அவரைக் கூப்பிட்டாள்: வாஸ்தவம். ஆனால் நான் வாய்திறந்து கூப்பிட்டேனா? இல்லவே இல்லை. அப்படியானால் நான் அவரை என் வண்டிக்கு எதிர்பார்க்கவே இல்லையா? அதை எப்படி இல்லை என்று சொல்லமுடியும்? மாமி கூறுவதற்கும் முன்பே எப்போது நான் இடம்விட்டு உட்கார்ந்தேனோ அப்போதே நான் அவரை ஜாடையாக அழைத்ததாகத் தானே அர்த்தம்? அப்போது நான் அவரைப் பார்த்ததுகூட அப்படித்தானே?

ஆனால் எங்கள் இரண்டு அழைப்புகளில் அவளதை ஏன் அவர் தேர்ந்தெடுக்க வேண்டும்? என் அர்த்தத்தை அவர் அறிந்து கொள்ளவில்லையா? இல்லை, நான் வாய்விட்டு அழைக்காமல் இருந்ததுதான் காரணமா? ஒருவேளை 'இந்த வண்டிக்கு வாருங்களேன்' என்று வாய்விட்டுக் கூறி இருந்தால்? ஆமாம், கட்டாயம் அவர் வந்தே இருப்பார். ஆனால் அதையுந் தான் எப்படி உறுதியாகச் சொல்லமுடியும்? இப்படியெல்லாம் நினைத்துக் கொண்டேன்.

அடுத்த விநாடி, 'ஐயையோ, என்ன யோசனை! அசடு! எப்படி அத்தனை பக்கத்து மனுஷர்கள் மத்தியில் நான் அவரை வாய்திறந்து கூப்பிடமுடியும்? அதிலேயும் இந்தப் பட்டிக்காட்டிலே. ஊர் சிரித்துவிடாதா பெண்ணின் லக்ஷணத்தைக் கண்டு? ஆத்திலே பகல் நேரத்திலே ஒரு வார்த்தை பேசுகிறதற்குக் கூட எவ்வளவு பயந்து பயந்து சாகவேண்டியிருக்கு. நானாவது ஒரு வார்த்தை, அரைவார்த்தை—அவர்—' என்று எண்ணினேன்.

நான் புக்ககம் வந்து வெகுநாட்கள் ஆகவில்லை. லக்ஷ்மி புக்ககம் போகத் தயாராக இருந்தாள். நான் பட்டணத்தில் தேர்ச்சிபெற்று இருந்ததெல்லாம் இவ்வளவு சீக்கிரம் வியர்த்தமாகப் போய்விடுமென்று நினைத்ததே இல்லை. அதற்கு யாரையும் பொறுப்பாளி ஆக்கமுடியாது. கிராமாந்தர வாழ்க்கை விதமே அப்படித்தான் இருக்கும் என்பதை நான் போகப் போகக் கண்டு கொண்டேன்.

சீதனமாகக் கொண்டுவந்திருந்த வீணை ஒரு மூலையில் தூசி படிந்து கிடந்தது. படித்ததைக் குட்டிச்சுவராக அடித்து விடாதபடி ஞாபகப்படுத்திக் கொள்ளும்படி அம்மா, சித்தி எல்லோரும் தூண்டிக்கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் எப்படியோ எல்லாம் சேர்ந்து ஒருவிதமாக எனக்கு அந்தப் பழைய தொடர்பே இல்லாமல் செய்துவிட்டன. எனக்கும், பள்ளிக்கூடமே போகாமல், பாட்டும் சொல்லிக் கொள்ளாமல் இருந்த லக்ஷ்மிக்கும் ஒரு வித்தியாசமும் இல்லாமல்தான் போய்விட்டது.

ஆனால் ஒரு வித்தியாசம் மட்டும் என் மனத்தில் வெகு சீக்கிரமே பதிந்துவிட்டது. நான் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டு விட்டதாக ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. அவர் ஏதாவது ஒரு விஷயத்துக்குக் கூடத்திலிருந்து கூப்பிடுவார். எல்லோரும் ஓடிப்போய்அவரைச் சூழ்ந்து கொண்டு அந்த விஷயத்தை ரஸிப்பார்கள். நான் அந்தச் சமயத்தில் கைவேலையாக இருப்பேன். உடனே ஓடிப் போய்ப் பார்க்கவேண்டுமென்ற ஆசை உதிக்கும்.

ஆனால் ' புருஷர்கள் இருப்பார்கள். இல்லாவிட்டாலும் நானும் அப்படி ஓடிப்போனால் எல்லோரும் என்ன நினைத்துக்கொள்ளுவார்கள்? ' என்ற நினைப்புத் தோன்றும். சமையலறையிலிருந்தே எட்டிப் பார்த்து விட்டு வந்து விடுவேன். மற்றவர்கள் உற்சாகத்துடன் உள்ளே வந்து தெரிவிப்பதைக் கேட்பதுடன் நான் திருப்தி கொள்ளவேண்டி இருக்கும்.

லக்ஷ்மியின் கேலிவார்த்தை எனக்கு ஏளனமாகப் பட்டதற்குக் காரணம் இன்னும் சகஜபாவமாக அந்த வீட்டில் பழகுவதற்கு எனக்கு உரிமை ஏற்பட்டிராதது தான். அவர்கள் எல்லோரும் அந்த வீட்டில் பிறந்து வளர்பவர்கள். நானோ அவர்களுக்கு முற்றிலும் புதியவள். என் மனப் போக்கை அறிந்து அவர்களால் நடக்க முடியவில்லை. அந்தப் புதுவாழ்வு முறைக்கு ஏற்றபடி நான் இதுவரை எங்கள் வீட்டில் நடந்து கொண்ட விதத்தை மாற்றி அனுசரித்துப் போகவும் எனக்குத் தெரியவில்லை! இந்த இரண்டுக்கும் இடையே என் மனசு தத்தளித்துக்கொண்டிருந்தது.

ஒருநாள் சமையலறையில் இருந்த எனக்குக் கூடத்தில் களேபர சப்தம் கேட்டது. நான் ஒன்றும் விடாமல் கேட்டுக் கொண்டிருந்தேன். அன்று சினிமாவுக்குப் போவதைப் பற்றிப் பேச்சு; யார் யார் போவதென்பதைப்பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

"நானும் போவேன் போ" என்று லக்ஷ்மி முரணிக் கொண்டிருந்தாள்.

"நன்றாக இருக்கு; பெரியவளான பெண் சினிமா பார்க்கப் போனால் ரொம்ப அழகாகத்தான் இருக்கும்!" என்று அம்மா கண்டித்தாள்.

"போனால் என்ன? எல்லா வீடுகளிலும் போகவில்லையாக்கும்? தனியா அங்கேதான் பெண்களுக்கு இடம் இருக்கிறதே" என்று அவர் பலமாகச் சிபார்சு செய்தார், லக்ஷ்மியை அழைத்துப் போவதற்கு. வாதப் பிரதிவாதங்கள் பலமாக எழுந்தன.

"நான் சினிமாவே பார்த்தது கிடையாது" என்று லக்ஷ்மி கண்களைக் கசக்கிக்கொண்டிருந்தாள்.

இதற்குள்ளே பாட்டி வந்து, "குழந்தைதான் போய்விட்டு வரட்டுமே ஒரு நாள் சினிமாவுக்கு. புக்ககத்துக்குப் போனால் நாளைக்கு எப்படியோ?" என்று

அவர் பொர்கூடன் தனதையும் சேர்த்துப் பலப்படுத்த வும், அம்மாவின் கக்ஷி பலஹீனப்பட்டு விட்டது. ஒரு வாறுகச் சம்மதித்து விட்டாள்.

லக்ஷ்மிக்கு உண்டான சந்தோஷத்துக்கு அள வில்லை. ஓடிவந்து என்னிடம் சொன்னுள். அடுத்த விநாடி அவளுக்கு என்ன தோன்றியதோ தெரிய வில்லை; கூடத்திற்கு ஓடிப்போனுள்.

"அண்ணு! மன்னியையும் கூட்டிக்கொண்டு போகலாம், அண்ணு!" என்று முகத்தை மலரவைத் துக்கொண்டு கூறினுள்.

அதைக்கேட்ட அவர் சட்டென்று நான் கத வோரம் நின்ற பக்கமாகத் திரும்பினுர். அவர் முகத்தில் சிரிப்பு வந்தது. நான் கதவுக்குப் பின் பதுங்கிக்கொண்டேன். ஆனுல் அவர் வாய்திறந்து பேசவில்லை. ஏதோ தயங்கி யோசிப்பவர் போல் தோன்றியது.

அதேசமயம் அம்மா, "புவனம் உன்மாதிரி அச டில்லை. உன்மாதிரி பறக்க மாட்டாள்" என்ருள். அந்த வார்த்தைகளின் அர்த்தம் புரியாமலா இருக்கும் எனக்கு?

"என்ன சினிமா, கன்னுபின்னுவென்று பார்த்துக் கொண்டு" என்று பாட்டி, அம்மாவின் அபிப்பிரா யத்தை எதிரொலித்தாள்.

அவர் அதற்குமேல் ஒன்றும் பேசவே இல்லை. அவர் பதிலையும், அவர்கள் அபிப்பிராயத்தையும் எதிர்பார்த்த எனக்கு அதன் முடிவு எப்படி இருந் திருக்கும்? சரேலென்று சமையலறைக்குக் காரியம் பார்க்கப் போய்விட்டேன்.

ஒரேவித நிலைமையில்தான் நானும் லக்ஷ்மியும் இருந்தோம். அவர்கள் பிரித்து வேறுபாடு காட்டிய விதந்தான் எனக்குக் கொஞ்சமும் புரியவில்லை. லக்ஷ் மியை அழைத்துப் போவதில் அவ்வளவு அக்கரை காட்டிய அவர் ஏன் என் விஷயத்தில் அதைப் பற்றிச்

சிந்திக்கவே இல்லை? அவர் மனசு வைத்திருந்தால் சுலபமாகச் சாதித்து இருக்கமுடியுமே. அதுவும் எனக்குக் கொஞ்சம் மர்மமாகவே இருந்தது. நான் நினைத்துப் பார்க்கப் பார்க்க அவரும் சேர்ந்து காட்டிய அலக்ஷியந்தான் எனக்குக் குமுறிக்கொண்டு வந்தது. மனசு கலங்கியதைக் கண் வெளிக்காட்டியது. அதே சமயம் அடுப்பில் எண்ணெய் குமுறல் என் கவனத்தை இழுத்தது.

என் மனத்தில் ஒருபுறம் ஆசை! ஆத்திரம், ஏமாற்றம், கோபம் ஒருபுறம்!

ஊரில் தன் போக்கில் ஓடவிட்ட என் உற்சாக உள்ளத்தை அடக்கி லகான்போட்டு இழுப்பதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டேன்! பட்டணத்துப் பிறந்த வீட்டு வாழ்க்கைக்கும் கிராமாந்தரப் புக்கக வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசம் போகப் போக எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிவாகிக் கொண்டிருந்தது.

இந்த வீடு எனக்குச் சொந்தமாகிவிட்டதென்பது உண்மைதான். ஆனால் 'நான் இன்னும் இந்த வீட்டுக்குப் புதியவள்தான்' என்ற ஓர் எண்ணம் மட்டும் என் மனத்தில் இருந்துகொண்டே இருந்தது. இன்று நடந்த சம்பவம் அதற்குச் சிகரம் வைத்து விட்டது போல் இருந்தது.

வாழ்வு முழுதும் இங்கேதான் கழிக்கவேண்டும் என்ற நிலைமையிலும் ஒருவித அன்யபாவம்—இல்லை அதுகூட மிகவும் பெரிய வார்த்தை—நெருங்கிய பழக்கத்துக்கு முன்னேறிக் கொண்டிருந்த ஒரு நிலைமை!

ஆனால் இந்தமாதிரி சிறு சந்தர்ப்பங்களில் கூட நான் சமாளித்துக்கொள்வதெப்படி? சரியாக நடக்கத் தெரியாத குழந்தைக்குத் தளம் மேடு பள்ளமாகத் தான் தெரியும். இதையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டால் கசப்புக்கு இடம் கொடுப்பதாகிவிடும்.

இல்லை, அதற்கு விட்டுவிடக்கூடாது. நான் சமாளித்துத்தான் ஆகவேண்டும். விகல்பம் இல்லாமல் கூறப்படும் வார்த்தைகளுக்கும் செயல்களுக்கும் அர்த்தம் கற்பிப்பது எவ்வளவு தப்பாகும்? அதன் பலன்.........

வண்டிகள் மூலை திரும்பித் திடீரென்று நின்றன. இறங்கி நின்றோம். அம்மன் கோவில் புதுவர்ணம் தீட்டிய கோபுரம் என்முன் பளீரிட்டு நின்றது. கர்ப்பக் கிருகத்தில் மாரியம்மன் ஜகஜ் ஜோதியாக நடுவில் உட்கார்ந்து சூலம் தாங்கிக் கொண்டிருந்தாள்.

மாவிளக்குத் தீபங்கள் நெய்க்குழம்பில் பிரதிபலித்து எரிந்து புகை வீசித் தங்கநிறத்தைப் பரப்பிக் கொண்டிருந்தன.

"தாயே! மனத்தில் புகைசூழ விட்டுவிடாதே" என்று பிரார்த்தித்துக்கொண்டே படிகளில் காலெடுத்து வைத்தேன்.

# வேண்டாத விடுதலை

'கிளியை சதா கூண்டில் அடைத்து வைத்திருக்கக் கூடாது. அடிக்கடி ஒரு அறையில் பறக்க விடவேண்டும்' என்றேன் நான்.

வீட்டில் எப்போதுமே மாமா எனக்கு எதிர்க்கக்ஷி. 'சரிதான், கருப்புப் பூனைக்கு ஒரே கவ்வுதான். நல்ல யோசனை!' என்பது அவர் ஆக்ஷேபணை.

இரண்டுக்கும் மேலெழுந்து பாட்டியின் தீர்ப்பு. 'அந்தக் கண்ருவி வேறே வேண்டாம், பாவத்தைக் கட்டிக்க. கூண்டைவிட்டு ஒரு நிமிஷம் கூட வெளியே விடவேண்டாம்' என்று சொல்லிவிட்டாள்.

அந்த கிளிக்குஞ்சை பிடித்துக்கொண்டு வந்ததுமே, பாட்டி, ராமதாஸின் கதையை ஞாபக மூட்டினாள். 'அவன், ஏன் வெகுகாலம் சிறையில் அவதிப்பட்டான் தெரியுமா? பூர்வ ஜன்மத்தில் ஒரு கிளியை கூண்டிலே அடைத்துவைத்திருந்த கர்மபலனை அநுபவிக்க. ஜாக்ரதை' என்று எச்சரிக்கை செய்து பார்த்தாள்.

ஆனால் நெடுநாளாக, கிளி ஒன்று வளர்க்கவேண்டுமென்ற ஆசையில், அதுவும் கைமேல் கிடைத்துவிட்ட உற்சாகத்தில் அதெல்லாம் எங்கள் காதில் விழவில்லை. 'அடுத்த ஜன்மத்தில் தானே. பார்த்துக்கொள்வோம்' என்று சொல்லிவிட்டோம். உடனே ஒரு கூண்டு வாங்கிவந்து அதிலே அதை வைத்துவிட்டோம். வேறு வார்சு இல்லாத ஒரு குடும்பக் கூட்டத்தில் வளர்க்கப்படும் ஒரே பிள்ளையைப்போல அதைப் பாதுகாப்பதிலே நாங்கள் ஈடுபட்டுவிட்டோம்.

ஆனால் அளவுக்கு மீறின சிரத்தை ஆளுக்கு ஆள், ஒன்றுக்கு மூன்று பேர்கள் காட்ட ஆரம்பித்ததிலே

தான் சிக்கல்கள் வந்து சேர்ந்தன. எத்தனை சிக்கல்கள் வந்தால்தான் என்ன? வீட்டிலே பாட்டியிடம் மாமா பேச்சுக்குத்தான் வலு.

கிளி விஷயத்திலும் அதேதான் நடந்தது. வால் இறக்கையே முளைத்து இன்னும் பறக்கத் தெரியாத அந்த குஞ்சு, இரும்புக் கிராதிக்கு உள்ளே குன்றிப் போய், நடுக்கம்பியின் பிடியை விடாமல், கண்களை மூடி மூடித் திறந்து அசைவற்று இருக்கும். பொழுது போகாத நேரத்திலே அதை வெளியே விட்டு விளை யாட்டுக்காட்டி உற்சாகப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும் என்று என் மனது துடித்துக்கொண்டிருக் கும். ஆனால், மாமாவுக்கு அது பறந்துபோய்விட்டால் என்ன செய்வது என்ற பயம்.

அந்தக் குஞ்சை நாங்கள் வெளியில் எடுப்பதே அபூர்வமாகி விட்டது. காலையில் எழுந்ததும் எழாதது மாக அதற்குப் பாலையும், ஒரு வாழைப்பழத் துண்டை யும் ஒரு சிறு தகர மூடியில், கூண்டிற்குள் வைத்து, அதை தின்னச் சொல்லி போராடுவோம். அந்த திமிர் பிடித்த குஞ்சோ பழத்தை மூக்கால் கொத்திக் கொத்தி சிதறிவிட்டு, பாலை அலகால் விசிறி விட்டு கூண்டிற் குள்ளே அமர்க்களம் பண்ணிக்கொண்டிருக்கும். அந்த வேடிக்கையை பார்த்துக்கொண்டிருப்போம், கூடத் தில் கூண்டைச்சுற்றி உட்கார்ந்துகொண்டு.

இது முந்தின விடுமுறையில்.

அடுத்த விடுமுறைக்கு வீட்டுக்கு வந்தேன். வாசற் படியில் காலெடுத்து வைத்து கூடத்திற்குள் நுழைய வுமே என் கண்கள் சுதாவாக கூடத்தின் மத்தியில் தொங்கின கூண்டுப் பக்கம் பார்த்தன. 'கிளிக்குஞ்சு எப்படி இருக்கு?' என்பது முதலில் நான் கேட்ட கேள்வி.

ஒவ்வொரு கடிதத்திலும்கூட, ஹாஸ்டலில் இருந்த அந்த இரண்டு மாதங்களிலும், அதன் வளர்ச்சி யைப்பற்றிக் கேட்டுக்கொண்டே இருந்தேன். இந்தத்

தடவை போனதும், "கிளிக்குஞ்சு பெரிதாக இறக்கை வளர்ந்திருக்கும். வீட்டில் எல்லோரிடமும் பழகிப் போயிருக்கும். அது வெளியே ஓடாது. பூனைக்கு அகப்படாமல் தப்பித்துக்கொள்ளவும் அதற்கு சக்தி ஏற்பட்டிருக்கும். ஆகையால் அதை வெளியே தாராளமாக விட்டுப் பழகலாம்" என்றெல்லாம் நினைத்துக் கொள்வேன்.

சாமான்களை ஒரு ஓரம் வைத்துவிட்டு நேரே கூண்டின் பக்கம் சென்றேன்.

'உன் கிளியைப்பார்' என்று சொல்லிக்கொண்டே மாமா பின்னால் வந்தார். சமயலறையிலிருந்து என் குரல் கேட்டதும் இரண்டு மூன்று சின்னக் குரல்கள் ஓடிவந்தன.

'அண்ணா! உன் கிளி மாதிரி அசடு ஒன்றுமே இருக்காது' என்றது அலமுவின் குரல்.

'ஊமைபோலிருக்கு. பேசவே தெரியவில்லை' என்று சீதா கூடக் கத்தினாள்.

'ஆமாம், அத்தான்! எல்லோரையும் வெடுக் வெடுக்கென்று பிடுங்கத் தான் அதுக்கு தெரிகிறது. வேறே ஒண்ணும் தெரியாதுபோனாலும்' என்றாள் ஸரஸா, அருகில் ஓடிவந்து என் முதுகைத் தொட்டுக் கொண்டு.

'பழகின கிளி அதெல்லாம் ஒன்றும் செய்யாதே' என்றேன் நான்.

'பழகின கிளியா? முசுறு இல்லையோ அது. உன் விரலை கொஞ்சம் கூண்டுக்குள்ளே நீட்டிப் பாரு, தெரியும்' என்றார் மாமா.

கூண்டின் உட்புறத்திலே கண்களைச் செலுத்தினேன். இந்த இரண்டு மாதத்தில் அது எவ்வளவு அழகாக வளர்ந்திருந்தது. முழுப்பச்சை அணிந்த உடல். வால் சிறகு நீளமாக வளர்ந்து அதன் கம்பீரத்தை எடுத்துக்காட்டியது. கூண்டிற்குள்ளேயே கம்பிக்குக் கம்பி மாறி மாறிப் பாய்ந்துகொண்டிருந்தது.

'அலங்காரம் தானப்பா மிச்சம் உன் கிளிக்கு' என்றார் மாமா.

'என் கிளி இல்லை. நீங்கள் வளர்த்த கிளிதான்' என்றேன்.

சொல்லிக்கொண்டே விரலை லேசாக உட்புறம் நீட்டினேன். கூண்டின் மறு மூலையிலிருந்து அலகுகளை விரித்துக்கொண்டு பாய்ந்து அது கவ்வினவேகத்தில், வலியால் கையை வெளியே இழுத்துக் கொண்டேன். என் விரல் நுனியில் ஒரு பொட்டுச் சிகப்பு தோன்றிற்று.

எல்லோரும் சேர்ந்து சிரித்தோம். இவ்வளவு நாள் அங்கிருந்தும் அது இன்னும் பழகவில்லை. காட்டுக் கிளியாகவே இருந்தது. இயற்கை சுபாவம் போக வில்லை. 'நீங்கள் நன்றாக அதைப் பழக்கவில்லை. சதா கூண்டுக்குள்ளேயே அடைத்து வைத்து அதற்கு நம்மோடு ஒருவித 'அன்யபாவத்தை' உண்டாக்கி விட்டீர்கள். அதனால் அது இவ்வளவு வேற்றுமை பாராட்டுகிறது' என்று அவர்கள்மீது குற்றம் சாட்டினேன்.

'இதோ பாரு, எங்களுக்குக் கிளி இப்படித்தான் வளர்க்கத் தெரியும். அதோடு கொஞ்சிக்கொண்டிருப்ப தற்கு அவகாசம் எல்லாம் கிடையாது. நீ வேண்டு மானால் அதைக் கட்டிப் போராடிக்கொண்டிரு. இல்லையானால் வெளியே விரட்டிவிடு' என்றார் மாமா வேகமாக.

முன்பு அந்தக் கிளியை கொண்டு வந்தபோது இருந்த உற்சாகம், அவருக்கு இப்போது இல்லை யென்பதை அவர் வார்த்தைகள் தெளிவாக்கின. நானும் அதை பழக்க எண்ணி, கிட்டே கூண்டை எடுத்து வைத்துக்கொண்டு, இரண்டு மூன்று தரம் கையை அதனிடம் கொண்டுபோய் இறக்கைகளை தடவினேன். ஒவ்வொரு தடவையும் ஒருவித ஆத்தி ரத்துடனும் வெறியுடனும் பாய்ந்து பாய்ந்து கொத்த

வந்தது அந்தக் கிளி. இவ்வளவு நாளாகியும் பழகாத கிளியிடம் எனக்குக்கூட கொஞ்சம் கசப்பேற்பட்டது, நான் சொன்னபடி அதை வளர்க்காத மாமாவிடம் கொஞ்சம் கோபம் இருந்தபோதிலும்.

'ஏன், மாமா, இதை எப்போதாவது திறந்து வெளியே விட்டதுண்டா? என்று கேட்டேன்.

'நாங்கள் திறந்து விட்டதில்லை. சின்னச்சாமி தான் கூண்டை அலம்பும்போதெல்லாம் கையில் பிடித்துக் கொண்டிருப்பான். இந்த தரித்திரத்தின் கிட்ட யார் போகிறது' என்ருர் மாமா.

பாட்டி கூடத்திற்கு வந்தாள். 'அதை எங்கே யாவது வெளியிலே விட்டுத் தொலையுங்களேன். பாபத்தை கட்டிப்பானேன். அது இருந்தும், இல்லாததும் ஒன்றுதான்" என்ருள்.

பழக்கத்துக்கு லாயக்கில்லாத கிளி, கூண்டுக்கு அலங்காரமாக எதற்கு என்று தான் எனக்கும் பட்டது. 'சரி, அப்படியானுல் கொண்டுபோய் விட்டுவிடலாமா' என்றேன்.

எல்லோருக்கும் சர்வ சம்மதம். வீட்டின் பின்புறமுள்ள தென்னந்தோப்புக்கு கூண்டோடு எடுத்துச் சென்ருேம். குழந்தைகளுக்கு மட்டும் அது போவது பிடிக்கவில்லை. கூண்டில் இருந்துகொண்டிருந்தால் போதும் என்ற திருப்தி அவர்களுக்கு. மாமாவுக்கு அது பழகாததிலே அதிருப்தி. எனக்கு, மாமா அதை பழக்கின முறையிலே மனதில் வருத்தம்.

மாமாவும் நானும் கூண்டருகே உட்கார்ந்து கொண்டோம். குழந்தைகள், அது பிடுங்கும் என்ற பயத்தில் சற்று எட்டி நின்று, 'விட்டு விடாதே, அண்ணு, அத்தான்! இருக்கட்டுமே,' என்று கெஞ்சிக் கொண்டிருந்தன. 'பேசாமல் இருக்கேளா இல்லையா' என்று மாமா தன் சுபாவப்படி அதட்டுப் போடவும், வாய்களை மூடிக்கொண்டு பார்வையின்மூலம் கெஞ்சலை வெளிக்காட்டிக் கொண்டிருந்தன.

சரேலென்று கூண்டின் கதவைத் திறந்து விட்டேன். கிளி வெளியே ஜில்லென்று பறந்து போவதை எல்லோரும் கண் கொட்டாமல் எதிர் பார்த்து இருந்தோம். நாங்கள் நினைத்தபடி கிளி அவ்வளவு ஆத்திரம் காட்டவில்லை. ஒரு தரம் இறக்கைகளை படபடவென அடித்துக்கொண்டு மறுபடியும் நிலையாக நடுக்கம்பியில் உட்கார்ந்துகொண்டது. '.'சரி; இன்னும் பயம் தீரவில்லை. வெளியே பறக்கப் பதுங்கி சமயம் பார்க்கிறது. இன்னும் சற்று நேரத்தில் சரியாகிவிடுமென்று' நாங்களும் அசையாமல் விலகி நின்ருேம்.

ஐந்து நிமிஷங்கள் ஆகிவிட்டது. இன்னும் கிளி கம்பியை விட்டு அசைந்தபாடில்லை. அது தன் குண்டு மணிக் கண்களை உருட்டி உருட்டி விழித்து அலகுகளை திருப்பிக்கொண்டிருந்ததே தவிர, பறக்க ஏதுவாக இறக்கை யடிப்பு சப்தமே கிளப்பவில்லை.

அது எங்களை தப்பர்த்தம் செய்துகொண்டு விட்டதால்தான் அது வெளியேறவில்லை என்று தோன்றியது. இன்னும் என்ன செய்துவிடுவோமோ என்று பயந்தது போலும்!

'மாமா, ஒன்று செய்வோம்; அதைப் பிடித்து வெளியே விட்டுவிடுவோம்; அப்புறம் பறந்து போய் விடும். நாம் சுற்றி இருப்பதைக் கண்டு பயப்படுகிறது,' என்றேன்.

கிளி பிராண்டிக் கொத்தாமல் இருப்பதற்காக கையை துண்டால் சுற்றிக்கொண்டு கூண்டுக்குள்ளே கையை விட்டு கிளியை நெருக்கினேன். ஆத்திரத்தில், அதன் உடலை அமுக்கின வேதனையில், கிளி அலகுகளை அகல விரித்துத் துணியைக் கொத்தி கொத்தி கவ்வினது. அவை மட்டும் என் கையில் பட்டிருந்தால் ரத்த வெள்ளம் ஆகி இருக்கும்.

கிளியின் கழுத்தில் விரலைக் கொடுத்து நெருக்கினேன். கிளி அலறிக் கத்தி வெறியுடன் பிடுங்க ஆரம்

பித்தது. துண்டைக் கூட துளைத்துக்கொண்டு என் உடலில் அந்த கவ்வு பதிய ஆரம்பித்தது. பயத்தில் கால்களை இரும்புக் கம்பியில் இறுகப் பற்றிக்கொண்டு வெளியே வர மறுத்தது. நான் விடவில்லை. பலமாக இழுத்து என் கைத்துணியின் இடுக்குகளில் அதைக் கூண்டுக்கு வெளியே எடுத்து விட்டேன். குழந்தைகள் பயத்தில் பின் வாங்கி ஓடின.

'கொஞ்சம் எட்டிப்போய் விட்டுவிடு' என்றார் மாமா.

கூண்டிலிருந்து தள்ளி சுமார் பத்தடி தூரத்தில் கொண்டுபோய் கிளியை கீழே பொத்தென்று போட்டு விட்டு தள்ளிப் போனேன். கிளி இறக்கைகளை படபட வென்று அடித்துக்கொண்டு ஒரு தரம் எகிறித் தவ்வி விழுந்தது. அது உடனே பறந்துபோய் விடவில்லை. குழந்தைகள் அதன்பின் போய் 'உஸ் உஸ்' என்று கத்தி அதை விரட்டின. மறுபடியும் இரண்டு எட்டுக்கள் வைத்து, இறக்கையை படபட வென்று அடித்துக்கொண்டு எகிறி மறுபடியும் கீழே தணிந்தது. பறந்து போகவில்லை.

நானும் அதன் இறக்கையைக் குத்தித் தூண்டி னேன். அதற்கும் அதே ரீதிதான்.

'என்னடா, பறக்க மாட்டேன் என்கிறது. பறக்கத் தெரியவில்லையா' என்றார் மாமா.

'எல்லாம் நீங்கள் பழக்கின வழிதான்' என்றேன்.

'பக்ஷிக்கு பறக்க பழக்க வேண்டுமாக்கும்' என் றார் மாமா.

'ஏன், குழந்தைக்கு நாம் நடக்கச் சொல்லித் தர வில்லையா! என்று சொல்லிக்கொண் டிருக்கும்போதே கிளி திடீரென்று பின்புறம் திரும்பி, கூண்டு இருந்த பக்கம் பார்த்தது. அடுத்த வினாடி மளமள வென்று எட்டு எடுத்து வைத்துக்கொண்டே கூண்டை நோக்கி தத்தினது.

'அடேடே, கூண்டுக்குப் போகிறது' என்று

கத்தினர் மாமா. நான் கூண்டைத் தூக்குவதற்குள் கிளி கூண்டுக்குள் போய்விட்டது. மறுபடி ஒரு இறகடிப்பு சப்தம். மத்திக் கம்பியில் ஏறி உட்கார்ந்து அசையாமல் இருந்தது.

என் தேகம் புல்லரித்துக் கொடுத்தது. வெளியே அதற்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை அது பொருட்படுத்தவில்லை. அதற்குப் பிடிக்கவில்லையா? உள்ளே அது அனுபவித்த கட்டுப்பாட்டை, குஞ்சு முதலே அது அடைத்துக்கிடந்த ஒரு கூண்டுவாசத்தை அது மேலாக கருதினதா? எனக்குப் புரியவில்லை. திகைத்துப்போனேன்.

கூண்டுக் கதவு பின்னும் திறந்துதான் கிடந்தது. கிளி அந்த திறந்த கதவு வழியே வெளி உலகத்தைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தது, அனுபவிக்க அதற்கு இஷ்டம் இல்லாததுபோல். ஏன்? பார்க்கவே பிரியப்படாததுபோல் கண்களை திறந்து திறந்து மூடிக் கொண்டு இருந்தது.

'இன்னொருதரம் வெளியே பிடித்துவிடு' பார்ப்போம், என்றார் மாமா.

துண்டைக் கையில் சுற்றிக்கொண்டு மறுபடியும் அதை வெளியே கிளப்புவதற்குள் எவ்வளவு கஷ்டமாகப் போய்விட்டது. ஆத்திரத்துடன் 'போ தொலைந்து' என்று உறுமிக்கொண்டே கிளியை இன்னும் தள்ளிப்போய் விசிறிவிட்டு கூண்டுக் கதவை மூடப் போனேன். என் பின்னலேயே திரும்பி கிளி கூண்டின் பக்கமாக தத்தி ஓடிவந்தது. பறந்துபோவது என்ற ஒரு இயற்கை நியதியே தனக்கு இருப்பதாக அது கருதினதாக தெரியவில்லை. அதுவும் ஒரு பக்ஷி!

நான் பாய்ந்து கூண்டுக்கதவை மூடிவிட்டு நின்றேன். கிளி கூண்டருகில் அந்த கதவுக்குநேரே வந்து நின்றது. கம்பி அடைப்பைப் பார்த்துவிட்டு மூக்கால் கம்பி இடுக்குகளில் கொத்தி உள்ளே நுழையும் விருப்பத்தை காட்டினது. கம்பியை விலக்கி உள்ளே போக

முடியவில்லை என்று கண்டதும், கூண்டைச் சுற்றி எந்த இடத்தில் வழியிருக்கிறது என்று ஆராய ஆரம்பித்து, சுற்றிச் சுற்றி வந்தது.

கூண்டிற்குள் நுழைய எவ்வளவு ஆத்திரப் பட்டது அது! 'என்னடா, வேடிக்கையாக இருக்கு' என்றார் மாமா. நான் பதில் சொல்லவில்லை. என் மனது அந்தக் கிளியின் ஒவ்வொரு அசைவிலும் திரும்பி இருந்தது. சரேலென்று கூண்டைக் கையில் எடுத்துக் கொண்டு நாலு எட்டுக்கள் நகர்ந்தேன். என் கை பின்னாலேயே அந்தக் கூண்டை தொடர்ந்து தத்தி வந்தது அந்தக் கிளி.

கூண்டைக் கீழே வைத்தேன். மறுபடியும் கிளியும் அதைச்சுற்றி கம்பி இடுக்குகளில் மூக்கைக் கொடுத்து உள்ளேபோக வழி ஆராய ஆரம்பித்தது.

நான் ஸ்தம்பித்துப்போய் நின்றேன். அந்தக் கிளி இனி சுதந்திரத்தை விரும்பவில்லை. திறந்த பெரிய வெளி அதற்கு வேண்டாம். அந்தக் கூண்டு உலகத்திலே அதற்கு தரப்படும் ஆகாரம் போதும். கம்பியிலேயே தூங்குவதில்தான் அதற்கு விருப்பம். வானவெளியிலே சஞ்சரித்து பலவித இரைகளைத் தேடிச் செல்ல அது விரும்பவில்லை. மரக்கிளைகளிலே தூங்க அது விரும்பவில்லை.

ஏன், அப்படி ஒன்று இருப்பதாகவே அதற்குத் தெரியவில்லை. தனக்குப் புறம்பானது வெளி உலகம் என்று இந்த கூண்டு வாசத்திலே அதற்கு நினைப்பு வலுவடைந்து விட்டது. செயற்கையான அந்தக் கூண்டு அதற்கு தனதாகிவிட்டது. இயற்கையான வெளி உலகம் அதற்கு அன்யமாகிவிட்டது. என்ன விபரீத மாறுபாடு, மரமரத்துப்போன உணர்ச்சி இந்த சிறிது காலத்தில்!

என் நினைப்பு உடலை ஒருதரம் நடுக்கி எடுத்தது. எதிரே நின்ற மாமாவைப் பார்த்து ஒரு தரம் விழித்தேன். 'இதுதான் நீங்கள் பழக்கின வழியின் பலன்.

அது கூண்டுக்கிளியாகவே இருக்க விரும்புகிறது" என்று ஆத்திரத்துடன் சொன்னேன்.

இப்போது என்ன செய்யலாம்?

'என்ன செய்வதா? இதுதான்' என்று சொல்லிக் கொண்டே கூண்டின் கதவை விருட்டென்று திறந்து விட்டேன்.

அடுத்த க்ஷணம் கிளி கூண்டிற்குள் தத்தி ஏறி னது. மறுபடி ஒரு சிறகடிப்பு சப்தம். யதாஸ்தா னத்தில் மறுபடியும் ஏறி உட்கார்ந்து கண்களை மூடி மூடித் திறந்தது! அதன் பச்சையான வால் கூண்டுக்கு வெளியே கூர்மையாக நீட்டிக்கொண்டிருந்தது. இருக் கிற இடம்தான் சுகம் அதற்கு.

இன்னும் அந்தக் கிளி வேளா வேளைக்கு நாங்கள் கொடுக்கும் ஆகாரத்தைத் தின்றுகொண்டு கூடத்துக் கொக்கியிலே தொங்கும் கூண்டிலே அலங்காரப் பொருளாக இருந்துவருகிறது.

# மணல் வீடு

நீல உடற்புடவையில் சிகப்புச் சாயம் ஏற்றி இருந்தது போன்ற தோற்றம் காட்டிக்கொண்டு இருந்தது அந்திக்கால வானம். அதன் ஆரஞ்சுநிற அடிவானத்தின் கீழ் ஊதாநிற அலைகள் மதில் மதிலாக எழும்பி, கரைநோக்கி சுழித்துச் சுருட்டி அடித்துக் கொண்டிருந்தன. யுகம் யுகமாக அலுப்பின்றி வித விதமான உருவங்கள் செய்து மண்ணில் ஓட்டிவிடும் சிருஷ்டி தேவனுக்குப் போட்டியாகத் தானும் முடிவற்ற அலைகளைக் கிளப்பி மணலில் மோதவிட்டு கடல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த மாதிரி இருந்தது.

விவரம் புரியாத இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டு ஈரமணலின் எல்லைக் கோடியில் நின்று கொண்டிருந்தாள் குழந்தை. அவியப் போகும் உயிரின் மரண வீறிடுதலைப் போல், அழிவைத் தேடிவரும் அலைகளின் கோஷம் அதன் சின்ன உள்ளத்தைக் கூதல் கொள்ளச்செய்தது. அதன் உச்சநிலையில் அம்மாவின் கைப்பிடிப்பை இன்னும் நெருக்கிக் கொடுத்தாள் குழந்தை ஜெயம்.

சூட்டிகையான குழந்தை ஜெயம். புருபுருப்புக்களை கும்மாளம் போட்டுக் கொண்டிருக்கும் முகம். துடிதுடிப்புத் தாவி ஓடிக்கொண்டிருக்கும் உடலமைப்பு. நல்ல லக்ஷணம். பார்ப்போர் அள்ளி அணைத்திடத் தூண்டும் மோஹன உருவம்.

அவள் இருக்கும் வீட்டில் உள்ள மூன்று தனிக் குடும்பங்களுக்கு அவள் ஒரே குழந்தை. எங்கேயோ சந்து ஒன்றிலே, அதிக ஜனநடமாட்டம் இல்லாத இடத்திலே அவர்கள் வீடு. அக்கம் பக்கத்து வீடுகளில்

கூட அவளுக்கு இசைந்து விளையாடக்கூடிய பருவக் குழந்தைகள் கிடையாது.

தனிமையைத்தான் ஜெயம் அனுபவித்து வந்தாள் தினமும். விளையாட்டிலே அவளுக்கு எதிர்க்கக்ஷி பேச வேறு தொனி கிடையாது. அவளோடு உரண்டை யிட்டு, அடித்துக் கிள்ளி ரகளை செய்ய இடமே ஏற்பட்டதில்லை. விளையாட்டுப் போக்குக்கு ஒருவித தடையும் இல்லாமல் பொழுதுபோகும் அந்த குழந்தைக்கு. எந்த விளையாட்டிலும் தானே எல்லா மாகி விடுவாள்.

பொய்ச்சமையல் விளையாட்டிலே சமைப்பதும் அவள், சாப்பிடுவதும் அவள்! அப்பா அம்மா, விளை யாட்டிலே அவளே அப்பா, அம்மா, படுத்தும் குழந்தை! இப்படி தனிமையில் பழகிப்போன உற்சாகம் பிரத்யேகமாக அமைந்திருந்தது அந்த சின்ன உள்ளத்தில். ஓடிவரும் அலைகளையே கொஞ்ச நேரம் குழந்தை பார்த்துக் கொண்டு நின்ருள்.

அலையலையாக கிளம்பி அவள் கண் எதிரிலேயே உருக்குலைந்து ஜலத்தோடு ஜலமாகிக் கொண்டிருந் தன. புது அலைகளுக்கு இடம் விட்டுக் கொடுப்பது போல்; புதுப்பிறப்புகளுக்கு சாவு வழி விடுவதுபோல.

திடீரென்று குழந்தை அம்மாவின் கைவிரல் இடுக்குகளிலிருந்து தன் கையை சுண்டி இழுத்துக் கொண்டாள். அலையிலிருந்து திரும்பி காலடி ஈர மணலை ஒரு தரம் பார்த்ததும், அவளுக்கு இயற்கை யான தனிமை விளையாட்டிலே ஒரு உற்சாகம் கிளம் பினது. 'அம்மா, நான் வீடு கட்டி விளையாடப் போறேன்,' என்ருள் குழந்தை.

'அம்மாடி, ஈர மணல் உடம்புக்கு ஆகாது, காய்ச்சல் வந்துவிடும்' என்று தாய் சொல்லிக் கொண் டிருக்கும் போதே அவள் கவனம் சுற்றுப்புறத் தோற் றத்திலே திரும்ப ஆரம்பித்தது. விதவிதமான நடை யுடை பாவனைகளுடன் வரும் தன்னொத்த பெண்களை

பார்வையில் மாற்றிக்கொண்டிருந்தாள். அந்த சிரத்தையில், குழந்தை தன் வார்த்தைகளை மீறி மணலைத் தோண்ட ஆரம்பித்து விட்டதைக்கூட அவள் பொருட்படுத்தவில்லை. குழந்தை வீடு கட்டுவதிலே தன் முழு கவனத்தையும் செலுத்தி இருந்தாள்.

உலகங்களை சிருஷ்டிக்கும் பிரும்மா வீடுகளை சிருஷ்டிக்கும் சிற்பி, இவர்களுடைய சிரத்தைக் குறிகள் அந்த குழந்தை முகத்தில் தோன்றின.

அந்த சுவாரஸ்யத்தில், சற்று தூரம் வரையில் நுரை தள்ளிக்கொண்டு வந்து திரும்பும் அலை ஓட்டத்தைக்கூட அவள் பொருட்படுத்தவில்லை. அவள் சிறு கைபலச் சோதனை அளவிற்கு, விரலால் தோண்ட முடியாத கெட்டிப்பை நெருங்கும் வரையில், மணலைத் தோண்டிக் கொண்டே போனாள்.

தாயின் கவனம் அப்போதுதான் குழந்தையிடம் மறுபடியும் திரும்பினது. 'அடீ, சட்டை அழுக்காகப் போகிறது' என்று சொல்லும் போதே கவனம் மீண்டும் மாறிவிட்டது. அம்மா சொன்னதற்காக சட்டையை ஒரு தரம் தூக்கிக் கொடுத்துக் கொண்டாள் குழந்தை.

தோண்டி முடிந்தது. குழந்தை மணலில் உட்கார்ந்து கொண்டாள். தன் சிறுகாலை அந்தப் பள்ளத்திற்குள் நுழைத்துக்கொண்டு மேலே மேலே மண்ணைத்தள்ளி தன் பாதத்தை மூடிவிட்டாள். அந்த மேடு பலமாக இரண்டு பட்டுக் கைகளாலும் தட்டிக் கொடுத்து அடைப்பினாள். மறைந்துபோன அவள் பாதத்துக்கு மேலாக கூடுபோன்ற வளைந்த ஒரு மணல் மேடு உண்டாயிற்று. அதன் வலுவில் நம்பிக்கை இன்னும் வராததுபோல் திரும்பத் திரும்ப அதை 'திம்ஸ்' போட்டாள். மணல் ஒட்டாத இடங்களை சீர்படுத்திக் கொடுத்தாள்.

குழந்தையின் விளையாட்டைப் பார்க்கும் ஆவல் கலந்த சங்கோசத்துடனே என்னமோ, சின்னச் சின்ன

அலைகள் அடிக்கொரு தரம் அவள் கட்டும் வீட்டுக்கு சற்று தூரம் வரை வந்து திரும்பிப் பார்த்துவிட்டு ஓடின. குழந்தை கவனித்தால்தானே! தனிமையில் பண்பட்டுப்போன உள்ளம் அந்தத் தோழர்களை விரும்பவில்லை; வரவேற்கவில்லை.

அதுவரைக்கும் இல்லாத ஒரு ஜாக்ரதை அப்போது குழந்தைக்கு வந்துவிட்டது. வீடமைக்க காலை வெளியில் எடுத்தாக வேண்டுமே! மெதுவாக தன் உடம்பை ஏற்றபடி அசைத்துக் கொடுத்து மணல் மேட்டுக்கு அதிர்ச்சி ஏற்படாமல், கண்களைக் கூராக்கி அதன் பலஹீன இடங்களை மிருதுவாகத் தொட்டு ஸ்திரப்படுத்திக் கொண்டே காலை உஷாராக வெளியே இழுத்துக் கொண்டிருந்தாள்.

தான் கட்டின வீடு சரிந்துவிடக்கூடாதென்று அதன் மனது எவ்வளவு துடியாகத் துடித்தது! பார்க்கப் போனால், க்ஷணத்தில் அழியக் கூடிய — சில நிமிஷங்களில் அம்மாவுடன் வீடு திரும்பும்போது கலைத் தெரிந்தோ, அனுதரவாகவோ விடப்போகிற — அந்த மணல் குவியல் மீதுதான் என்ன சிரத்தை அதற்கு! குழந்தையைச் சொல்வானேன்? மனிதனே வயதான குழந்தை தானே!

காலை வெளியே எடுக்குமுன்புதான் அந்த வீட்டுக்கு எத்தனை கண்டங்கள்! மண் கட்டிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக உதிரும்போது எவ்வளவு துடிசாக அவள் கை பாய்ந்து உருவை பூரணமாக்கும்?

குழந்தை காலை கிட்டத்தட்ட வெளியே இழுத்து விட்டாள். விரல் நுனிகள்தான் பாக்கி. வீட்டின் முதுகுப் புறத்தின் மத்தியில் லேசான ஒரு கீரல், கம்பி போல் முதலில் உண்டாயிற்று. குழந்தை, முதல் பார்வை பார்க்கும்போதே அதிலிருந்து படீர் படீரென கீரல்கள் வெடித்துக் கிளைவிட்டன. அடுத்த விநாடி முதுகு ஒடிந்து போய், மணல் சிதறி மூடின ஒரு மணல் குவியல்தான் இருந்தது.

'தூ, சனியன்' என்று ஏமாற்றம், கோபம் இரண்டையும் தொனியில் காட்டிக்கொண்டு, குழந்தை மறுபடியும் மணலைத் தோண்டி காலை வைத்து அடையப்புவதுமாக ஈடுபட்டிருந்தாள், முதல் தோல்வியை பொருட்படுத்தாமல். திருப்தி அளவு ஏற்படும் வரையில், வெற்றியின் எல்லையைக் காணும் வரையில், சித்திரத்தை அழித்து அழித்து சரிப்படுத்தும் சைத்ரீகனைப் போல் தோன்றினாள் குழந்தை. எத்தனை தரம் இதற்குள் அவள் கட்டும் வீடுகள் இடிந்துவிட்டன. மனிதன் கட்டும் மனக்கோட்டைகள் இடிவது போல்! குழந்தை மனதில் அயர்ச்சி தோன்றினால் தானே!

கடைசித் தரம். ஜெயம் ஒருமட்டுக்கு கால்களை வெளியே இழுத்து விட்டாள். மேலே ஒரு கூடாரம் போல், திமிங்கிலத்தின் முதுகுபோல மூடிக்கொண்டு உள்ளே சுரங்க அறையை அடக்கிக்கொண்டு அமைந்து விட்டது அவள் வீடு. ஒரு வெற்றி மகிழ்ச்சியுடன் 'அம்மா, கட்டி விட்டேன்,' என்று கைதட்டிக் குதித்தாள் குழந்தை.

அப்போதுதான் அவளருகே ஒரு ஓசை, உஸ் சப்தம் கேட்டது. கண்களை உயர்த்தி எதிரே பார்த்தாள். படமெடுத்த வெள்ளை நாகம் சீறி வருவது போல் நுரை வீசின பெரிய அலை ஒன்று அவளுக்கு சில அடிகளுக்கு முன் மணலில் மோதியடித்து விட்டு, தலை சாய்ந்து பெட்டிப்பாம்பாக வேகம் அடங்கித் திரும்பிக்கொண்டிருந்தது.

குழந்தையின் வாயிலிருந்து தன்னை அறியாமல் திடீரென்று வார்த்தை கிளம்பியது. 'என் வீட்டுக் கிட்ட வந்தியோ, பார்த்துக்கோ! அப்புறம்' என்று உதடு சுருங்க, கண்கள் விரிய, விரலை மடக்கிக் காட்டி அலையை எச்சரித்தாள் குழந்தை.

அவள் எச்சரிக்கை மீது சீறி விழுவதுபோல் அதை யடுத்து இன்னொரு அலை கொஞ்சம் வேகமாக

விசும்பிப் பாய்ந்து இன்னும் முன்னுக்கு வந்தது. தன் இடத்தில் ஒரு மனுஷ ஜந்து ஆக்ரமித்து வெற்றி அடைவதா என்ற ஆத்திரம் காட்டினது போல் இருந்தது அது. யந்திர சாதனங்களைக் கொண்டு இயற்கையை அடக்கி ஆள விரும்புகிறுன் மனிதன். இயற்கையோ தனக்குத் தடை போட்ட அந்த செயற்கையின் மீது சீறி விழுந்து உக்ரமாக அழித்துச் செல்கிறது.

அலையடுத்து அலை வீசி வந்து கொண்டிருந்தது. குழந்தையின் மனத்தில் சிறிதும் அவநம்பிக்கை தோன்றவில்லை. தனக்கு இடைஞ்சல் செய்ய அவ்வளவு தைரியம் அதற்கு இருக்காது என்று நினைத்துக் கொண்டிருந்தாள். அதன் இடத்தில் தான் ஆக்ரமித்துக் கொண்ட நினைவு அவளுக்குத் தோன்றவில்லை. ஆனல் முதலில் அந்த வீட்டை செப்பனிட்டு வாசலைப் பெரிதாக்கி வழியை சரிப்படுத்திக் கொண்டிருந்த சிரத்தை மிகுதியில், ஆரம்பத்தில் ஒரோர் சமயம் அலையை பார்த்துக் கொண்டிருந்தவள் பின்பு கவனத்தை அதனின்று திருப்பி விட்டாள்.

'ஜெயம், பெரிசு பெரிசா அலை வருது. உன் வீட்டை பிடுங்கிண்டு போகப்போகிறது போ' என்று அம்மாவின் எச்சரிக்கை அவள் காதுக்கருகில் விழுந்தது.

'வருமோ, வந்தால் தெரியாது' என்று மிரட்டிப் பதில் கொடுத்தாள் பச்சைக் குழந்தை. அம்மாவின் சிரிப்பு. 'என்ன செய்வாய்'?

'பாரேன்.'

'நானும் பார்க்கிறேன்' என்று சொல்வதுபோல் எகிறி வந்தது இன்னொரு அலை.

குழந்தையின் சிரத்தை இன்னும் அதிகமானது.

அலைகளின் ஆரவாரத்தைக் கண்டு 'வீட்டை தொட்டியோ கொன்னுடுவேன்,' என்று மறுபடியும் வீட்டில் எதையோ பழுதுபார்த்துக் கொண்டே

அலையை மிரட்டினாள் குழந்தை. அதற்கு பயம் காட்டினது போல் அந்த அலையும் பின்வாங்கிச் சென்றது.

குழந்தையின் மனதில் தெம்பு பிறந்தது. தன்னைக் கண்டு அலை பயப்படுவதாக அவளுக்கு நிச்சயம். அதன் பின் எழுந்த அலைகளெல்லாம் சற்று எட்டியே பின் வாங்கி விட்டன. பயத்திலோ, பதுங்கியோ?

அலை நினைவு மனதில் சற்று மங்கவும் வீட்டை அழகுபடுத்துவதில் ஈடுபட்டாள் குழந்தை. 'அம்மா, வீட்டைப் பாரேன். நன்ரு இருக்கா அம்மா,' என்று வேறெதிலோ லயித்து இருந்த தாயின் முந்தானையைப் பிடித்திழுத்து ஜெயம் கேட்டாள்.

அம்மா பார்த்தாள். வாய் சும்மா இருக்கவில்லை. ஐய, உன் வீட்டுக்கு ஜன்னல் ஒன்றும் கிடையாது, பூ,' என்று கேலி செய்துகொண்டே பார்வையை திருப்பித் தன் பழைய லயிப்பை தொடர்ந்தாள்.

குழந்தை மனதில் அந்தக் குறை சுரீரிட்டது. 'மறந்தே போச்சும்மா, என்று மண்டிபோட்டிருந்தவள் எழுந்து நின்று சுற்றிப் பார்த்தாள், எதையோ தேடுவதுபோல். கண்களில் திருப்தி ஏற்படவில்லை.

நேர் எதிரே ஒருதரம் ஊடுருவிப் பார்த்தாள். ஒரு பிர்மாண்டமான அலை ஒன்று தொலையிலே உருண்டு வருவதை அவள் சரியாக மதிப்பிடவில்லை. அம்மா பக்கம் திரும்பினாள். 'அம்மா இதை பார்த்திண்டு இரு. இதோ வந்துட்டேன்' என்று கொண்டே மணல் மேட்டில் ஏறி இரண்டு எட்டுக்கள் வைத்து விட்டாள். கீழே தெரிந்தது ஒரு குச்சி. ஆவலுடன் அதைக் குனிந்து எடுக்கப் போனாள்.

'ஜெயம், ஜெயம், ஓடிவா சீக்கிரம்' என்று அழுத்திக் கத்தினாள் அம்மா.

குச்சியை கையில் எடுத்துக் கொண்டே குழந்தை குனிந்தவாறே அம்மா பக்கம் திரும்பினாள். ஒரு பிர்மாண்டமான அலை அம்மாவையும், அவள் வீட்டையும் தாண்டிக் கொண்டு அவள் காலடிக்கு.

வந்து கொண்டிருந்தது. அவள் கால்களையும் நனைந்து விட்டது. குழந்தை திடுக்கிட்டு அம்மா பக்கம் ஓடினாள்

அவளுக்கு முன்னாலேயே தன் பசியைத் தணித்துக்கொண்டு, பழியையும் தீர்த்துக்கொண்டு ஜலத்தில் கரைந்து போய்விட்டது அந்த அலை!

'ஜெயம், உன் வீட்டைப் பாரு!'

ஜெயத்தின் முகத்தில் ஒரு வெறிப் பார்வை. 'எங்கேம்மா என் வீடு?'

அம்மாவின் முகத்தில் ஒரு சிரிப்பு, ஏளனம்! 'அதோ போகுதே! அந்த அலையைக் கேளு.'

குழந்தை ஜெயம் மறுபடியும் கண்களை அம்மா காலடியில் செலுத்தினாள். அவள் வீடு இருந்த இடத்தில் ஒரே மணல் பரப்பாக இருந்தது. அது சதம் என்று என்று எண்ணி வீட்டுக்கு ஜன்னலாக, ஓட்டையிட, குச்சி தேடப் போயிருந்தாள் குழந்தை! வீடே போய் விட்டது.

மேலும் மேலும் சீறிவரும் அலைக்கூட்டத்தை வெறித்துப் பார்த்தாள் குழந்தை. அலைகளின் பொங்குதலுக்கு மேலெழுந்த கோபம் பொங்கிவந்தது அதன் ஹிருதயத்தில்.

இன்னொரு பிர்மாண்ட அலை அவளை நோக்கி அலறிப் புடைத்து ஓடிவந்தது அப்போது. அவள் காலடியைக் கவ்வப் போகிறது. விறுட்டென சென்று குழந்தை கீழே குனிந்து ஒரு பிடி மணலை வாரினாள். உதடுகளை பல் கடிக்க, 'தூ! சனியன்! நாசமாப் போக' என்று வார்த்தையோடேயே சேர்த்து கைமணலை ஓங்கி விசிறி அடித்தாள் அலையின் முகத்தில்.

ஒரு வேதனை ஓசையை கிளப்பிக் கொண்டு, குழந்தையின் பார்வையிலிருந்து ஓடி மறைந்தது அந்த அலை.

# ஒரு பழம்

ஒரு நாளா, இரண்டு நாட்களா, இந்த ஆறு மாதங்களாக காமாக்ஷி படுத்த படுக்கையாக இருக்கிருள். அந்த அல்பாயுசு பிறந்து நாற்பது நாளில் வயிற்றெறிச்சலைக் கொட்டிக்கொண்டு போனதே, அது பிறந்ததிலிருந்து பிடித்தது இந்த வியாதி. ஆரம்பத்திலே அவ்வளவு பெரிசாகத் தோன்றவில்லை. அவரவர்கள் வழக்கம் போலே, தங்களுக்குத் தெரிந்த மருந்தைக் கொடுத்தார்கள். வியாதி அந்தமட்டோடு குணம் ஆகிவிடும் என்றுதான் நினைத்தார்கள். இப்படி பிரமாதமாக வியாதி அதிகரித்து, ஊரைவிட்டு வந்து, புது ஊரிலே ஒண்டிக் குடி இருந்துகொண்டு, ஒரு பெரிய இங்கிலீஷ் டாக்டர் வந்து வைத்தியம் பார்த்துக் கொண்டு, கைப்பணத்தை சிலவழித்துக் கொண்டு இப்படி எல்லாம் நடக்கப்போகிறதென்று அப்பொழுது ஒருவரும் நினைக்கவில்லை.

உடம்பு சரகாக வற்றிப்போயிருக்கிறது. கண் இருக்கிற இடம் கண்டுபிடிக்க முடியவில்லை. தேகமெல்லாம் வெளுத்துப்போய் இருக்கிறது. உடம்பை அசைக்கத் திருப்ப முடியவில்லை. திரும்பி கொஞ்சம் புரளும் போது எலும்புகள் உறுத்தி, வலிக்கிற வலி ஈசனுக்குத் தான் தெரியும்.

இராப்பகலாக தூக்கமே கிடையாது. வேதனை ஒரு கணமாவது அவளை விட்டுப் பிரிந்தால் தானே. ஏதோ சிறிது நாழிக்கு கண்ணை மூடிக்கொண்டு படுத்திருந்தாள். தூங்கிறாற்போலே தெரிந்தது. ஆனல் இதெல்லாம் தூக்கத்துடனு சேர்த்துக் கொள்வது?

அம்மா என்னதான் பண்ணுவாள்? அலுப்புச் சலுப்பு இல்லாமல், இரவு பகல் பாராமல் காமாக்ஷி

பிழைத்தால்போதும் என்ற ஒரே நினைப்பில், சதா அவள் தலை மாட்டிலேயே உட்கார்ந்து விசிறிக் கொண்டிருக்கிருள். காமாக்ஷி லேசாக குறட்டை விட்டாள்போலிருந்தது. ஓசைப்படாமல் விசிறியை பக்கத்தில் வைத்துவிட்டு, கொஞ்ச நேரமாவது அலுப் பாறிக் கொள்ளலாம் என்று எழுந்து வாசல்பக்கம் சென்ருள்.

அவள் போய் உட்கார்ந்து பத்து நிமிஷங்கள்கூட ஆகி இராது. திடீரென்று காமாக்ஷி விழித்துக்கொண்டு விட்டாள். வாசலில் பலத்த குரலில் ஒருவன் கூவிக் கொண்டு ஏதோ விற்பனை செய்துகொண்டுபோனது அவள் காதுகளில் தாக்கியதிஞலேயே, அரைகுறை தூக்கத்தில் இருந்தவள் விழித்துக்கொண்டாள்.

அம்மாள் இருப்பாளோ என்று அருகில் திரும்பி பார்த்தாள். அம்மா இல்லை. 'அம்மா, அம்மா,' என்று ஹீனமான குரலில் கூவியழைத்தாள்.

திண்ணையில் உட்கார்ந்துகொண்டு எதையோ பார்த்துக்கொண்டிருந்தாலும், வீட்டு உட்புறமாகவே கவனமாக இருந்த அம்மாவின் காதுகளில் விழுந்தது. எழுந்திருந்து உள்ளே ஓடிவந்தாள்.

'அம்மா, வாசலில் என்ன சத்தம்! ஏதோ கத்திக் கொண்டு போனுனே, என்ன அது, என்று கேட்டாள்.

'அம்மா திகைத்துப்போய் விட்டாள். 'ஒண்ணு மில்லையே அம்மா, மண்ணெண்ணெய்க்காரன் வண்டி இழுத்துக்கொண்டு போனுன்,' என்று மறைத்துக் கூறிஞள்.

'இல்லை அம்மா, அதோடு வேறே சத்தமும் கேட்டது. 'நாவப்பழம்' என்று கூவிக்கொண்டு போனதுபோல இருந்தது' என்ருள் காமாக்ஷி விடாமல்.

" இல்லையே, நான் அங்கேயே தானே உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்படி ஒரு சத்தமும் கேட்க வில்லையே. உனக்கு பிரமை. கூப்பிட்டது போலவே

கேட்டிருக்கும்." இதைச் சொல்லும்பொழுது உண்மையை மறக்க அம்மா என்ன பாடுபடுகிருள் என்பதை காமாக்ஷி குறிப்பாக அறிந்து கொண்டாள்.

அதே சமயம், அம்மாவின் வார்த்தைகளை பொய்ப்படுத்துவது போல், திரும்பவும் 'நவாப்பழம், நவாப்பழம்' என்று பலக்கக் கூவினன் நாவப்பழக்காரன். இருவர் காதிலும் அது பலமாக தாக்கியது. இனி மறைக்க முடியுமா? அம்மா திடுக்கிட்டு காமாக்ஷி முகத்தைப் பார்த்தாள். தன் கக்ஷிஜெயித்து விட்டதென்ற மகிழ்ச்சியோடு காமாக்ஷி அம்மாவைப் பார்த்தாள்.

'பார்த்தாயா அம்மா, நான் தான் சொன்னேனே,' என்ருள் காமாக்ஷி.

அம்மா சமாளித்துக்கொண்டு 'நான் எதிராளாத்து பாட்டியோடே பேசிக் கொண்டிருந்தேன். என் காதிலே விழவில்லை அப்பொழுது; அவன் பாட்டுக்கு கத்திவிட்டுப் போகிருன். யார் வாங்க காத்துக்கொண்டிருக்கிருர்கள்" என்ருள்.

'அம்மா!'

காமாக்ஷி கெஞ்சுதலாக அம்மா முகத்தைப் பார்த்தாள். அவள் பார்வை பரிதாபமாக இருந்தது. வறண்டு போயிருந்த நாக்கை வெளியில் சுழற்றி உள்ளிழுத்துக்கொண்டாள். அம்மாவுக்கு சட்டென்று புரிந்து விட்டது.

'அம்மா, அதெல்லாம் கேட்காதே கண்ணு. டாக்டர் ஒன்றும் தின்கக் கூடாதென்று சொல்லியிருக்கிருர். எல்லாம் பிழைத்துக் கிடந்தால் கூடை கூடையாக நாளைக்கு தின்கலாம். இப்பொழுது ஒன்றும் கேட்காதே அம்மா, உடம்புக்கு.........'

மறுபடியும் பலக்க வாசலில் 'நவாப்பழம்' என்று சப்தம் கேட்டது. 'சனியன் பிடித்தவன் சீக்கிரம் இந்தத் தெருவைவிட்டுத் தொலையமாட்டேன் என்கிருன்' என்று அவனை வைய ஆரம்பித்து விட்டாள் அம்மா.

காமாக்ஷி திரும்பவும், ' அம்மா ஒண்ணே, ஒண்ணு. அதற்கு மேலே வேண்டாம். நாக்கெல்லாம் வறண்டு போயிருக்கு. ஒண்ணே...

' காமாக்ஷி ! இந்தா, வேண்டாம்...கேட்காதே உடம்புக்கு நல்லது இல்லை என்றால் கேளு. பிடிவாதம் பண்ணாதே. நீ என்ன சின்ன குழந்தையா ' என்று அம்மா அன்பாக கண்டித்துக் கூறினாள்.

' நாக்கெல்லாம் வறண்டுபோயிருக்கு ' என்று காமாக்ஷி கூறியது அவள் கண்களில் கண்ணீரை பெருக்கியது. ஆறு மாதமாக ஒரு நல்ல சாமான், ஒரு ருசியான பதார்த்தம் குழந்தை கண்டிருக்குமா ? ' அட, தெய்வமே, இப்படி சோதனைக்குள் வைத்துவிட்டாயே என்னை ' என்று வாய்விட்டுச் சொல்லி அங்கலாய்த்துக் கொண்டாள்.

திரும்பவும் அதே சமயம் வாசலில் நாவப்பழக் காரன் குரல் கேட்டது. அம்மா முகம் அதை கேட்கும் போதெல்லாம் வெருட்சி அடைந்தது. முகத்தில் என்ன பீதி !

' அம்மா, இன்னும் அவன் அந்த தெருவுக்குப் போகவில்லை. ஒரே ஒரு பழம்...சாப்பிட்டால் ஒன்றும் பண்ணாது அம்மா ! டாக்டருக்குத் தெரியாமல், ' என்று மீண்டும் பரிதாபமான குரலில் கெஞ்சிக் குழறினாள்.

இதற்குப் பதில் கூற அம்மாவுக்கு தைர்யம் வர வில்லை. கூறவேண்டியதெல்லாம் கூறிவிட்டாள். குழந்தையோ கேட்கமாட்டேன் என்கிறாள். என்ன செய்வாள் ? இருதலைக்கொள்ளி எறும்புபோல் துடிக்கி றாள். காமாக்ஷி கெஞ்சிய மாதிரி அவள் உறுதியைத் தளர்த்தியது. பழம் வாங்கிக் கொடுப்பதா, வேண் டாமா ? கொடுத்தால் – உடம்புக்கு ஏதாவது செய்து விட்டால் ? கொடுக்க வேண்டாமென்றால் – ஐயோ குழந்தையின் முகத்தைப் பார்க்கமுடியவில்லையே ! தவித்தாள் ஒரு வழியும் தீர்மானிக்க முடியாமல்.

அதே சமயம் மறுபடியும் நாவப்பழக்காரன் குரல் தூரத்தில் கேட்டது.

அம்மா !

அம்மாவின் மனம் நிலைகொள்ளவில்லை. ஐயோ குழந்தை ஒரு பழம்தானே கேட்கிருள் ! வாங்கிக் கொடுத்தாலென்ன ? என்ன பண்ணப்போகிறது, குழந்தை சொல்றதுபோலே. டாக்டர் இதையெல்லாம் கண்டுகொண்டா இருக்கிருர் ? அவர் நித்தியந்தான் இப்படி சொல்லிக்கொண்டிருக்கிருர். வேலை என்ன ? குழந்தை ஆறுமாதமாக ஒரு பதார்த்தம் ருசி கண்டிருக்குமா ? நாக்குச் செத்துக் கிடக்கிறது. இல்லாவிட்டால் கேட்பாளா ? இப்படியெல்லாம் மனதுக்குள்ளே கேள்விப்போட்டு பதில் கூறிக் கொள்கிருள்.

மறுபடியும் நாவப்பழக்காரன் குரல் !

' அம்மா !

அம்மா மனம் பூரணமாக கரைந்துபோய்விட்டது. விறுட்டென்று எழுந்திருந்தாள். ' இருடி அம்மா, தெய்வம் இருக்கு ; இதிலெல்லாமா வந்துவிடப் போகிறது பிரமாதம், அவர் பார்த்துக் கொள்ளுகிருர் ' என்று சொல்லிக்கொண்டே வாசல் பக்கம் போனுள்.

காமாக்ஷியின் வெளுத்த முகத்திலும் ஒரு பிரகாசம்; சுருங்கிய உதடுகளிலும் ஒரு லேசான புன்னகை கிளம்பியது. நாக்கை வெளியே இழுத்து நொப்புக் கொட்டிக் கொண்டாள்.

சில நிமிஷங்களில் அம்மா கையில் சிராங்காய் நவாப்பழம் வாங்கி, புடவைத் தலைப்பில் மறைத்துக் கொண்டு கூடத்திற்கு திரும்பி வந்தாள். வரும்போது மாடிப் பக்கம் சில நிமிஷங்கள், ஒரு திருடனைப்போல் ஆராய்ந்துகொண்டு, தயங்கி நின்றுவிட்டு நடந்தாள்.

' ராமு தூங்குகிருனு அம்மா, ' என்று கேட்டாள் காமாக்ஷி.

' ஸ்ஸ்...' என்று அம்மா அவள் வாயை அடைத்து, சமிக்ஞை செய்துகொண்டே மாடிக் கீழ் கதவை

லேசாக ஒருக்களித்து விட்டு, காமாக்ஷி படுத்திருந்த இடத்திற்கு வந்தாள். இரண்டே இரண்டு பழங்களை மட்டும் எடுத்து காமாக்ஷி கையில் கொடுத்தாள். காமாக்ஷி முகத்தில் சந்தோஷம் பரவியது காணாததை கண்டது போல். அதில் ஒன்றை எடுத்து வாயில் போட்டு, சுவைத்துக் கொண்டிருந்தாள். அம்மா எச்சிற்கொட்டையை வாங்கி எறிய அருகில் நின்று-கொண்டிருந்தாள்.

மாடிப்படியில் தடதடவென்று சப்தம் கேட்டது. அம்மாவும், காமாக்ஷியும் திடுக்கிட்டு அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள். ராமு தூக்கம் கலைந்து கீழே இறங்கி வந்துகொண்டிருந்தான். அவனுக்குத்தான் தெரியாமல் இருக்கவேண்டுமென அவர்கள் எதிர்பார்த்தார்கள். அவனே நேரில் இறங்கி வந்துவிட்டான்.

படி இறங்கும்போதே காமாக்ஷி எதையோ சுவைத்துக்கொண்டிருப்பதைப் பார்த்து விட்டான் ராமு. அவர்கள் அதை சட்டென்று மறைக்க முடியவில்லை. மனதிற்குள் கலக்கம் ஏற்பட்ட போதிலும், வெளிக்கு காட்டாமலிருந்து விட்டார்கள். அதைப் பார்க்கவும், ராமு கடைசிப்படியில் நின்றுகொண்டு, ‘அம்மா, என்னது அது - காமாக்ஷி என்ன தின்கிறாள் ?’ என்று தோரணையாகக் கேட்டான்.

‘ஒன்றுமில்லேடா !’ என்று ஒதுக்கிக் கூறினாள் அம்மா.

ராமுவுக்கு கோபம் வந்துவிட்டது. ‘என்னது, என்று கேட்டால் சொல்லுகிறது தானே. மறைப்பானேன்’ என்று கோபமாக கேட்டான்.

இதற்குள் காமாக்ஷி கொட்டையைத் துப்பினாள்.

‘நவாப்பழமா !’ என்று அதிசயித்து கூவினான் ராமு.

‘ஆமாண்டா, குழந்தை, நாக்கு செத்துக் கிடக்கிறது. வாயைத்திறந்து கேட்டுவிட்டாள். ஒரு பழம் வாங்கிக்கொடுத்தேன். ஒரு பழம் என்ன பண்ணப்

போகிறது' என்று அவனுக்கு சமாதானம் கூறலானுள் அம்மா.

'அம்மா, நீ செய்வது ஒன்றும் எனக்குப் பிடிக்க வில்லை. டாக்டர் என்ன சொல்லியிருக்கிருர் தெரியுமா?

'டாக்டர் நித்தியம் சொல்லிக்கொண்டு தான் இருக்கிருர். நாமென்ன நித்யமும் கொடுத்துக் கொண்டா இருக்கிறேம். ஒரு நாள் கொடுத்தால் என்ன? என்று அலக்ஷியமாக அம்மா கூறினுள், வியாதியின் கடுமையையும் கவனியாமல். காமாக்ஷியின் பரிதாபத் தோற்றத்தின் முன் அவளுக்கு எல்லாம் சாதாரணமாகப் போய்விட்டது.

ராமுவுக்கு கோபம் அதிகரித்தது. ஆறுமாதமாக டாக்டர் கொடுத்துவரும் மருந்தென்ன? அதில் அவர் காட்டும் ஜாக்கிரதையும், உணவு விஷயத்தில் கூறும் எச்சரிக்கையும் என்ன? அதையெல்லாம் அலக்ஷியம் செய்துவிட்டு, தடுக்கப்பட்டிருந்த பொருள்களை யெல்லாம் உயிரோடு போராடிக் கொண்டிருப்ப வளுக்கு கொடுப்பதென்ருல்!

அவர்கள் மீது சீறி விழுந்தான். 'அம்மா! இப்படி யெல்லாம் நீ பண்ணிக்கொண்டிருந்தாயானுல் வியாதி ஒருநாளும் தீரப் போவதில்லை. இன்னமும் பெரிதாக்கி விடத் தான் இந்த வழி செய்கிருய். டாக்டர் கூறினுல் அந்தப்படியே நடக்க வேண்டாமா? இதென்ன அக்ரமம்,' என்று சப்தம் போட்டான்.

காமாக்ஷி அவனோடு வாதிக்கக்கூடிய நிலைமையில் இல்லை. ராமு அதட்டிப்பேசியது அம்மாவுக்கு கோபத்தை உண்டாக்கியது. 'சரிதாண்டா, ரொம்ப கண்டுவிட்டாய். எங்களுக்கெல்லாம் முந்திப் பிறந் தவன் நீ. வியாதிகளைப்பற்றி எங்களுக்கு தெரியாதது உனக்கு ரொம்ப தெரிந்துவிட்டது! ஒரு பழம் ஒன்றும் பண்ணிவிடாது. எல்லாம் எனக்குத் தெரியும். டாக்டர் அப்படித்தான் சொல்வார். என்னை மடக்கி அடிக் காதே. உன் ஜோலியைப் பார்த்துக்கொண்டு போ.

நீங்கள் அவளை பட்டினி போட்டே கொன்று விடுவீர்கள்' என்று கண்டித்து அவன் வாயை அடக்கிக் கூறினாள்.

காமாக்ஷியின் நிலைமை அவளை கவர்ந்து விட்டதில், ஒரு தாயின் மனப்பான்மையில் அவள் இருந்த நிலைமையில், அவளுக்கு, ராமு கண்டித்துக்கூறியது சரியா, தப்பிதமா, தான் செய்த காரியம் நியாயமானதா; கோளாறில் கொண்டு போய் விடுமா என்று கூட ஆராயத் தோன்றவில்லை. அவனை எதிர்த்துக் கண்டித்து அடக்கினாள்.

ராமுவின் கோபம் அதிகரித்தது. 'உங்களுக்கு எவ்வளவு சொன்னாலும் படப்போவதில்லை. என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள் உங்கள் இஷ்டப்படி. நான் இதில் இனி தலையிடப்போவதில்லை. டாக்டர் பாடு, உங்கள் பாடு' என்று படபடத்துச் சொல்லி விட்டு, கீழிறங்கி வெளியே போய் விட்டான்.

குழந்தைப் பையன் பேசுவதை வீட்டில் யார் பொருட்படுத்துவார்கள்? அம்மாவும், காமாக்ஷியும் பேசாமல் இருந்து விட்டார்கள்.

அன்றிரவு வெளியே போய்விட்டு ராமு வீடு திரும்பியபோது மணி எட்டு அடிக்கிற சமயமாக இருந்தது. வாசற்படியைக் கடந்து கூடத்திற்குள் காலெடுத்து வைக்கவும், அங்கே அவன் கண்ட காட்சி! திடுக்கிட்டு காமாக்ஷியருகே ஓடினான். அவனுடைய சந்தேகம் பலப்பட்டு விட்டது.

காமாக்ஷி ஸ்மரணை இல்லாமல் புலம்பிக்கொண்டு படுத்திருந்தாள். பார்க்க பயமாக இருந்தது. டாக்டர் குனிந்து அருகில் உட்கார்ந்துகொண்டு கை நாடியையும் இருதயத் துடிப்பையும் பார்த்துக் கொண்டிருந்தார். அம்மா பதட்டத்தோடு 'காமாக்ஷி, காமாக்ஷி' என்று வாய் ஓயாமல் கூவிக் கொண்டிருந்தாள். காமாக்ஷி ஸ்மரணை வந்து பேசுபவளாகத் தோன்றவில்லை. நிறுத்தாமல் புலம்பிக்கொண்டே இருந்தாள்.

ராமுவைப் பார்த்ததும் அம்மா, 'ஏண்டா ராமு ! எங்கேடா அப்பா போய் விட்டாய் ? டாக்டரை கூப்பிடுவதற்கு ஆள் ஒருத்தரையுமே காணேமே. இந்த ஒரு நாழியாக அவள் படுகிற பாடு' என்று பதறினள். குரலில் அழுகை கலந்து பேசியது.

'வெளியே போயிருந்தேன்' என்று சொல்லி விட்டு, காமாக்ஷி அருகில் உட்கார்ந்து சைத்யோபசாரம் செய்யத் தொடங்கினன் ராமு.

டாக்டர் கையைப் பார்த்து விட்டு, 'வேறென்று மில்லை ; திடீரென்று ரத்த வேகம் அதிகரித்திருக்கிறது. அவ்வளவு தான். இதோ மயக்கம் தெளிந்து பேசுவாள்' என்றுர்.

சில விநாடிகள் எல்லோரும் காமாக்ஷியையே பார்த்துக்கொண்டிருந்தனர். கொஞ்ச நேரம் போகவும், காமாக்ஷியும் லேசாக கண் விழித்து சுற்றுமுற்றும் மிரள மிரள விழித்தாள். அவளுக்கு வேதனை பொறுக்க முடியவில்லை. புரண்டு புரண்டு படுக்கலானள். அனத்தத்தொடங்கினள்.

டாக்டர் சில விநாடி பேசாமல் உட்கார்ந்திருந்தார். ராமு அவரைப் பார்த்து, 'என்ன டாக்டர் சார், யோசனை செய்கிறீர்கள்!' என்று கேட்டான். அவர் பதிலை எல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்து நின்றனர்.

'நாலு நாட்களாக ரத்தவேகம் குறைந்து, ஜ்வரமும் தணிந்துகொண்டே வந்திருக்கிறது. இப்பொழுது திடீரென்று அதிகரித்து விட்டதற்கு ஏதாவது காரணம் இருக்கவேண்டும்' என்றுர் டாக்டர்.

ராமு திடுக்கிட்டு, 'என்ன காரணம்' என்று ஆத்திரத்தோடு வினவினன்.

டாக்டர் அம்மாவின் முகத்தைப் பார்த்துக் கொண்டே, 'குளிர்ச்சியான சாமான் ஏதோ அவள்

இன்றைக்கு சாப்பிட்டிருக்கிருள். இல்லாவிட்டால் இப்படி திடீரென ஜ்வரம் உயராது' என்ருர்.

அம்மாவிற்கு உள்ளூர திடுக்கிட்டது. ஆனால் முகத்தில் கலவரத்தைக் காட்டாமல் சமாளித்துக் கொண்டாள். அம்மாவைப் போலவே திடுக்கிட்ட ராமுவும் தன் முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டான். ஏன், டாக்டர் சந்தேகப்பட்டதில் என்ன தப்பு இருக்கிறது ? வைத்யம் பொய்க்குறி காண்பிக்குமா ?

அம்மா சமாளித்துக்கொண்டு, 'நன்ருக சொன்னீர்கள். அவளுக்கு நாங்கள் ஜலபானம் கொடுக்கிறதே இல்லையே. நாங்கள் என்ன குழந்தைகளா ? இல்லை, அவள் தான் எங்களுக்குத் தெரியாமல் எழுந்து ஓடிப் போய், எதையாவது சாப்பிட்டுவிட்டு வந்துவிடப் போகிருளா" என்று சிரித்துக்கொண்டே பேசி மழுப்பினுள். இதைக் கூறும்போது அம்மா முகம் அடிக்கடி ராமுவின் பக்கம் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தது. ஆனால் ராமு அவர்களைப் பார்க்கவில்லை.

இவ்வளவு சொல்லும்பொழுது டாக்டர் தான் என்ன செய்வார் ? அதை அதிகம் வற்புறுத்தாமல் பேசிக்கொண்டிருந்து விட்டு, அவளுக்கு குளிர்ச்சியான சாமான் ஒன்றும் கொடுக்கக்கூடாது. ரொம்ப ஜாக்ரதையாக இருக்கணும் ; ராமு ! வருகிருயா மருந்து தருகிறேன்' என்று சொல்லிக்கொண்டே வாசலை நோக்கிப் போனுர். ராமுவும் அவரைப் பின்தொடர்ந்து சென்ருன்.

வாசலுக்குச் சென்றதும் டாக்டர் அவன் பக்கம் திரும்பி "ராமு கொஞ்சம் கோளாருக இருக்கிறது. ஜாக்கிரதையாக பார்த்துக்கணும்,' என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.

பாட்டில் எடுத்துக் கொண்டு போவதற்காக ராமு மறுபடியும் கூடத்திற்கு வந்தான்.

'பாட்டில் அந்த பீரோவில் இருக்கு. எடுத்துக் கொண்டுபோ...'வாக்யத்தை அம்மா முடிக்கவில்லே.

அதற்குள் ராமு இடைமறித்து, 'ஆகட்டும் நாளைக் கும் ஏதாவது வாங்கிக் கொடு' என்று சிறிக்கொண்டே பாட்டிலுடன் வாசலுக்குப் புறப்பட்டான்.

"புத்தி வந்ததுடாப்பா புத்தி வந்தது, போ." தாய் பெருமூச்சு விட்டுக்கொண்டாள்.

"அம்மா, இனிமேல் ஒன்றும் கேட்கல்லேம்மா. அண்ணு சொன்னபடி கேட்கிறேன்" என்று ஹீனக் குரலில் சொன்னுள் காமாக்ஷி.

இந்த இரண்டும் வாசலுக்குப்போய் கொண்டிருக் கும் ராமுவின் காதுகளில் விழுந்தன.

17167
மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

# கைதியின் கர்வம்

பகல் முழுவதும் ரத்தக்கிளறியும் அலறலும் நிறைந்து கிடந்த அந்த இடத்திலே அப்போது மரண நிசப்தம் குடிகொண்டிருந்தது. யுத்த களத்தை அடுத்துள்ள சமவெளிகளில் கிரேக்க தோரணையில் அமைக்கப்பட்டிருந்த வெள்ளை நிறக் கூடாரங்கள் வானத்து நக்ஷத்திரங்களைப்போலச் சிதறிக் கிடந்தன. மழை அத்தனையும் கொட்டிவிட்ட ஆகாயம் மேகமில்லாமல் சுத்தமாக இருந்தது. சற்று தூரத்தில் ஜீலம் நதி தன்னிடம் கலந்த ரத்த வெள்ளத்தைக் குடித்த வெறியில் இரு கரைகளையும் புரட்டிக் கரைத்துச் சென்றது. எதிர்பாராத வெற்றி அடைந்துவிட்ட கிரேக்கப் படைகள் அதோடு போட்டி போட்டுக் கும்மாளம் அடித்துக்கொண்டிருந்தன. கூடாரங்களுக்கு மேல் உயர்ந்து பரந்து வீசி எரிந்த தீவட்டிகளின் செந்நிறம் யுத்தகளத்தின் ரத்தக் குழம்பில் பிரதிபலித்துக்கொண்டிருந்தது.

கூடாரக் கூட்டத்தின் நடுவே அலெக்ஸாண்டரின் முகாம் நக்ஷத்திரங்கள் சூழ்ந்த பூர்ண சந்திரன்போல் எடுப்பாக விளங்கியது. அதன் முகப்பின் நேர் எதிர் கோடியில் இந்திய ராங்கியில் அமைக்கப்பட்ட சிம்மாசனம் காலியாக ஒளிவிட்டுக்கொண்டிருந்தது. தன் வெற்றியைக் கொண்டாடக் கூட்டியிருந்த கொலுவுக்கு இன்னும் அலெக்ஸாண்டர் வரவில்லை. அவன் வருகையை எதிர்பார்த்து எங்கும் நிம்மதி பரவியிருந்தது.

ஆனால், இரண்டு கண்கள் மட்டும் சுற்றுப்புறக் காட்சி எதிலும் நிலைக்காமல், அவன் கையிலிருந்து நழுவிவிட்ட அந்தப் பூமியையே பார்த்துக் கீழ்நோக்கி

யிருந்தன. சாதாரண உயரமுள்ள மட்டமான ஆச னத்தில் உட்கார்ந்து இருந்தபோதிலும் அவன் உயர மும், ஆகிருதியும் இருபக்கமும் நிற்கும் கிரேக்கப்போர் வீரர்களுடன் போட்டியிட்டுக் கொண்டிருந்தன. அத் தனை காம்பீர்யமும், சௌந்தரியமும், வாய்ந்த புரு ஷோத்தமன்—கிரேக்கர்களின் போரஸ்—அந்தக் கூடா ரத்தில் கைதியாக இருந்தான்.

அன்று விடியும் வரை அந்தப் பிரதேசம் பூராவும், சிந்துநதி வளமை கொட்டும் இடம் முழுவதும், அவனுக்குச் சொந்தமாக இருந்தது. அஸ்தமன காலத்தில் அவனே பிறனுக்கு உடைமையாகி விட்டான்!

அவன் தேகத்தில் வெட்டியிருந்த அத்தனை வெட்டுக் குத்துக்களின் ஞாபகத்துடன், யுத்தகளத்தில் வீரத்திடையே தவறிய அவன் பிரக்ஞை, இப்போது மானமிழந்து விழித்துக்கொண்டிருந்தது. அவன் விழித்துப் பார்த்தபோது, அவன் மானத்தையே நெரிப்பதுபோல், கைகளை நெருக்கிக்கொண்டிருந்த தளைகள்தான், யுத்த களத்தில் அவன் அணிந்திருந்த வாளுக்கும் ஈட்டிக்கும் பதிலாக உடலோடு ஒட்டிக் கோரமாகச் சப்தித்துக்கொண்டிருந்தன.

எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனை யொன்றிலும் அவன் மனம் உளைந்துகொண்டிருக்கவில்லை அப்போது. சென்றுவிட்ட சம்பவங்கள்தான் அவன் மனத்தில் குமுறிக் கொண்டிருந்தன. அவன் வீழ்ச்சிக்குக் காரணமான அத்தனை சம்பவங்களையும் கோர்வையாக அலசிக்கொண்டிருந்தது அவன் புண்பட்ட ஹிருதயம்.

அலெக்ஸாண்டர் ஹிந்துஸ்தான எல்லையை நெருங்கும் செய்தி அவனுக்குக் கிடைத்ததும் எல்லைக் குக் காவல் போலிருக்கும் தக்ஷசீல அரசன் அம்பி தன் ஜன்ம விரோதி என்பதைக்கூட மறந்து, சுய கௌர வத்தைக்கூட் உதறி, அவன் துணையை நாடியது கூட வியர்த்தமாகி விட்டது!

அம்பி அலெக்ஸாண்டரை வரவேற்றதுடன், புருஷோத்தமன்மீது படையெடுக்கத் துணை ஆளும் கொடுத்துவிட்டான். அவமானம்! புருஷோத்தமன் மீது பகைமை தீர்க்க இந்தச் சந்தர்ப்பந்தான் கிடைத்தது அவனுக்கு! அதே சமயம் அபீசாரத் தலைவன் – புருஷோத்தமனுக்கு உதவ வாக்குத் தந்து பாதி வழி வந்தவன் - திடீரென மனம் மாறி அலெக்ஸாண்டருக்குத் தலை சாய்த்து விட்டான். ஏனோ தெரியவில்லை!

தன் நிலைமையின் கடூரம் அப்போதுதான் புருஷோத்தமனுக்குப் புரிந்தது. ஆக்ரோஷமும் அவமானமும் தலைக்கேறின. ஒவ்வொரு விநாடித் தயக்கமும் ஹிந்துஸ்தானத்தின் பேராபத்தை அதிகரிப்பதாக இருந்தது. தனித்து நின்றே போர் தொடுக்கத் தீர்மானித்துவிட்டான்.

"உன்னை வந்து சந்திக்க வேண்டுமென்று கேட்கிறாய் என்னை? ஆகட்டும்; ஜீலம் நதிக் கரையில் படையுடன் வந்து சந்திக்கிறேன்," என்பதுதான் அலெக்ஸாண்டரின் தூதனுக்கு அவன் அமைதியுடன் அளித்த பதில்.

ஆனால், யுத்தம் அவனை ஒரு கைதியாக்கிவிட்டது.

அதைப்பற்றிக்கூட அவன் அப்போது அவ்வளவாகக் கவலைப்படவில்லை. வீர வாழ்க்கையின் பேராபத்து அவன் எப்போதும் எதிர்பார்த்ததுதான். அன்றைத் தோல்வி அவன் கண்களைத் திறந்துவிட்டது. தான் இதுவரை கண்டிராத வகையில் அந்நியப் படைகளின் கட்டுப்பாட்டையும், போர் முறையையும் பார்த்துத் திடுக்கிட்டுப்போனான். அந்த முறைக்கு அவன் ஈடுகட்டிச் சமாளிக்க முடியவில்லை. இரண்டு போர் முறைகளுக்கும் வித்தியாசம் இருந்தது!

போர் முனையில் அசைக்க முடியாத அரண்போல் அமைந்து, இதுவரை அவன் வெற்றிக்குப் பெரும் காரணமாக இருந்துவந்த யானைப்படையே கிரேக்கக்

குதிரை வீரர்களின் அம்பு மழைக்கு முன்னால் பின் வாங்கித் தன் படையையே மிதித்து அழித்துத் துவம்சம் செய்துவிட்டது—எதிரிப் படையை அழிப்பதற்குப் பதில்! தரையில் விரல் ஊன்றி நாண் இழுக்க வேண்டிய தன் விற்போர் முறை உளுத்துப்போனதாகி விட்டது. குதிரைமீது பாய்ந்து ஒரு கணத்தில் பல அஸ்திரங்களைப் பொழியும் கிரேக்க வில்லாளிகள் முன் அவன் வில் வீரர் எம்மாத்திரம்!

இந்த நினைப்புக்களுக்கு இடையில் புதைந்திருந்தான் புருஷோத்தமன்!

கூட்டத்தின் பரபரப்பும், உடைகளும் ஆயுதங்களும் அலைந்து உராயும் சப்தமும், அலெக்ஸாண்டர் கூடாரத்திற்குள் நுழைந்து விட்டதைத் தெரிவித்தன. சபை முழுவதும் ஒரே முகமாக எழுந்து வெற்றி வீரனுக்கு மரியாதை செலுத்தியது. தன்னை மறந்த நிலையில் இருந்த போரஸ் இவற்றை யெல்லாம் கவனிக்கவே யில்லை. அவன் மனது அவ்வளவு உணர்ச்சி வசப்பட்டுக் கிடந்தது.

சிப்பாய்கள் புருஷோத்தமன் தோள்களில் கை வைத்து எழுந்து நிற்க அவனையும் தூண்டியபோது தான் சிந்தனை கலைந்து நிமிர்ந்து பார்த்தான். கம்பீரமான ஒரு உருவம் ஆசனத்தை நோக்கி வருவது கண்களில் பட்டது. ஒரு விநாடிதான் அந்தக் கூர்ந்த பார்வை! அடுத்த விநாடி தோள்களை ஒரு உதறு உதறி, இரு வீரர்களின் கைப்பிடிகளையும் அலட்சியமாக நெகிழ்த்திவிட்டு, அசையாமல் உட்கார்ந்திருந்தான். "நான் ஒரு கைதிதான்! யுத்த களத்தில் தோற்றவன்தான். ஆயினும்? தோற்றுவிட்டதால் மானம் போய் விட்டதா?" என்று நினைத்தான். அவன் மனது முரண்டியது.

அதே சமயம் அலெக்ஸாண்டர் பார்வை அவன் மீது விழுந்தது. நிலைமையை யூகித்துவிட்ட அந்த ஒரு விநாடியில் அவன் மனத்தில் பல எண்ணங்கள் அலைத்-

தன. மானமும் சுயமரியாதையும் ஒரு உருவெடுத்து மிருக பலத்துடன் போராடுவதுபோல் தோன்றியது அவன் கண்களுக்கு. வீர மனதை அலசிப் பார்க்கும் ஒரு சாதுரியத்துடன், உடனே அவனை விட்டுவிடும்படி வீரர்களுக்கு உத்தரவிட்டுக் கையை அசைத்தான் அலெக்ஸாண்டர்.

இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டனர்.

யுத்த களத்தில் ஒன்பது வெட்டுக்களுடன் அவன் மூர்ச்சித்து வீழ்ந்த பிறகுதான் புருஷோத்தமனை உயிரோடு பிடிக்க முடிந்தது என்று அலெக்ஸாண்டர் கேள்விப்பட்டான். அத்தகைய வீரனைப் பார்க்க அவன் மனது தவித்தது. அதோடு சேர்த்து தன் கற்பனைக்கு மீறிய அந்த ஆகிருதி உருவத்தைக் கண்டு அலெக்ஸாண்டர் பிரமித்துப் போய் விட்டான்.

அலெக்ஸாண்டரே வஜ்ரக் கட்டமைந்த, திமிரும், காம்பீரியமும் கொண்ட உருவம். அவனையும் மீறி விட்ட ராக்ஷஸ உருவமாக இருந்தான் போரஸ்! ஆறரை அடி உயரம்; இரும்புத் தடிகள் போல உரம் ஏறியிருந்த கை கால்கள்; ரத்தம் உறைந்து கட்டி கட்டியாகி இருப்பதுபோன்ற தசைநார்கள் கொண்ட அங்கங்கள்; விசாலமான மார்பு. புண்பட்ட உள்ளமும், உடலும் கொண்டபோதிலும், உறுதியாக, ஊடுருவித் தீரமாக விழிக்கும் கண்கள்—இவைதான் அலெக்ஸாண்டர் கண்டவை.

அலெக்ஸாண்டரின் தோற்றம் புருஷோத்தமன் மனத்தில் வியப்புக் கலந்த ஒரு சிலாகிப்பையும், வீரத்தை மெச்சிய சந்தோஷத்தையும் உண்டாக்கியது. ஆனால் அடுத்த க்ஷணம் அவன் கண்கள் ஒரு விதக் கசப்புக் குறி காட்டின. அவன் அலட்சியமாகச் சரேலென்று தன் கண்களை அப்புறம் திருப்பிக்கொண்டான்.

இந்த உதாசினத்தை அலெக்ஸாண்டர் நுட்பமாக யூகித்து விட்டதும், அவன் உதடுகளில் லேசான

புன்னகை அலேத்தது. தங்கள் இருவரது அப்போதைய நிலேமையில் அவன் அவ்விதம் நடந்துகொண்டதில் ஆச்சரியம் ஒன்றும் தோன்றவில்லே. நேரே ஆசனத்தை நோக்கிப் போன கால்கள், சட்டென மடக்கிப் புருஷோத்தமன் பக்கம் திரும்பின. அந்த நேரத்தில் அலெக்ஸாண்டர் மனம் பலவாருக எண்ணியது.

தன் அருகில் அவ்வளவு பலமான காலடிச் சப்தம் கேட்டும் புருஷோத்தமன் முகம் திருப்பவில்லே.

அலெக்ஸாண்டர் போரஸ் அருகில் போய் நின்ருன். ஒரே பார்வையில் அவன் உடல் முழுவதையும் கண்கள் சுழற்றிப் பார்த்துவிட்டன. வாய் திறந்த வெட்டுக் காயங்கள் மீது தடம் பதித்துக்கொண்டிருந்த தளேகள் அவன் கண்களில் உறுத்தின. அவன் மனத்தில் சுருக்கென்றது. கண்களே அகலத் திறந்துகொண்டு சரேலென்று வீரர் பக்கம் திரும்பினுன்:

"எடுத்தெறியுங்கள்!"

அடுத்த க்ஷணம் புருஷோத்தமனின் தளேகள் அவிழ்ந்து கீழே விழுந்தன.

ஒரு வேதனே விடுதலே நிம்மதியுடன், புருஷோத்தமன், முகம் சுருக்கி நெளிந்து கொடுத்து, ஒரு பெருமூச்சு விட்டான். ஆனுல் அலெக்ஸாண்டர் பக்கம் அவன் கண்கள் திரும்பவில்லே.

அலெக்ஸாண்டர், தயங்கி நின்று, கைதியின் பிடிவாதத்தைக்கண்டு, தனக்குள் பலவாருக யோசனே செய்தான். அவன் எண்ண மாறுதல்களே முகக் குறி வெளியிட்டது. ஒரு கபடப் புன்னகை அவன் உதடுகளின் இடுக்கில் தோன்றி, போரஸுடன் நடந்துகொள்ள வேண்டிய விதத்தைத் தீர்மானித்துவிட்டான் என்று காட்டியது.

தலே குனிந்திருந்த போரஸ் மீது மெதுவாகக் கை வைத்து, "போரஸ்!" என்று மிருதுவாகக் கூப்பிட்டான்.

போரஸின் கண்கள் சுடர் விட்டு மின்னின. “இல்லை, நான் உன் கைதி!” என்று படபடத்துக் கூறினான் குனிந்துகொண்டே.

“ஆனாலும் நீ ஜீலம் அரசன்தானே!” என்று அலெக்ஸாண்டர் சின்னச் சிரிப்புடன் அவன் தோள்களை அமிழ்த்திக்கொண்டே பேசினான்.

“ஆம், நேற்று வரை இருந்தேன்; இன்று இல்லை,” என்று போரஸ் கசப்புச் சிரிப்புடன் பதில் கொடுத்தான்.

புருஷோத்தமனுடைய கர்வம் கொண்ட பதிலைக் கேட்ட அலெக்ஸாண்டர் உள்ளூர மகிழ்ச்சி கொண்டான். “நான் அப்படி நினைக்கவில்லை; இன்னமும் ஜீலம் அரசன்தான் நீ” என்றான் விட்டுக்கொடுக்காமல். அலெக்ஸாண்டரின் தத்துவமும் அர்த்தமும் போரஸுக்குப் புரிந்திருக்க முடியாது. உலகத்தையே ஜெயித்துவிட உறுதிகொண்ட அலெக்ஸாண்டருக்கு நண்பர்களை எய்துவதில்தான் அசாத்ய நம்பிக்கை இருந்து வந்தது. அதுதான் அவன் லட்சியத்துக்குப் பெரிதும் உதவக்கூடும்.

அலெக்ஸாண்டர் இதைச் சொன்னதும் போரஸ் அவன் பக்கம் விருட்டெனத் திரும்பினான். “இல்லை, நிச்சயமாக நான் உன் கைதிதான்; இனி ஜீலம் அரசன் அல்ல,” என்று கடுகடுப்புடன் கூறிவிட்டுத் திரும்பிக் கொண்டான்.

அலெக்ஸாண்டர் திகைத்தவன் போல் பாசாங்கு காட்டினான். “இல்லையா, அப்படியானால் இந்த நிமிஷம் முதல் நீ ஜீலம் அரசன்!” என்று கொண்டே, அவன் கைகளைத் தொட்டு உயர்த்தினான்—அரசனுக்கு உரிய மரியாதை காட்டுபவன் போல்.

போரஸ் கண்களில் ஆக்ரோஷம் பொங்கியது. தனக்கு அலெக்ஸாண்டர் பிச்சை அளிப்பதாகத் தோன்றிய நினைப்பு அவனைப் புண்படுத்தியது. “ஹூம்! கௌரவம் இழந்த வழியில் ராஜ்யம் பெறுவதை விடக்

கைதியாக இருப்பது மேல்," என்று அலெக்ஸாண்டர் கண்களைப் பார்த்துக்கொண்டே ஆத்திரத்துடன் கூறினான். தன்னை மறந்த நிலையில் எழுந்து நின்றான்.

அந்த ராக்ஷஸ உருவத்தின் முன் அலெக்ஸாண்டர் ஒரு குள்ளமாகத் தோன்றினான்.

போரஸின் இந்த வார்த்தைகளைக் கேட்ட அலெக்ஸாண்டர் திடுக்கிட்டுப் போனான். ஏதோ பேச வாயெடுக்குமுன், போரஸ் அவனை இடைமறுத்து, "அதிலும் நேர்மை யுத்தம் செய்யத் தெரியாத ஒரு வீரனிடமிருந்து...." என்று முடித்தான்.

அலெக்ஸாண்டர் அவனையே விறைத்துப் பார்த்தான். இந்த வார்த்தைகளின் அர்த்தம்? தன்னைச் சுட்டிக் காண்பிப்பதின் பொருள்? வீரன் என்பதில் அவன் அழுத்திய விதம் அலெக்ஸாண்டரின் வீரத்தையே ஏளனம் செய்வதுபோல் இருந்தது.

அந்த வார்த்தைகள் அவன் மனத்தில் சுருக்கெனத் தைத்தன. தன் கலக்கத்தைச் சமாளித்துக்கொண்டு, விட்டுக்கொடுக்காமல், "ஆனால் யுத்தத்தில் நேர்மையென்று ஒன்று கிடையாதே!" என்றான்.

"இல்லையா?" போரஸ் உறுத்துப் பார்த்தான்.

"அதில் ஒரு கட்டுப்பாடும் கோடுபோட்ட வழியும் எப்படிக் கைக்கொள்ள முடியும்? எதுவும் நேர்மைதான்" என்று வலுவுடன் அலெக்ஸாண்டர் கூறினான்.

"புயல் வீசிப் படை சீர்குலைந்த நள்ளிரவில் தாக்குவதுகூடவா நேர்மை?" என்று வேகத்துடன் கேட்டான் போரஸ்.

அலெக்ஸாண்டர் அமைதியாக, "எதிரியின் பலஹீனத்தில்தானே தாக்குபவன் பலம் இருக்கிறது!" என்றான்.

போரஸின் கோபமும் வெட்கமும் அதிகரித்தன. "இரவில் பின்னிருந்து தாக்குவது கூடவா?" என்றான் ஆத்திரமாக.

இந்த வார்த்தைகளால் அலெக்ஸாண்டர் மனது பின்னரித்தது. ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "எதிரியைப் பலஹீனப்படுத்த வேறு வழி?" என்று அழுத்தமில்லாமல் கேட்டான். போரஸ் பதில் பேச வில்லை. மௌனமாக முகத்தைத் தணித்துக்கொண் டான். அலெக்ஸாண்டரோடு பேசுவதே குறைவாக அவனுக்குப்பட்டதுபோல் இருந்தது.

போரஸை மடக்குவதற்கு இந்த வார்த்தைகளைக் கூறிவிட்ட போதிலும் அலெக்ஸாண்டருக்கு அந்தப் பதில் என்னமோ திருப்திதரவில்லை. போரஸ் தன்மீது சாட்டும் குற்றம் வாஸ்தவம் என்றுகூட அவன் மனத்தில் உளைந்தது. ஏன், அவனே இதுவரையில் எந்தப் போரிலும் இந்த வழியைக் கையாளவில்லை. அதற்கு அவசியமே ஏற்படவில்லை. அவ்வளவு சுலப மான வெற்றிகள்! ஆனுல் போரஸ் விஷயத்தில்? இந்த வழியைத் தவிர வேறு வழியில்லை. அது அவன் சுத்த வீரத்துக்கு இழுக்குத் தானே!

அதைக் குத்திக் கிளப்பிவிட்டான் போரஸ். அதைச் சகிக்கமுடியாத அவன் மனது வேதனையால் வெந்தது. வேதனையின் வெளித்தோற்றத்தைக்கூட அவனுல் மறைக்க முடியவில்லை. போரஸ் கவனித்து விட்டான். அலெக்ஸாண்டரையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். ஹிந்துஸ்தானத்தின் போர் முறையின் நேர்மையையே அனுஷ்டித்து வந் திருந்த அவன் வீர மனம் இதை நினைக்க முடியவில்லை.

மௌனமாகவே இருவரும் நின்று கொண்டிருந் தார்கள். என்ன பேசுவதென்று தெரியவில்லை இருவருக்கும்! "யுத்தத்தில் எதுவும் நேர்மைதான்!" என்ற வார்த்தைகள் புருஷோத்தமன் மனத்தில் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தன. "இரவில் பின் னிருந்து தாக்குவது கூடவா நேர்மை?" என்ற சூடு அலெக்ஸாண்டர் ஹிருதயத்தைக் கருக்கிக்கொண் டிருந்தது.

திடீரென்று அலெக்ஸாண்டர் போரஸ் பக்கம் திரும்பினான். தங்களுடைய அப்போதைய உறவை மறந்துவிட விரும்புபவன்போல் இருந்தது அவன் பார்வை!

"போரஸ், உன் நண்பனாக இருக்க நான் விரும்புகிறேன்," என்று உணர்ச்சி ததும்பக் கூறிக் கொண்டே, தன் கைகளை முன்பக்கம் நீட்டினான்.

அந்த வார்த்தைகள் புருஷோத்தமன் நரம்புகளில் வேகமாகப் பாய்ந்தன. அவற்றின் அர்த்தத்தையும் ஒரு தரம் அலசிப் பார்த்தான். அவன் கண்கள் பிரகாசம் அடைந்தன. அலெக்ஸாண்டரைப் பற்றிய அவன் நினைவுகள் பலவும் மாறின. திறந்த உதடுகளுக்கு இடையே சிரிப்பு லேசாகப் பிரகாசிக்க, கொஞ்சம் தயங்கிவிட்டு, 'நானுந்தான்!' என்று சொல்லிக்கொண்டே அலெக்ஸாண்டர் கைகளில் தன் கைகளைச் சேர்த்தான்.

# யானை விளக்கு

கண்களில் குறுக்கும் நெடுக்குமாக ஓடிய ஒரு மகிழ்ச்சிப் பார்வையுடனும் ஒருவித கர்வத்துடனும் ஜனகம் தன் கண்களை நாலு பக்கமும் சுழற்றி தன் வாசலை ஒரு முறை பார்த்துக்கொண்டாள். அவள் மகிழ்ச்சிக்கும் கர்வத்திற்கும் காரணமாக இருந்த தீபாலங்காரம் அவள் அகன்ற கண்களில் பிரதிபிம்பித்தது.

பெரிய கார்த்திகை தினம். வீதிமுழுதும் எங்கு திரும்பினாலும் ஜெகஜ்ஜோதியாய் பிரகாசிக்கும் பொன்னிறச் சுடர் வீசும் அகல்கள். கதிரவனது காந்தியையும், நிலவின் தண்மையையும் கலந்து ஆர அமர நின்று வீசும் இந்த தீபங்களின் எண்ணிக்கை வானில் முளைத்தெழும் நக்ஷத்திரக் கூட்டங்களின் தொகையையும் மிஞ்சிவிடுமோ என்று ஐயுறும் படியாக இருந்தன. அத்தனைக்கும் நடுவே கார்த்திகைப் பெண்கள் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டு புவியன்னையையும் ஒளித்தேவியையும் வழிபடும் ஆர்வத்தையும் ஆசைப் பெருக்கையும் அன்று மாலையில் தான் பார்க்க முடியும்.

தன்னை நன்றாக புது ஆடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு தன் வாசல் தீபாலங்காரத்திற்கு நடுவே நின்றுகொண்டிருந்தாள் ஜனகம். ஒரு கையில் எண்ணெய் பாத்திரம், மற்றொரு கையில் திரிகள் சகிதம் அவ்வப்போது சுணங்கும் விளக்குகளுக்கு உடனுக்குடனேயே எண்ணெய் திரி இடுவதில் அவள் அதிக கவனமாக இருந்தாள்.

ஜனகத்தின் பார்வை அடிக்கடி முன்னால் இருந்த ஒரு குறிப்பிட்ட விளக்கின்மீது சென்று திரும்பிக்

கொண்டிருந்தது. அதைப் பார்க்கும்பொழுதெல்லாம் அவள் பெண்மை மனதிலே இன்னதென்று விவரிக்க இயலாத ஒரு களிப்புத் தோன்றும். அவள் முகத்திலே பூரணமாக வெளியிட்டு வராத ஒரு அரைப் புன்னகை பூக்கும்.

அது ஒரு யானை விளக்கு! தரையிலிருந்து ஜாண் உயரம் எழும்பி எடுப்பாக நின்று அழகாக கடைசலிட்டு ஒய்யாரமான சித்திரப்பாடுகள் அமைந்து, வெண்கலத்தில் செய்யப்பட்ட ஒரு யானை; அதன் மீது இரு கைகளாலும் தாங்கிய விளக்குடன் பறக்கும் பாவனையில் இயற்கை அழகு பொலிய அமைக்கப்பட்டிருந்த ஒரு தெய்வ கன்னிகை உருவம். இந்த விளக்கைத்தான் பார்த்துப் பார்த்து மனதிற்குள் மகிழ்ந்து கொண்டிருந்தாள் ஜனகம். அது போன்ற விளக்கு அந்தத் தெருவிலேயே வேறொருவர் வீட்டிலும் வைத்திராததும் ஜனகத்தின் பெருமை அதிகரிப்பதற்குக் காரணம்.

போதாததற்கு தெருவில் போய் வந்துகொண்டிருக்கும் பெண்டிர், சிறுவர், சிறுமியர், யாவரும் ஒரு கணமாவது நின்று அந்த விளக்கின் அழகை வியந்துவிட்டுப்போய்க்கொண்டிருந்தார்கள். அதைக் கவனித்த ஜனகத்தின் மனதில் அடக்கமுடியாத கர்வம் எழும். பெருமை அடைவாள்.

சிறிதுநேரம் சென்றது.

திடீரென்று தன்னருகில் ஏதோ இடறி விழுந்தது போன்ற சப்தம் கேட்கவே சரேலென்று நிமிர்ந்து பார்த்தாள் ஜனகம். ஒரு கள்ளப் பூனை அப்பொழுது தான் ஓடும் அவசரத்தில் ஒரு அகல் விளக்கையும் தட்டிக்கொண்டு வீட்டின் உள்ளே பாய்ந்து ஓடியது. ஜனகம் அதைப் பார்த்து விட்டாள். உடனே அவள் ஞாபகம் கூடத்தில் வைத்திருந்த அவல் பொறி, அப்பத்தின்மீது சென்றது. எங்கே அவற்றில் வாய் வைத்துவிடப் போகிறதோ என்று பயந்து பாத்திரத்

தையும் திரியையும் கீழே வைத்துவிட்டு உள்ளே ஓடினாள் பூனையை விரட்ட. பூனையை வெளியே விரட்டி விட்டு திரும்ப வாசலுக்கு ஜனகம் வர சிறிது நேரம் பிடித்தது.

ஆவலோடு ஜனகத்தின் கண்கள் வாசலை ஒரு முறை சுற்றி விழித்துவிட்டு நடுவாசலில் வந்துநின்றது. சடக்கென்று அவள் முகம் மாறியது. அடி வயற்றில் பகீர் என்றது; திகைத்து நின்று விட்டாள்.

ஒரு விநாடி உள்ளே சென்று திரும்பி வருவதற்குள், தான் பார்த்துப் பார்த்து மகிழ்ந்த, தனது அத்தனை கர்வத்திற்கும் காரணமாக இருந்த அந்த யானை விளக்கு அதன் இடத்திலிருந்து மறைந்துவிட்டதைப் பார்த்தாள். அது இருந்த இடம் வெறிச் சென்றிருந்தது. யாரோ சமயம் பார்த்துக்கொண்டிருந்து அடித்துக்கொண்டு போய் விட்டார்கள்.

அவள் உடல் ஒரு நிலையில் நிற்கவில்லை; பதறலெடுத்தது. நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. அவசர அவசரமாக அங்கும் இங்கும் ஓடித் தேடலானாள், அகப்படவில்லை. அண்டை அயலாரிடம் வீட்டின் உள்வரைச் சென்று கூட விசாரித்தாள், பயனில்லை. தெருவில் ஓடி விளையாடிக்கொண்டிருக்கும் சிறுவர் சிறுமியரைக் கூப்பிட்டு வினவினாள், ஏதாவது துப்பு துலங்குமா என்று. ஒரு பிரயோஜனமும் இல்லை.

அவள் நம்பிக்கை இழந்து விட்டாள்.

கொஞ்ச நேரமாக பதட்டமும் கொதிப்புமாக இருந்த அவள் மனதிலே ஒரு அமைதி குடிகொண்டது. அவள் உடல் ஒரு நிலைக்கு வந்தது. புயலடித்து ஓய்ந்து போன பிறகு கடலிலே ஏற்படும் அமைதியல்ல அது. நன்றாகக் கொதித்து குமிழி அடக்கி நிற்கும் வெந்நீரிலே தோன்றும் அமைதி.

அடி வயிற்றிலிருந்து குமுறிக் கொண்டு கிளம்பும் அழுகையை அடக்கி அடக்கிப் பார்த்தாள். அவளால் முடியவில்லை. அதற்குமேல் வாய்விட்டு அழ ஆரம்

பித்து விட்டாள். அவள் கண்களிலிருந்து பெருகிய கண்ணீர் புதுப்புடவையையும் தொப்பலாக்கிவிட்டது. ஒரு சாதாரண விளக்கு காணமற்போனதற்கு இவ்வளவு அழுகையா என்று அண்டை அயலார் பார்த்து நகைக்கும்படியாகக் கூட இருந்தது.

அந்த விளக்கின் சரித்திரத்தையும் ஜனகத்தின் வாழ்க்கையையும் பற்றிய விவரம் சிறிதாவது யாருக்காவது தெரிந்திருக்குமானால் அவர்கள் அப்படி நகைத்திருக்க மாட்டார்கள். அந்த விளக்கு இன்று நேற்று வாங்கியதல்ல. ஜனகத்தின் மாமி ரங்கநாயகி அம்மாள் புக்ககத்திற்கு வந்தபோது, முதல் கார்த்திகைக்கு அவளுடைய தாயார் கொடுத்த சீதனம். அதை ஜாக்கிரதையாக இத்தனை வருஷங்களாக காப்பாற்றிவந்த ரங்கநாயகி அம்மாளின் 'சூதானத்தை' போற்றாமல் இருப்பதற்கில்லை. அந்த விளக்கின்மீது ரங்கநாயகி அம்மாளுக்கு உயிர். வருஷத்திற்கு ஒருமுறை பெரிய கார்த்திகையன்று தவிர இதர நாட்களில் அதை வெளியே எடுக்க சம்மதிக்கவே மாட்டாள்.

தேய்த்துத் தேய்த்து அதில் அவள் ஏற்றி இருந்த பளபளப்பு வீதி முழுவதும் ஜோதி வீசும். அத்தனை குடும்பப் பிரசித்திபெற்ற அந்த விளக்கிற்கு விமோசனம் இன்று ஜனகத்தின் கையால்—ஒரு நாட்டுப் பெண் கையால்—ஏற்பட்டதென்றால் அது சாதாரணமாகப் போகக் கூடிய சம்பவமா?

முகம் பார்த்துக்கொண்ட வேளை என்பார்களே. ஜனகமும் ரங்கநாயகி அம்மாளும் முதன் முதல் முகம் பார்த்துக்கொண்டபோது நல்ல வேளையில்லை என்று தான் நினைக்கவேண்டி இருக்கிறது. ஜனகம் கணவன் வீடு வந்து இன்னும் இரண்டு வருஷங்கள்கூட முற்றுப் பெறவில்லை. அதற்குள் ரங்கநாயகி அம்மாளுக்கு அசாத்யமான சலிப்பும் வெறுப்பும் எப்படியோ ஏற்பட்டு விட்டது நாட்டுப் பெண்ணிடம்.

"மகராசி எந்த வேளையில் இந்த வீட்டில் காலெடுத்து வைத்தாளோ எல்லாம் துடைத்துக் கொண்டே வருகிறது," என்று இதுவரை ஜனகம் கேட்க எத்தனையோ முறை கூறி இருக்கிறாள். ஜனகம் ஒரு சிறிய பிசகு செய்தபொழுதும் சீறி விழுந்து பிரமாதப்படுத்துவது அவள் வாழ்க்கையோடு ஒட்டியதாகப் போய் விட்டது. ஊரார் அவள் கொடூரத்தைப்பற்றி சொல்லிக் கொள்வதெல்லாம் அவள் காதில் விழுந்தால்தானே.

ஜனகம் ஒரு லக்ஷிய நாட்டுப் பெண். இதையெல்லாம் அவள் பாராட்டுவதில்லை. முகத்தில் சிறிது கடுகடுப்பும், சுளிப்பும் இன்றி மாமியின் வசைகளை எல்லாம் ஏற்றுக் கொள்வாள்.

இன்றுவரை ஒரு வார்த்தையேனும் மாமி முகம் பார்த்து பதில் சொன்னவளல்ல. நாளடைவில் மாமியின் கைகளில் அவள் அநுபவித்தவை சகஜமாகப் போய்விட்டது. மாமியின் செய்கைகளில் அவளுக்குப் புதுமை ஒன்றும் தோன்றவில்லை.

ஜனகம் புக்ககம் வந்து இரண்டு வருஷங்கள் ஆகியும் இப்பொழுதுதான் சில மாதங்களாக கணவனுடன் தனிக் குடித்தனம் நடத்தி வருகிறாள். இந்த நாட்களில் இவர்கள் கூடவே இருந்த ரங்கநாயகி அம்மாள் சொந்த கிராமம் சென்று சில நாட்கள் ஆகிவிட்டன. திரும்பி வர இன்னும் சில நாட்கள் செல்லும். இந்த இடைக் காலத்தில்தான் தனிக் குடித்தனம் செய்வதன் கஷ்ட நிஷ்டூரங்களை அநுபவித்து அறிய ஜனகத்திற்கு சந்தர்ப்பம் வாய்த்தது.

மாமியின் குணம் நன்றாகத் தெரிந்திருந்தும், ஆசையினால் தூண்டப்பட்டவளாய் கார்த்திகை யன்று யானை விளக்கை எடுத்து ஏற்றி வைத்தாள், திரும்ப ஜாக்கிரதையாக உள்ளே வைத்துவிடலாம் என்ற நினைப்பில். இப்படி ஏற்படப்போகிறது என்று அவள் கண்டாளா என்ன?

அவள் ஆசை வேறுவிதமாக முடிந்தது.

இதர அகல்களை யெல்லாம் உடனே அணைத்து உள்ளே எடுத்து வைத்துவிட்டாள். தீபாலங்காரம் செய்வதில் அவளுக்கு இருந்த ஆர்வம் அடங்கிப்போய் விட்டது. ஆரம்பத்தில் அந்த தீபவொளியில் மகிழ்ச்சியும் புன்னகையும் ததும்பிப் பிரகாசித்த முகம் இப்பொழுது துக்கக் கடலில் ஆழ்ந்துவிட்டது போல், சற்றுநேரத்துக்கு முன் ஜெகஜ்ஜோதியாய் விளங்கிய வீட்டு வாசலும் அந்தகாரத்தில் மூழ்கியது.

பொழுது ஆக ஆக அவள் மனதுக்குள்ளேயே மௌனம் குடிகொண்டது. அவள் அழுகையும் நின்றது. அழுது அழுது அவள் கண்கள் சிவந்து கிடந்தன. ஒரு அற்ப விஷயத்திற்கு பிரமாதப்படுத்தும் மாமி, இதை அறிந்தால் என்ன செய்வாள் என்று நினைக்கும்பொழுதே அவள் உடலை ஒரு குலுக்கு குலுக்கியது. தன் மாமியின் ரௌத்திராகார ஸ்வரூபத்தை மனதில் கற்பனை செய்துகொண்டபொழுது அவள் திரேகமே நடுங்கியது. அடக்க முடியாமல் திரும்பவும் அழுது விட்டாள்.

"ஐயோ! எதற்காக இன்று இந்த அசட்டுக் காரியம் செய்தேன்? பேசாமல் இருந்துவிட்டுப் போயிருக்கக் கூடாதா? இப்படி யெல்லாம் ஏற்பட்டிருக்காதே" என்று மனது துடித்தது.

செய்வதின்னதென்று புரியாமல் பிரமித்துப்போய் விட்டாள்.

ராமானுஜம் வெளியே போய்விட்டு திரும்பியவுடன் விளக்கு காணுமற்போன விஷயத்தை ஜனகம் தயங்கிக்கொண்டே தெரிவித்தாள்.

தன் தாயிடம் இதைக் கூறி அவளை சமாதானப் படுத்த வேண்டும் என்று அவள் நினைக்கவில்லை. அவன் குணம் அவளுக்குத் தெரியும். உண்மையிலேயே அவன் ஒரு மக்கு; சக்குபாய்க்கு கணவன் வாய்த்தது போல். இதற்குமேல் அவனைப்பற்றி அதிகம் சொல்ல

வேண்டியதில்லை. அவள் அவனிடம் எதிர்பார்த்த தெல்லாம் இரண்டொரு ஆறுதல் வார்த்தை தான். ஆனால் அவள் அதிலும் ஏமாந்து போனாள்.

அதைக் கேட்டவுடன் அவனும் சீறி விழுந்து வசைமாரி பொழிந்தான். தாயின் ரூபம் அவன் கண் முன் நின்றது. 'உன்னை யார் அதை வெளியே எடுக்கச் சொன்னது? அம்மா இல்லாதபோது? அம்மா வந்தால் கோபித்துக்கொள்வாளே. என்ன பதில் சொல்வது', என்று தானும் ஏங்கினான் கோழை.

கணவனும் தன்னோடு சேர்ந்து ஏங்குவதைக் கண்டு மனம் முறிந்துபோனாள் ஜனகம். சதாகால மும் மாமியின் உருவமும் பேச்சும் அவள் முன் நின்று துன்புறுத்திக்கொண்டிருந்தது.

மரண தண்டனையை எதிர்பார்த்து நிற்கும் கைதியைப்போல மாமியின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். சில நாட்கள் சென்றன.

ஒருநாள் பிற்பகல் ஜனகம் வாசலில் நின்று ஏதோ சாமான்களை வாங்கிக்கொண்டிருந்தாள். ராமானுஜம் கூடத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தான்.

திடீரென்று வீதி மத்தியில் தனக்கு அறிமுகமான ஒரு பேச்சுக்குரல் உச்சஸ்தாயியில் கேட்கவே ஜனகம் பதறிப்போய் அந்தப் பக்கம் எட்டிப் பார்த்தாள். கையில் ஒரு பழம் பெட்டியுடன் ரங்கநாயகி அம்மாள் ஐந்தாறு வீடுகளுக்கு அப்பால் ஒரு பாட்டியுடன் பேசிக் கொண்டே வந்து கொண்டிருந்தாள். பாட்டியின் குசலப்ரசனம் அதிகமாகப் போய்விடவே அங்கேயே பேச நின்று விட்டாள்.

ரங்கநாயகி அம்மாள் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்த ஜனகத்தின் உடல் பதறியது. நெஞ்சு படபட வென்று அடித்துக்கொண்டது. கூடைக்காரியைப் போகச் சொல்லிவிட்டு விருட்டென்று உள்ளே போய் விட்டாள். அவள் கைகால்கள் நடுக்கம் எடுத்தன.

கூடத்திலிருந்த ராமானுஜத்திடம் "அம்மா வரு

கிறாள் ஊரிலிருந்து" என்று கூறிவிட்டு சமையலறைக் குள் போய்விட்டாள்.

பயத்தினால் உடல் முழுதும் வியர்வை வெள்ளம் பொங்கி வழிந்தது. முந்தானையைப்போட்டுக் கசக்கி எடுக்கிறாள். முகத்தை துடைத்துக்கொள்ளுகிறாள். காரியம் செய்துகொண்டிருக்கும் பாவனையில் இருக் கலாம் என்றாலோ கையில் பாத்திரங்கள் பிடிகொள்ள வில்லை. தவிக்கிறாள் பாவம்!

ஒன்றுவிடாமல் குசலப்ரசனம் வினவிய பாட்டி, வந்ததும் வராததுமாக, ஜனகம் யானை விளக்கை தொலைத்த விஷயத்தையும் சமாசாரத்தோடு சமாசார மாக ரொம்ப அக்கரையோடு கூறி முடித்தாள்.

அதைக் கேட்டதும் ரங்கநாயகி அம்மாளுக்கு பிரமாதமாக வருத்தம் கலந்த கோபம் வந்துவிட்டது. வேறெதிலும் நாட்டம் போகவில்லை. ஏற்கெனவே கருப்பாக இருந்த முகம் இன்னும் கறுத்தது. அவள் கை கன்னத்திற்குப் போயிற்று. "ஏதடி இது! இப்ப டியும் தான் இந்த மூதேவிப் பிணம், தோசி ஒவ் வொன்னு தொலைச்சுட்டு உட்கார்ந்திருக்குமோ! அடி தங்கம் பெற்ற விளக்கேடி அது. என்னத்தை சொல் வேண்டி! அட அநாதி..." என்று வசைமாறி ஆரம் பித்தாள் நடுத்தெருவில் நின்றுகொண்டே.

பாட்டிக்கோ தான் போட்ட தூபம் இனி கனிந்து கொள்ளும் என்ற நம்பிக்கை விழுந்தது. பேச்சை மாற்ற முயலுபவள்போல், "அது போறது. வேறொன்னு வாங்கிட்டாப்போறது. ஒங்க ஊரிலே..." என்று ஆரம்பித்தாள்.

ரங்கநாயகி அம்மாளுக்கோ இதையெல்லாம் கேட்கத் தோன்றவில்லை. "அம்மாமி, அதெல்லாம் அப்பறம் வந்து சொல்றேன் சாவகாசமா. அடி பாவி! தங்கம் பெற்ற விளக்கை இப்படி தூக்கிக்கொடுத்துட்டு நிற்கிறாளே ஊமை!" என்று அடி வயற்றிலிருந்து கர் ஜித்துக்கொண்டே வீட்டை நோக்கிப் புறப்பட்டாள்.

படி ஏறவும் "அம்மா இப்பொழுதுதான் வருகிருயா," என்று தீனமான குரலில் வரவேற்றுன் ராமானுஜம்.

அதற்கு பதிலே கூறவில்லே ரங்கநாயகி அம்மாள். அவன் வரவேற்பை அங்கீகரிக்காதவள்போல் நேரே கூடத்திற்குச் சென்று பெட்டியை பொத்தென்று கீழே போட்டாள். கோபத்தோடு அவன் பக்கம் திரும்பினுள்.

"ஏண்டா ராமா, தங்கம்பெற்ற விளக்கை கண்ணுலே சுட்டாப்புலே தொலேச்சுட்டாளாமேடா உன் பெண்டாட்டி" என்று ஆத்திரத்தோடு கூறினுள்.

'ஆமாம்' என்றுன் ராமானுஜம் தணிவ்ரன குரலில்.

"என்ன ஆமாம்?" என்று இடி முழக்கம் செய்தாள் அடி வயிற்றிலிருந்து. அவள் கண்கள் உக்கிரமாக அவன்மீது விழித்தன.

இந்தத் தொனியே சமயலறையில் இருந்த ஜனகத்தின் பாதி உயிரைப் போக்கிவிட்டது; நடுங்கினுள்.

அதற்குமேல் அம்மாவோடு வார்த்தையாட தைர்யம் வராமல் ராமானுஜம் மௌனமாக நின்றுன்.

"நல்ல தோசிப் பொணம் வந்து வாச்சுதுடா வீட்டுக்கு. அஷ்ட..." என்று நாக்கில் நரம்பில்லாமல் அவள் வாயிலிருந்து வசவு மொழிகள் புறப்பட்டன. வைதுகொண்டே சட்டென்று திரும்பி சமையலறைக்குள் சென்றுள்.

உள்ளே ஜனகம் நடுநடுங்கிக் கொண்டிருந்தாள்.

ஒருதரம் அவளே ஏறிட்டு பார்த்தாள். ஜனகத்தின் பயம் அதன் உச்சநிலேக்குப் போய்விட்டது.

இருந்தாலும் சமாளித்துக்கொண்டு "இ...ல்...லெ அம்...மா...நான்..." என்று தழதழத்த குரலில் ஏதோ சமாதானம் கூற வாயெடுத்தாள்.

"சீ! சமாதானம் வேறு சொல்ல வந்தயோ? நான் இல்லாதபோது யாரடி உன்னே அதை வெளியே

எடுக்கச் சொன்ன? அவ்வளவு துணிவு உனக்கு? உங்க அப்பன் வீட்டிலிருந்து கொண்டுவந்த சொத்தாடி அது! எத்தனை வருஷமா! நான் பார்த்துப் பார்த்து காப்பாத்திண்டு வந்தேன்? ஒரு நடை போயிட்டு வரத்துக்குள்ளே தொலைச்சுப்பிட்டு உட்கார்ந்திருக்கே யடி!''

"...உன்னை என்ன பண்ணினால்......'' என்று பொழிந்துகொண்டே வந்தவள் சரேலென்று குனிந்தாள். அருகே அடுப்பில் எரிந்துகொண்டிருந்த ஒரு கொள்ளிக்கட்டையை எடுத்தாள். ஜனகம் அப்புறம் நகர்வதற்குள் ஒரு நொடியில் சுரீரென்று கன்னத்தில் சுட்டுவிட்டாள் சிறிது கூடத் தயங்காமல்.

"ஐயோ!'' என்று துடிதுடித்துக்கொண்டு துள்ளிக் குதித்தாள் ஜனகம். அலறினாள், கதறினாள். வலிபொறுக்காமல் பந்துபோல் துடிதுடித்தாள்.

இதைச் செய்த பிறகுதான் கோபம் சிறிது ஆறியதுபோல் இருந்தது ரங்கநாயகி அம்மாளுக்கு. அங்கு நிற்காமல் திரும்பக் கூடத்திற்குப் போய்விட்டாள். கூடத்தில் இருந்த ராமானுஜம் ஜனகத்தின் துடிதுடிப்பைக் கேட்டும் பேசாமல் திண்ணைக்குப் போய்விட்டான்!

ஜனகத்தின் நிலைமையை அதிகம் விஸ்தரிக்கத் தேவையில்லை. க்ஷணப்பொழுதில் தீப்பட்ட தோல் வெந்து புண்ணாகி விட்டது. ஒரே எரிச்சல் தகிக்க ஆரம்பித்தது. ஜனகம் அழுதாள். அவ்வளவுதான் சொல்லலாம். கண்ணீர் கூட ஊறாதபடி அவள் கண்கள் வறண்டு உலர்ந்து போய்விட்டன.

புயல் அடித்து ஓய்ந்துபோன சிறிதுநேரம் கழித்து.

ரங்கநாயகி அம்மாள் மறுபடியும் ஆரம்பித்தாள். இப்பொழுது அவள் தொனியில் ஆத்திரமும் கோபமும் ஒலிக்கவில்லை. ஆனால் கொடூரமும் வெறுப்பும் கலந்திருந்தது.

"இந்தாடா ராமா, இந்த விளக்கை இவள் பொறந்தாத்துலே இருந்து கொண்டுவந்துடல்லே. எங்கம்மா நான் புக்ககம் வரபோது கொடுத்தது. அதை தொலைச்சுட்டு உட்கார்ந்திருக்கு இது. போனது திரும்பிவரப் போறதில்லை. அதை நம்ம எச்சம்மாக்கு கொடுக்கிறேன்னு சொல்லி இருந்தேன். கொடுத்துடணும்; பேசாமே அதுக்கு பதில் ஒண்ணை வாங்கி வச்சுட்டு ஒன் பெண்டாட்டியை மறுஜோலி பாக்கச் சொல்லு. என்ன, தெரியரதா?" என்றாள்.

எச்சுமி அவளுடைய பெண்!

இந்தப் பேச்சு ஜனகத்திற்கு சிறிது ஆறுதலை அளித்ததுபோல் இருந்தது. பிரமைதானோ என்னவோ!

# தாய்

நல்ல முன்னிருட்டுக் காலம். வானத்துக்கும் பூமிக்கும் ஒரே கருப்பாக இருந்தது. தெரு முழுவதும் அஸ்தமித்த ஒரு நாழிகைக்கே ஏற்றிவிட்டுப் போன தெரு யூனியன் லாந்தல் படர்ந்து எரிந்து, கண்ணாடிப் பக்கங்களை ஒரே புகையடையாக அப்பி, ஒளியை வெளியே காட்ட முடியாமல் மங்கிப் போய் கிடந்தது. குளிர்காற்று மூச்சுத் தடுமாற வெளியே வீசிக் கொண்டிருந்தது. தேகத்தில் பட்ட மாத்திரத்தில் ஒரு விட விடப்பை உண்டாக்கி, பல்லை கிட்டிவைத்துக் கொண்டிருந்தது.

மணி பத்துக்கு மேலாகி தெருவெங்கும் நிசப்த மாக இருந்தது. மௌனத்தின் உஸ் ஓசைமட்டும் படம் எடுத்த சர்ப்பத்தின் சீற்றம்போல தொடர்ச்சி யாகக் கேட்டுக்கொண்டிருந்தது. நடுவே நடுவே சுவர்க் கோழியின் கத்தலும், சேர்வதும் நிற்பதுமாக இருக்கும். திடீர் திடீரென ஆகார வேட்டைக்கு வெளியே புறப்பட்ட பல்லிகள் தலைக்கு மேலாக சுவர்ப் பக்கங்களில் பதுங்கிப் பாய்ந்து வால்களை படபட வென்று அடித்துக் கொள்ளும் சப்தம் கிளம்பும். அவைகளிடம் அகப்படாமல் தப்பி யோடப் பார்க்கும் பாச்சை, கரப்புகளின் இறகடிப்பு சப்தமும் சேரும்.

எல்லாம் சேர்ந்து திண்ணையில் படுத்திருந்த என் தூக்கத்துக்கு உலை வைத்துக்கொண்டிருந்தன. கண் களை மூடி மூடித்திறந்து, வெளிப்புறத்திலே, இருட்டின் உட்புறத்திலே கண்களை செலுத்துவதுமாக இருந்தேன்.

வீட்டின் உட்புறக் கூடத்து அறையிலே இருந்து தங்கை குழந்தையின் வீறிட்ட சப்தம் கிளம்பினது.

முறைப்படி அந்த சிசுவுக்கு பால் போட்ட வேண்டிய நேரம் வந்து விட்டது என்பதுதான் அந்த வீறிடலின் அர்த்தம். குழந்தையின் அழுகை தாயை எழுப்ப முடிய வில்லை. அவள் அசந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

'ராஜம்! ராஜம்!' என்று திண்ணையில் படுத்திருந்தவாறே அவள் அறை ஜன்னல் ஓரமாக கூவி எழுப்பி, குழந்தைக்கு பால் போட்டச் சொன்னேன்.

ராஜம் எழுந்து படுக்கையறை விளக்கைப் பெரி தாக்கி குழந்தைக்கு பால் போட்ட ஏற்பாடுகளை செய்யத் தொடங்கினாள். அவள் அறையிலிருந்து மெல்லியதாகக் கிளம்பின வெளிச்சம் என் திண்ணையில் விழுந்து, மங்கலாகத் தெருவிலும் போய் விழுந்தது.

திடீரென்று எதிரே இருந்த ஒரு திண்ணையிலிருந்து ஒரு குழந்தைக் குரல் வீறிட்டுக் கிளம்பினது. பாழடைந்து போய் குடி இல்லாமல் கிடக்கும் அந்த நீண்ட திண்ணை வெகுகாலமாக பிச்சைக்காரர்கள் இரவில் படுத்துக் கொள்ளும் வாசஸ்தலமாக இருந்து வருகிறது. அவர்களை வரவொட்டாமல் தடுக்க திண்ணைக்கு இரும்பு கிராதிபோடும் யுக்தி ஒருவருக்கும் அதுவரையில் தோன்றவும் இல்லை.

அப்படி படுக்கும் ஒரு குடும்பத்தின் குழந்தைதான் அப்போது கத்தினது என்று எனக்கு நன்றாக தெரியும். அந்த குழந்தை அழவும் இரண்டு பெரிய குரல்கள் உடனே எழுந்து அதை தணிக்கும் நீதியில் ஆச்வாசப் படுத்தின. ஆனால் அந்த குழந்தையின் அலறல் மட்டும் நின்றபாடில்லை. இங்கே என் தங்கை, குழந்தையின் அழுகையை அடக்கி பால் போட்டிக்கொண் டிருந்தாள்.

பிச்சைக்காரி விதவிதமான தாலாட்டுப் பாட்டுகள் சொல்லியும் அவள் குழந்தையின் அலறல் நின்றபாடில்லை. கர்ண கடூரமாக இருந்தது எனக்கு. 'இதென்னடா சனியுன் பாதிராத்திரியில்! பீடைகள் என்று வாய்விட்டு முனகினேன்.

உள்ளிருந்து என் தங்கை சிரித்துக்கொண்டே கேட்டாள்: 'ஏன் அண்ணு, பாவம்! நம் வீட்டு பிடாரி கத்தவில்லையோ? அதுக்கு என்ன பண்ணுகிருய்? அதே மாதிரித்தானே, அவர்களை ஏன் விரட்ட வேண்டும்? வயிற்றுக்கு இல்லாமல் அழுகிறதோ என்னமோ? பாவம்!' என்று ஒரு தாயின் மனப்பான்மையில், என் நினைப்புக்கு எதிர்க்கக்ஷி பேசி நியாயம் காட்டிஞள்.

எங்கள் இந்தப் பேச்சுக்கு நடுவில், பிச்சைக்காரக் குழந்தையின் அலறலுக்கு இடையில், திண்ணையில் அதோடு இருந்த இரண்டு குரல்களின் குசுகுசு வென்ற சம்பாஷணையும், வார்த்தைகள் உருப்படி இல்லாமல் என் காதுகளில் விழுந்தது.

ராஜம் விளக்கை சிறிதாக்கிக்கொண்டிருந்தாள். எதிர் திண்ணையிலிருந்து ஒரு அவசரக்குரல் கத்தினது. 'போலே சீக்கிரம். அவுக விளக்கை அணைச்சுப்பிட்டு படுக்கப்போருக. நெளிச்சுக்கிட்டு நடக்கிறே' என்று கேட்டது.

'என்னடா இது,' என்று திண்ணைக்கு வெளியே இருட்டில் ஊடுருவி பார்த்தேன். எதிர் திண்ணையில் மினுக் மினுக்கென்று எரிந்துகொண்டிருந்த விளக்கு வெளிச்சத்தில் ஒரு நிழல் என் பக்கத்தை நோக்கி வருவது தெரிந்தது. அதே சமயம் 'ஏ, அம்மா, சாமி! கொஞ்சம் வென்னித் தண்ணி இருந்தா கொடுக்க மாட்டீங்களா? பிள்ளை பசியாலே துடிக்குது. புண்ணியமுண்டுங்கம்மா உங்களுக்கு. பச்சைப்புள்ளை' என்று முழுக் கெஞ்சலுடன் கேட்டாள் அந்த பிச்சைக்காரி.

'வென்னீராவது, பச்சைத் தண்ணியாவது? இந்த பாதிராத்திரி நேரத்திலே. நல்லா கேட்டே போ, போ. வேலையில்லே' என்று படுக்கையிலிருந்தே நான் கத்தினேன். பிச்சைக்காரி கேட்டு நடு இரவில் ரொம்பப்பேர்கள் அல்லவா சிரத்தையாக அவள் கேட்டதை கொடுப்பார்கள்?

அறை ஜன்னலோரம் நின்ற ராஜத்தின் காதுகளில் இது விழுந்தது. ' சாமி, சாமி, அப்படி சொல்லாதிங்க; புண்யமுண்டு. பச்சைப்புள்ளே ' என்று திண்ணையில் குழந்தையை வைத்துக்கொண்டிருந்த பிச்சைக்காரன் அங்கிருந்தே கெஞ்சினுன்.

அதே சமயம் பிச்சைக்காரியும் "அம்மா, உங்க குழந்தைக்கு இப்போ போட்டினீங்களே அம்மா. அதுலே கொஞ்சமாவது மீதி இருக்குமேம்மா. அதைப் பாத்துட்டுத்தானே ஓடியாந்தேன்" என்று கெஞ்சினுள் மறுபடியும்.

' அட, துப்போடயா நீ வந்திருக்கே ' என்று நான் சிரித்தேன்.

' ஐயோ பாவம்! இருடி, சுடுதண்ணி கொண்டு வந்து தரேன். குழைந்துக்குன்னு கேக்கரு பாதி ராத்திரியிலே ' என்று சொல்லிக் கொண்டே விளக்கைப் பெரிதாக்கி, வென்னீரை எடுத்துக்கொண்டு வாசலுக்கு வந்தாள் ராஜம்.

கையில் கொணர்ந்திருந்த ஒரு தகரக் குவளையில் பிச்சைக்காரி அதை வாங்கிக்கொண்டு ' மகராசியா இருப்பீங்க அம்மா,' என்று வாயார வாழ்த்திக் கொண்டு திண்ணையை நோக்கிச் சென்ருள்.

' அண்ணு, 'குழந்தைக்கு வெறும் வென்னீர்த் தண்ணே போட்டப் போகிருள் பாரு : பாவம் என்ன ஏழை நிலைமை!' என்று கொண்டே ராஜம் கதவைத் தாளிட்டுக்கொண்டு தன் அறைக்குள் சென்று விளக்கை சிறிதாக்கினுள்.

நான் கண்களை மூடிக்கொண்டு போர்வையை ஒரு தரம் காலைச்சுற்றி இழுத்துக்கொடுத்து, போர்த்துக் கொள்ளப்போனேன்.

' ஏ புள்ளே, டப்பாவை எங்கிட்டுலெ வச்சே. குழந்தை துடிக்குது; அல்லாத்தையும் நோண்டிக்கிட்டு இருக்கியே. கூறுகெட்டவளே ' என்று அதட்டிக் கத்தினது அந்த ஆண் குரல்.

'அட, இங்கிட்டுத்தானே வச்சேன்.'

'ஆ, இந்தா ஆப்புட்டிச்சு,' என்று பதில் கொடுத்தது பெண்குரல் உடனே.

நான் திடுக்கிட்டுத் திரும்பி என் கண்களை அந்த திண்ணைப் பக்கம் திரும்பினேன். மினுக் மினுக்கென்று எறிந்து கொண்டிருந்த அந்த மண்ணெண்ணெய் தகர விளக்குக்கு நேரே போய் கையில் ஒரு டப்பாவுடன் உட்கார்ந்தாள் அந்த பிச்சைக்காரி. வெண்ணீர் கொண்டு போன தகரக் குவளையை எடுத்துத் தனக்கு நேரே வைத்துக்கொண்டாள். பிச்சைக்காரனும் குழந்தையுடன் அருகே போய் உட்கார்ந்து கொண்டான்.

படுக்கையில் என்னை அறியாமலே எழுந்து உட்கார்ந்து கொண்டேன். 'ராஜம்! இங்கே வா சீக்கிரம் ஜன்னல் வழியாகப்பாரு' என்று ஓதிய குரலில் கத்தினேன். ராஜம் பரபரப்பாக எழுந்து ஜன்னலுக்கு வந்து எதிர்த் திண்ணையை பார்த்தாள். டப்பாவிலிருந்து குவளையில் எதையோ போட்டுக்கொண்டிருந்தாள் அவள்.

'அட, போதுமிலே குருட்டுக் கழுதை! இருட்டிலே தடுமாறிக்கிட்டு. தண்ணிக்கு அளவு பார்த்துக்கிருமே,' என்று கத்தினன் அந்த ஆண்.

பிச்சைக்காரி பதில் பேசாமல் குவளைக்குள் ஒரு குச்சியை விட்டு, கலக்கி சப்தம் செய்தாள்.

'அண்ணு, அண்ணு, ரொம்ப வேடிக்கையாக இருக்கே' என்றுள் ராஜம் பிரமிப்புக் குரலில்.

எனக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. 'இரு, இதோ வந்து விட்டேன்,' என்று கொண்டே திண்ணையிலிருந்து பாய்ந்து நாலே எட்டில் அந்த திண்ணைக்குப் போய்ச் சேர்ந்தேன். பிச்சைக்காரர்கள் இருவரும் திடுக்கிட்டு என் பக்கம் திரும்பி, 'சாமி, என்னுங்க,' என்றுர்கள்.

'ஒன்றுமில்லே, குவளையிலே போட்டது என்ன என்று பார்க்க வந்தேன்,' என்றேன்.

'ஒண்ணுமில்லீங்க' என்று இழுத்தான் அந்த பிச்சைக்காரன்.

'காண்பிடா பார்ப்போம் என்னதுன்னு,' என்று தோரணையாக கேட்டேன்.

'இல்லீங்க சாமி. குளந்தைக்கு மாவு புட்டீங்க. ஆகாரத்துக்கு,' என்றுகொண்டே அந்த மினுக்கு வெளிச்சத்திலே கையிலிருந்த டப்பாவை புரட்டிக் காட்டினாள் பிச்சைக்காரி.

ஒரே விநாடிதான் அதை உற்றுப் பார்த்தேன். மறு விநாடி திரும்பத் திண்ணைக்குப் பாய்ந்து ஏறிக் கொண்டிருந்தேன்.

'என்ன அண்ணா அது? என்று ஆவலோடு கேட்டாள் ராஜம்.

'நீ குழந்தைக்கு போட்டுகிறாயே அதேதான்.'

'என்னது! ஹார்லிக்ஸா?'

'ஆமாம்.'

ராஜம் ஒரு விநாடி திகைத்துப்போய் பதில் சொல்லத் தெரியாமல் நின்றாள். "என்ன அண்ணா, அவள் இடுப்பிலே கந்தல்; அவன் இடுப்பிலே கந்தல்! தெருவிலே சமைத்துச் சாப்பாடு! இந்த நிலையில்... !"

"ஆனால் என்ன? அவளும் ஒரு தாய் தானே?"

# கோதான பலன்

“இதோ பாருங்கோ! நாம்பளும் இந்த ஊருக்குமாற்றிவந்து மாதம் நாலு ஆச்சு; நல்ல ஜோஸ்யனை கூப்பிட்டுக் கேளுங்கோ என்று ஆயிரம் தடவை முட்டிண்டாச்சு. ஒண்ணையும் காதுலே போட்டுக் கொள்ளவே காணோம்” என்று ரூபாய் அகலம் உள்ள வைரத்தோடுகளை ஆட்டிக்கொண்டு வீடு அதிரும் படியான தணிந்த குரலில் கூறினாள் பார்வதவர்த்தினி அம்மாள்.

திடீரென்று லஸ்கர் சோமு பக்கம் திரும்பி “அடே சோமு! ஊரிலே நல்ல ஜோஸ்யம் பார்க்கிற அய்யர் யாராவது இருந்தால் கூட்டிண்டுவாயேண்டா. உனக்கு ஒரு எழவும் தெரியாது. ஜடம் மாதிரி நின்றுண்டு இருப்பே” என்று அவனுக்கு ஒரு சூடு கொடுத்தாள்.

தகரக்கடைக்காரன் தகரம் விழுந்த சப்தத்தை கேட்டு எவ்வளவு திடுக்கிட்டு எழுந்திருப்பானோ அதைப் போலவே இந்த தொனியை கேட்டுக் கேட்டுப் பழகிப்போன எஞ்சினீயர் ஹிமோத்கிரி அய்யர், “என்ன இது! போனமாதம்தான் வாத்தியார் குப்பு சாமி சாஸ்திரிகளை கூப்பிட்டு ஜோஸ்யம் எல்லாம் பார்த்து ஜாதகத்திலே பீடை இருக்குன்னுட்டு தினசரி பத்து பிராமணாளுக்கு ஒவ்வொரு ரூபாய் தக்ஷிணை கொடுத்து ஹோமம் எல்லாம் பண்ணி ஒரு வாரம் நடத்தி இருநூறு ரூபாய் சிலவழிச்சாச்சே! இன்னும் என்ன?’ என்றார்.

“ஆமாம். அது ஒண்ணு செஞ்சா எல்லாம் ஆயி டுத்து. கர்மாந்திர பீடை எவ்வளவு இருக்கோ அத்

தனைக்கும் பீடா பரிகாரம் செய்யவேண்டாமோ?" என்றாள் அம்மாள். மேலும் இந்த ரீதியிலேயே பேசிக் கொண்டிருந்தார்கள். சாய்வு நாற்காலியில் பத்திரிகை படித்துக்கொண்டிருந்த எஜமானனுக்கு விசிறிக் கொண்டிருந்த சோமு; இதையெல்லாம் கேட்டு சிரிப்பை அடக்கிக் கொண்டிருந்தான்.

இஞ்சினீயர் ஹிமோத்கிரி அய்யருக்கு வயது ஐம்பதுக்கு சமீபமாக இருக்கும். சூப்ரவைஸராக இருந்து அஸிஸ்டெண்ட் இஞ்சினீயரானவர். அவர் உத்தியோக லக்ஷணத்தைப்பற்றி பலர் பலவாறாகப் பேசிக்கொள்வார்கள். சிலர், 'தனக்கு இரண்டு கைதானே பகவான் கொடுத்திருக்கிறார்; அதிக கைகள் கொடுக்கவில்லையே' என்று அவர் வருத்தப் படுவதாக புரளி கூறுவார்கள். இந்தச் சிறிய காலத்தில் அவர் இவ்வளவு பணம் எப்படி சம்பாதித்தார் என்பது மட்டும் எல்லோருக்கும் ரொம்ப சந்தேக மாகவே இருந்தது. போகிறது, அதன் பூர்வகதையை நாம் ஏன் தூண்டவேண்டும்?

இவ்வளவு இருந்தும் அவருக்கு குழந்தை இல்லாதது ஒரு பெரிய குறை; அதற்காகத் தான் பர்வதவர்த்தினி அம்மாள் இவ்வளவு தூரம் பேசினது. இயற்கைதானே! ஒரு ஊரில் சதிபதிகள் இருவரும் அரசமரத்தைச் சுற்றி சுற்றி மரத்தின் வேரே ஆடிப்போய் விடுமோ என்று சந் தேகிக்கும்படி யாகிவிட்டது. அரசமரங்கள் இருக்கும் இடங்களில் எல்லாம் நாகப்பிரதிஷ்டை பண்ணி கல் தச்சருக்கு நல்ல வேலை ஏற்பட்டது.

அன்றைய இரவு சம்பாஷணையின் முடிவாக மறு நாள் காலமே சுப்பண்ணு வாத்தியார் வந்து சேர்ந் தார்.

'வாங்கோ ஜோஸ்யர்வாள்! வரணும் வரணும். அடியே, வாத்தியாருக்கு ஆசனப் பலகையை எடுத்துப் போடு' என்றார் இஞ்சினீயர்.

பெரிய இடத்து தயவாகையால் வாத்தியாரும் அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டு வணக்க ஒடுக்கமாக உட்கார்ந்து கொண்டார். ஹிமோத்கிரி அய்யர் சற்று எட்டி, கீழே உட்கார்ந்து கொண்டார். பர்வதவர்த்தினி அம்மாள் எதிரே வந்து நின்று கொண்டாள்.

. வாத்தியார் சம்பிரதாயப்படி நான்காம் நம்பர் மடைரிப்பேரிலிருந்து, ஊரணியில் சாண் ஜலம் போர வரை பேசி முடித்தபிறகு, ஹிமோத்கிரி அய்யர் முன்னால் எடுத்துவைத்த ஜாதகங்களை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு, இரண்டு பக்கமும் நூல் கட்டிய மூக்குக் கண்ணாடியை மாட்டிக்கொண்டு விரித்து பார்க்க ஆரம்பித்தார்.

பருவத வர்த்தினி அம்மாள் குரல் உச்சஸ்தாயில் கேட்டது. "வாத்தியாரே! சித்தே நன்னா ஜாதகங்களை பாருங்கோ. என்ன பீடை இருக்கோ இப்படியெல்லாம் ஆட்டிவைக்கிறது. ஹூம்" என்று கூறிப் பெருமூச்சு எறிந்து கொண்டாள்.

வாத்தியார் பழம்பெருச்சாளி அல்லவா? தவிரவும் அவர்களுக்கு குழந்தையில்லை என்பதும் அரசமரங்களை எல்லாம் அடியோடே பிடுங்கி இருக்கிறார்கள் என்கிறதும் ஊரெல்லாம் அடிபடுகிறதே. கேட்கவேண்டுமா? அசட்டுச் சிரிப்போடு, 'அதற்கென்னம்மா, எல்லாம் பகவத் சங்கல்பம். அவர் அருள் இருந்தா எல்லாம்தானே சித்திக்கிறது. நம்ம கையிலேயா இருக்கிறது? எல்லாம் அவன் கிட்டத்தான், அந்த சர்வேஸ்வரன் கிட்டத்தான் ஒப்பிச்சுடணும். நன்னா பார்த்துச் சொல்றேன்" என்றார்.

வாத்தியாயர் ஜோஸ்யக் கணக்குக் கடலிலிருந்து மூழ்கி வெளியே வர கொஞ்ச நேரம் ஆகியது. கடைசியில் ராகு அந்த இடத்தில் இருக்கிறான். கேது இங்கே இருக்கிறான். அவனைப் இவன் பார்க்கிறான். இவன் அவனைப் பிடித்துக் கொண்டிருக்கிறான் என்றெல்லாம்

சொல்லிக்கொண்டே வந்து, அவர்கள் இருவருடைய ஜாதகத்தில் பீடை இருக்கிறதென்றும், அதற்கு நிவாரணமாக நல்ல லக்ஷண முள்ள கோ ஒன்றை தானம் செய்து விட்டால் பீடை பரிகாரமாகி விடுமென்றும், அது ரொம்ப உசிதம் என்றும் பகவத் சங்கல்பத்தில் பேஷாக எல்லாம் கைகூடிவரு மென்றும் முடிவு கூறினார்.

ஹிமோத்கிரி அய்யர் அவ்வளவையும் கவனமாக கேட்டுக்கொண்டிருந்தார். பர்வதவர்த்தினி அம்மாளோ வாத்தியார் பாதி கூறி வாய் மூடுவதற்குள் "அடேயப்பா இதுதானா பிரமாதச் சிலவாயிட போயிடறது? எவ்வளவு ஆயிட்டாத் தான் என்ன? நாளைக்கே செய்துட்டா சரியாப் போயிடுத்து' என்று பல் அத்தனையும் வெளியே தெரிய சந்தோஷம் தாங்க மாட்டாமல் கூறினாள்.

கோதானம் செய்வதென்று ஏற்பாடாகிவிட்டது. மறுநாள் காலமே இஞ்சினீயர் வேலை நிமித்தம் புறப்படப்போகும் சமயம், கண்ட்ராக்டர் கண்ணாயிரம் எதிரே வந்துநின்றார். வாங்கோ பிள்ளைவாள்! உங்களைத்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். சமயத்தில் வந்து விட்டீர்கள்" என்றார்.

'என்னது'...என்றுகொண்டே கண்ணாயிரம் பிள்ளை அசட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டு தோள் பட்டைகளை தடவிக்கொண்டார். அதே சமயம் பர்வதவர்த்தினி அம்மாளும் வாசலுக்கு வந்து சேர்ந்தாள்.

'உங்களுக்கு ஆயிசு நூறு' என்றாள் அவரைப் பார்த்து.

அப்பொழுதே கண்ணாயிரம் பிள்ளைக்கு வயிற்றில் புளிகரைக்க ஆரம்பித்து விட்டது. ஏதோ புதுச் சிலவுக்கு வழி வந்துவிட்டது என்று தீர்மானித்துக் கொண்டார். ஆயினும் அவரும் ஒரு பழம் பெருச்சாளி தானே. இப்படி எத்தனை தரம் பார்த்திருக்கிறார்!

'ஏது, என்ன விஷயங்க' என்று இழுத்தார்.

அம்மாள் ஏதோ பேச வாயெடுத்தாள். அய்யர் இடை மறுத்து "ஒண்ணுமில்லே. இந்தப் பீடை ரொம்ப நம்ம குடும்பத்தையே வெகு காலமாக வாட்டிண்டு வருது. ஏதாவது பரிகாரம் செய்யணும்னு பஞ்சாங்க அய்யரை கூப்பிட்டு கேட்டது."

'ஆமாங்க ஏதாவது அப்படி செஞ்சாத்தாங்க வீட்டுக்கு க்ஷேமம். நான் கூட போன வருஷம் அப்படி......

'அதான், அதான் நம்ப சாஸ்திரிகள் இருக்காரில்லேயோ. அவர் சொன்னார், பசுமாடு ஒண்ணு தானம் பண்ணினு நலமின்னு,' என்றாள் அம்மாள் நடுவே குறுக்கிட்டு.

'அதற்கென்ன? செய்திட்டா போகுது. 'எவ்வளவோ நமக்கு செலவழியுதிங்க" என்று பிள்ளைவாள் கூட ஒத்துப்பாடினார்.

'ஏன் பிள்ளைவாள், நல்ல பசுமாடா ஒண்ணு வேணுமே. எங்கே வாங்கலாம்? நீங்க தான் இந்த ஊராச்சு, எல்லாம் தெரியும்' என்றார் அய்யர்.

'அவா வூருக்குத்தானே நாம்ப வந்திருக்கோம். அவர் தான் சம்பாதித்து கொடுக்கணும். நமக்கு என்ன தெரியும்,' என்றாள் அம்மாள்.

'அதுக்கென்னங்க, அடுத்தவாரம் சொல்லிவிட்டு நல்ல பசுமாடா மாட்டுச் சந்தையிலே நான் வாங்கிட்டு வரச் சொல்றேன். உங்களுக்கு அதைப்பற்றி கவலையே வேண்டாம்' என்றார் கண்ணாயிரம் பிள்ளை. உள்ளூர அவர் பட்ட வேதனை அவருக்குத்தான் தெரியும். ஒரு நோட்டு எடுத்து வைத்து விடவேண்டியதுதான் என்று மனதில் பேசிக்கொண்டார்.

'பின்னே என்ன? அடுத்த வாரம், மாட்டைக் கொண்டுவந்து நம்பாத்து வாசல்லெ கட்ட வேண்டியது பிள்ளைவாளைச் சேர்ந்தது' என்று இருவரும் கூறிய பின், பிள்ளைவாளும் ஒத்துக்கொள்ளவே, இஞ்சி

னியர்—கண்ட்ராக்டர் சம்பாஷணை உத்தியோகத் துறையில் இறங்கியது.

ஒரு வாரம் என்பது இரண்டு வாரமாகிவிட்டது. இதற்குள் இஞ்சினியரும் அவர் சஹதர்மிணியும் பல தடவைகள் பிள்ளையை அது சம்பந்தமாகக் கேட்டு விட்டார்கள். கடைசியில் பிள்ளைவாள் நல்ல பசு மாடாக—ஒருபடி பால் கறக்கும்—கொண்டுவந்து பங்களாவில் கட்டிவிட்டார். அதற்கு வைக்கோல், பருத்திக் கொட்டை வகையறுவுக்கு எல்லாம் தக்க ஏற்பாடு செய்துவிட்டார். பிறகுதான் இஞ்சினியருக் கும் முக்யமாக பர்வதவர்த்தினி அம்மாளுக்கும் பூரண திருப்தியாய் விட்டது.

சுப்பண்ணு வாத்தியாரால் ஒரு நல்ல நாள் பார்க் கப்பட்டு, பிரமாதமான தடபுடல்களுக்கு இடையே கோதான விமர்சை நடைபெற்றது. சுப்பண்ணு வாத்தியார் குறிப்பிட்ட ஆளுக்கு லாட்டரி விழுந் தது.

ஆனல் அந்த பசுமாடு குப்பண்ணு சாஸ்திரிகள் தோட்டத்திற்கே போய்ச் சேர்ந்ததென்பது அவர்கள் யாருக்கும் இன்று வரை தெரியாது; தானம் என்று கொடுத்தாகிவிட்டது. யாருக்குக் கிடைத்தால் என்ன ?

கொஞ்சநாட்கள் ஆயிற்று. கோதானம் செய்த தைப்பற்றியும் அதனுல் ஏற்பட இருக்கும் பலனைப் பற்றியும் இஞ்சினீயர் தம்பதிகள் அடிக்கடி சந்தோ ஷத்தோடு பேசிக்கொண்டிருப்பார்கள். ஆரம்பத்தில் ஒருசமயம் எஜமான் பிள்ளைவாளிடம் மாடு என்னவிலை என்று கேட்டார். "நூறு ரூபாய்க்கு ஐந்து ரூபாய் குறைவு" என்ருர் பிள்ளை. "நானும் அப்படித்தான் நினைச்சேன். உயர்ந்த ஜாதி மாடு இல்லையோ ?" என் ருர் எஜமான். அதற்குமேல் ரூபாய் விஷயமாக பேச்சு கிளம்பவில்லை. ஆரம்பத்தில் கொஞ்சம் நப்பாசை வைத்திருந்தார் பிள்ளைவாள். கூடிய சீக்கிரம் விஷயம்

புரிந்துபோய்விட்டது. ரூபாய் கிடைக்கும் என்ற ஆசையை விட்டுவிட்டார். எத்தனையோ வோடு இதுவும் ஒன்ருகப் போய்விட்டது. எஜமானும் இதைப்பற்றி நினைக்கவே இல்லை.

இதன் பிறகு சுமார் ஒரு வருஷகாலம் ஆகிவிட்டது. கண்ணுயிரம் பிள்ளை ஒரு தினம் தட்டில் வெற்றிலை பாக்கு பழம் கற்கண்டு சக்கரையுடன் எஜமானைப் பார்க்க வந்து சேர்ந்தார். "என்ன பிள்ளைவாள் விசேஷம்? தடபுடலாக இருக்கிறதே!" என்ருர் இஞ்சினீயர் எஜமான்.

"ரொம்பநாளாக குழந்தை இல்லாமே இருந்து, எனக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்குங்க. எஜமானை கண்டுட்டுபோக வந்தேன்" என்ருர் பிள்ளைவாள்.

"ரொம்ப சந்தோஷம் பிள்ளைவாள்!" என்று பாராட்டினுர் எஜமான்.

அதற்கு மேல் அவருக்கு ஒன்றும் பேசத் தோன்ற வில்லை.

# வந்தே மாதரம்

இருட்டு, தன் போர்வையை விரித்து நிலப்பரப்பு முழுதும் ஒரு நிழற்சித்திரம் வரைந்து தள்ளி இருந்தது. முழு அமைதி என்று சொல்லமுடியாது. முனக்கமான சுற்றுணர்ச்சியோடு கூடின கரகரப்புத் தட்டும் மௌனம் வீதி முழுவதும் பரவி இருந்தது. கொஞ்சம் முன்புதான் ஏற்றி இருந்த தெருச் சிம்ணி விளக்குகளில் ஒன்று அணைந்தும், ஒன்று படர்ந்து எரிந்தும், வேறொன்று அணையும் சமயத்திலும் இருந்தன. பாதிராத்திரி ஆவதற்கு இன்னும் வெகு நேரம் இருந்தது.

பனிக்குப் பாதுகாப்பாக ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டு மாணிக்கம் தன் வீட்டு வாசலின் இரும்புக்கிராதிக்கு உட்புறம் ஒட்டிப் போட்டிருந்த பெஞ்சியில் படுத்துக் கொண்டிருந்தான். அயர்ந்த தூக்கத்தின் அடையாளமாக ஒரு மெல்லிய குறட்டை அவன் சுவாசத்தோடு கலந்து வந்துகொண்டிருந்தது. பகலில் வெகு நேரம் செய்த வேலையின் அலுப்பால் கண்ணிமைகள் நெருங்கி மூடிக்கிடந்தன.

திடீரென எங்கிருந்தோ கிளம்பின ஒரு ரீங்கார சப்தத்தைக் காற்று அவன் காதுகளில் கொண்டுவந்து தாக்கினது. தூக்கம் லேசாகச் சிதைபட்டது; மாணிக்கம் புரண்டு கொடுத்தான். சில விநாடிகளில் அந்தச் சப்தம் வரவர அழுத்தமாகி உருப்படி இல்லாமல் அவன் காதுகளில் முன்னைவிட வேகமாக விழுந்தது. தூக்கப் புலன்கள் உண்மை அறிய முடியாமல் அவஸ்தைப்பட்டது போல அங்கங்களை ஆட்டி அசைத்து விவரமில்லாத ஒரு பதைப்புக்

காட்டினுன் மாணிக்கம். தூக்கம் சிதறின கண்களைப் பலவந்தமாக திருகிக்கொண்டு விழித்தான்.

தூக்கக் கிலக்கத்தில் ஸ்பஷ்டமாகப் புரியாமல் விழுந்த அந்த ரீங்கார சப்தம் இப்போது அவன் காதுகளில் தெளிவாக விழுந்தது. அது என்னது, எங்கிருந்து வந்தது என்று யூகிக்க முடிந்தது. உடனே உருப்படியான வார்த்தைகள் உத்வேகத்துடன் தெறித்து வந்து விழுந்தன. படுக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்தான். ஒரு விநாடிக்குத்தான். அந்த வார்த்தைகளின் உச்சரிப்பு முறையிலிருந்து எழுந்த சங்கீதம் அவன் நரம்புகளில் பாய்ந்ததோடு ஹ்ருதயத்தையும் போய்க் குடைந்தது.

அதற்குமேல் படுக்கையில் அவனுல் நிதானிக்க முடியவில்லை. இழுத்துப் போர்த்தி இருந்த போர்வையை விரல்களால் சுருட்டி வீசிவிட்டு எழுந்து, கதவைத் திறந்து வெளியே வந்தான். கிட்டத்தில் மூலைதிரும்பின தெருக்கோடியில் கிளம்பின ஒரு 'கியாஸ் லைட்' வெளிச்சத்தைக் கண்டு அவன் கண்கள் கூசின.

அந்த ஒளியில் கலந்துவரும் உருவங்களோடுதான் உறவு கலந்து வந்தது அந்தக் கோஷ்டி சங்கீதம். இருட்டின் சோகத்தில் மௌனத்தைப் பீறிக்கொண்டு கிளம்பும் ஏக்க வார்த்தைகள்! 'என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்' என்று அலறிக் கேட்கும் அர்த்தமும், தூய்மையையும், அஹிம்சையையும் வற்புறுத்திச் சொல்லும் ஒரு வலுவும் அந்தத் தொனியில் இருந்தன! நிழலும் வெளிச்சமும் கலந்து விழும் ஒரு கொடி முன்னணியில் உயரே மந்தமாகப் பறந்து கொண்டிருந்தது. கீழே இரண்டு கைகளுக்கு இடையில் அணைத்துப் பிடிபட்டு இருக்கும் சுதந்திரத்தை குறிக்கும் உருவச்சின்னம் ஒன்று. அதற்கு மரியாதை செலுத்தும் பாணியில் அணிவகுத்து வந்தது அந்தக் கோஷ்டி.

முதல் பார்வையிலேயே ஏற்பட்ட ஒரு புல்லரிப்புடன் மாணிக்கம் மேலும் கூர்ந்து அதையே பார்த்தான். அந்த வார்த்தைகள் அத்தனையும் அவன் கேட்டு ஒரு காலத்தில் உச்சரித்த வார்த்தைகள்! அதே வேகரீதியிலுள்ள குரல்கள்!

திடீரெனப் பாட்டு முறிந்து 'வந்தேமாதரம்!" என்ற கோஷம் கோஷ்டியிலிருந்து கிளம்பியது. பல குரல்கள் அதை எதிரொலித்தன. மாணிக்கத்தின் உள்ளத்திலும் அதன் எதிரொலி கிளம்பினதுபோல் அவனது முகக்குறி பரபரப்புக் காட்டியது. ஆனால் அது ஸ்வப்னக்குரலாகவே நின்றுவிட்டது. முதல் ஒலியின் வலு, வாய்விட்டுக் கிளம்பாத அந்த மௌனமான எதிரொலியில் இல்லை.

திரும்பவும் மாணிக்கம் பார்வையைக் கூராக்கினான். 'வந்தே மாதரம்!' மறுபடியும் வீரிட்டுக் கிளம்பினது. அதைக் கேட்டதும் ரத்தம் அவன் நரம்புகளில் எகிறிப் பாய்ந்தது. தானும் வாய்விட்டுக் கத்திவிடலாமா என்ற உணர்ச்சி வேகத்தில் தவிப்புக் காட்டினது போல் இருந்தது, முகம் வெளிக்கிளம்பின குழப்பம். இத்தனை குரல்களுக்கும் இடையில் தான் மட்டும் ஏன் மௌனமாக இருக்கவேண்டும் என்று அவன் உள்ளூற நினைத்தானோ என்னவோ?

ஆனால் அவர்கள் எல்லோரும் அதற்குள் இருந்தவர்கள்; அவனோ வெளியே இருந்தான். அவர்கள் அத்தனைபேரும் அந்தச் சோக நாடகத்தின் நடிகர்கள்; அவன் அந்த நாடகத்தை ரசித்துக் கொண்டிருக்கும் கூட்டத்தில் ஒருவன். அவன் எப்படி அதில் நடிப்பது சாத்யம்? இந்தமாதிரி நினைப்புகளே அவன் மனத்தில் அப்போது வெகுதூரம் ஓடி இருக்கலாம். ஆனால் அவற்றின் முடிவுதான் என்ன?

'வந்தேமாதரம்!' என்று மூன்றும் தடவையும் காற்றில் சுருதி சேர்த்தாகிவிட்டது.

மௌனம். மாணிக்கத்தின் உதடுகளிலிருந்து சங்கீதம் கிளம்பவில்லை. கோஷத்தின்பின் கோஷமாக எழுந்தும், மாணிக்கத்தின் உச்சரிப்பு அதனோடு கலக்கவில்லை.

ஊர்வலம் இப்போது அவனை நெருங்கி வந்து விட்டது. உற்சாகமும் புதுமையும் நிரம்பி இருந்த அந்தக் காலத்திலோ? ஊர்வலம் தன்னிடம் வரும் வரை அவன் காத்திருக்கவில்லை; அவனால் அப்படியிருக்க முடியவேயில்லை. அதைத் தேடி அவன் ஓடினதுதான் இந்த நிமிஷமும் அவனுக்குத் திருப்தி கொடுப்பது. வாழ்க்கையின் சிறந்த பருவம் இருக்கும் இப்போதும் எவ்வளவு தெளிவாக அவனுக்கு அது ஞாபகம் இருக்கிறது!

அவனுடைய இளம் சின்னக் கால்களில் அப்போது குதூகலம் நிரம்பி இருந்தது. தெருவில் பம்பரம் ஆடிக்கொண்டிருக்கும்போதுதான் இன்று அவன் பார்க்கும் அதே வீதியில் ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது. அப்போது இருட்டு இல்லை; சாயந்திர சமயம். எங்கே போகவும் அவனுக்குச் சுதந்திரம் இருந்தது.

"ஊர்வலம் டோய்! காந்தி படம்!" என்று எம்பி எம்பிக் கத்திக்கொண்டே அதை நோக்கிப் பாய்ந்து சென்றான். கூட்டத்தைத் துளைத்துக்கொண்டு முன்னால் முண்டிப்போய் நின்றதுதான் அவனுக்குத் தெரியும். கூட்டம், படம், கொடி இவை மாறி மாறி அவன் வியப்பு நிறைந்த கண்களில் விழுந்துகொண்டிருந்தன. இரண்டு சின்னக் கால்கள் தாமாக அந்தக் கூட்டத்தில் எட்டிப்போட்டு முன் நடந்தன.

"வந்தேமாதரம்! பாரதமாதாகி ஜே!" புதிய கீச்சுக்குரல் உச்சஸ்தாயியில் கிளம்பிக் கூட்டத்தோடு கோஷித்தது.

"ஸார்! இந்தப் பயலுக்கு இருக்கிற உற்சாகம் எவ்வளவு பாருங்கோ" என்றது கூட்டத்திடையே

ஒரு குரல். "அப்படிப்போடு தம்பி, இன்னும் பலக்க."—யாரோ ஒருவன் முதுகைத்தட்டிக் கொடுத்தான். கேட்க வேண்டுமா அந்தச் சின்ன உள்ளத்துக்கு ?

"அந்தப் பையனை முன்னாலே விடுங்கோ" என்றது ஒரு குரல்! "இந்தா தம்பி, இந்தக் கொடியைக் கையில் பிடித்துக் கொள்" என்று அணைத்து ஒரு சின்னக் கொடியை அவன் கையில் கொடுத்தார்கள். குதி போட்டு வாங்கிக்கொண்டான் மாணிக்கம். ஊர்வலப்போக்கில்தான் என்ன உற்சாகம், அப்போது அவனுக்கு! கோஷத்தோடெல்லாம் உடலே எம்பித் தாவினது. அவனுக்கு ஏற்பட்ட வெறியில் தொண்டைக் கமறலைக்கூடக் கவனிக்கவில்லை.

"இருட்டி நாழி ஆகிறது. தம்பி! வீட்டுக்குப் போ. நாழி ஆச்சு" என்றதுந்தான் வீட்டு ஞாபகமே அவனுக்கு வந்தது. ஊர்வலமும் சுற்றிக்கொண்டு வீட்டிற்குச் சமீபம் வந்தது. ஒரு தொண்டன் அவனை வீட்டுக்கருகில் விட்டுப்போனான். பாய்ந்து படியேறின மாணிக்கம் மெதுவாகத் தலையை உள்ளே நீட்டினான்.

"எங்கேடா போயிருந்தே, இந்நேரம் வரைக்கும்?" என்று அதட்டிக் கேட்டார் நாயனா.

"ஊர்வலத்தோடே, நாயனா. காந்தி படத்தோடே."

"என்னது? ஊர்வலத்தோடேயா! இங்கே வா." ஓங்கி ஓர் அறை கன்னத்தில் விழுந்தது.

"இல்லை, நாயனா!" மாணிக்கம் கை அடிபட்ட கன்னத்திற்கு ஏறியது.

"என்னடா, 'இல்லை நாயனா.'" மற்றொரு கன்னத்தில் இரண்டு அறைகள் அடுத்துப் பளீரென விழுந்தன.

"இனிமேல் போகல்லே, நாயனா." கண்களி

னின்று நீர் பெருக அழுதுகொண்டு கன்னங்களை மாணிக்கம் தடவிக் கொண்டான்.

இந்தச் சம்பவத்தின் சாயல் விழும் முகத்தின் முன் இப்போது ஊர்வலம் வந்துநின்றது. முன்பு அவன் போக்குக்குத் தடைகட்டின சக்தி இன்று அங்கே இல்லை; அந்தச் சின்னங்கள் அவனுக்கு நேர் எதிரில்தான் இருந்தன. ஆனாலும் அவன் ஓர் எட்டுக் கூட நகர்ந்துபோய், அவற்றை அன்று மாறி மாறிப் பார்த்து வியந்ததுபோல் இன்று பார்க்கவில்லை. அவனுக்குள்ளே புழுங்கிங்கிடந்த உணர்ச்சி, வேகத்தோடு வெளி வர முயன்றதுபோல எதிரே கிளம்பிய ஒவ்வொரு கோஷத்தின் தீவிரமும் அவனைக் குலுக்கி எடுத்தும், அவன் உதடுகள் ஒப்புக்குக் கூட அசைய வில்லை. ஒரு ஜ்வரவேகத்துடன் நின்று கூட்டத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். 'நீயும் போயேன்' என்ற ஓர் அசாதாரண சக்தியும் அவனை உந்திப் பிடித்துத் தள்ளவில்லை. நின்ற இடத்திலேயே கால்களை மாற்றிப் போட்டுக்கொண்டான். அவ்வளவுதான்.

ஊர்வலம் அவன் எதிரிலிருந்து நகர ஆரம்பித்து விட்டது. 'என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்' என்ற வரி சோகவுணர்ச்சியின் பிரலாபத்தோடு புறப் பட்டது. மாணிக்கத்துக்கும் அதற்கும் இடையே இருந்த தூரம் விஸ்தாரப்பட்டது. போகும் 'கியாஸ் லைட்'டின் வெளிச்சமும் நிழலும் மாறி மாறி அவன் முகத்தில் சுழன்றன. வழி பிசகாமல் இன்னமும் அதையே மாணிக்கம் பார்த்து நின்றான்.

அன்று ஊர்வலம் தன்னிடம் வரும்வரை காத் திருக்கவில்லை. இன்று தன்னை நெருங்கித் தாண்டிப் போயும் அவன் அதில் கலக்கவில்லை. ஏன் இந்த மாறு தல்? கன்னத்தில் அறைய நாயனுதான் இல்லையே? ஏன் இந்தத் தயக்கம்? அன்று இருந்த உணர்ச்சிக்கு இம்மி கூடக் குறைவில்லையே இன்று. அப்படி இருக்க இந்தப் புறக்கணிப்பு ஏன்?

ஊர்வலம் தெருக்கோடிக்குப் போய்க்கொண்டிருந்தது. மாணிக்கம் இன்னும் நின்ற இடத்தை விட்டு அசையவில்லை. முகமாறுதலின் விளைவாகத் திருகின சிரிப்பு அவன் உதடுகளில் படர்ந்தது. தனக்குள் சொல்லிக்கொண்டான்: "அதோ போய்விட்டது ஊர்வலம் தூரத்தில். ஆமாம்; ரொம்ப தூரத்தில். அதைப்போய் என்னுல் பிடிக்கமுடியாது. இங்கிருந்து தான் பார்க்கணும்."

ஊர்வலம் மூலைக்குப் போய்விட்டது இதற்குள். மாணிக்கம் மறுபடியும் தனக்குள் சிரித்தான்; "ஹூம்! முட்டாள்! கிட்ட இருக்கும்போது அடி நகர்த்தவில்லை. தூரத்தில் போய்விட்டதென்று இப்போது கவலை" என்று பரிகசித்துக்கொண்டான்.

தனக்கு ஊர்வலம் எவ்வளவு கிட்ட இருந்தாலும் இனி என்றுமே வெகுதூரந்தான் என்று அப்போது மாணிக்கத்துக்கு நிச்சயப்பட்டது. அதற்கு அவன் ஆசைப்படுவதில் பிரயோஜனம் இல்லை. அன்று தொலைவில் போன ஊர்வலத்தில் ஆர்வம் காட்டுவதைத் தடை செய்து நாயனு தண்டனை கொடுத்தார். இன்று கிட்ட வந்த ஊர்வலத்தில் ஆர்வம் காட்டத் தன் வாழ்க்கையே தடை செய்திருக்கிறது. மீறினுல் கிடைக்கும் தண்டனை தெரியாதா அவனுக்கு?

அந்தத் தண்டனைக்கு அவன் தயாராக இல்லை. கோழை என்று அவனுக்குப் பேர் கிடைக்குமானுல் அதைப்பற்றியும் அக்கரைப்படவில்லை அவன். வாழ்க்கை செய்துவிட்ட மாறுதலுக்கு, நாயனுவின் தடையை விடப் பெரிதான வாழ்க்கை பூட்டி இருக்கும் விலங்குக்கு, அவன் என்ன செய்யமுடியும்? வயிற்றுப் பிழைப்பு அவனைக் கட்டுப்படுத்தி விட்டது.

ஊர்வலம் அதோ மறையப் போகிறது. வேறு திசைக்கு விளக்கு வெளிச்சம் மாறினதற்கு அறிகுறியாக மாணிக்கத்தின் உருவத்தில் இருட்டு விழுந்து மூடினது.

"வந்தேமாதரம்!" கடைசியாக மறுபடியும் அந்தத் தொலைவிலிருந்து கேட்டது.

'வந்தேமாதரம்' என்று உள்ளூறச் சொல்லிக் கொண்டே வீட்டிற்குள் காலடி எடுத்துவைத்தான் மாணிக்கம். நிம்மதி—இல்லை, வேதனை—இதில் எது வென்று சொல்ல முடியாத ஒரு பெருமூச்சுடன் கதவைத் தாழிட்டு விட்டுப் படுக்கையில் படுத்துப் போர்வையை இழுத்து விரித்தான்.

ஒரு ரீங்கார சப்தம் அவன் காதுகளில் கிளம்பினது.

'ஷ்ஷ்!' என்று கையை ஒருதரம் விசிறிவிட்டு மாணிக்கம் கண்களை மூடிக்கொண்டான்.

# செய்த கணக்கு

'கிட்டு, கிட்டு,' என்ற உரத்த குரல் மேல் மாடியில் இருந்து கேட்டது. அதைக் கேட்டதும் குழந்தை ராதாவுடன் 'கியாக்கியா தம்பாளம்; கீச்சுக் கீச்சு தம்பாளம்', விளையாடிக்கொண்டிருந்த கிட்டு கையில் இருந்த வாழைப்பூ மடலை அப்படியே போட்டுவிட்டு இதோ வந்துட்டேன் அப்பா', என்று கத்திக் கொண்டே மாடிக்கு ஓடினான்.

ஓடின அவசரத்தில் 'இந்தக் கிட்டு எப்போதும் இப்படித்தான். பாதி ஆட்டத்திலே ஓடிப்போயிடுவான். இதான் அவன்கூட விளையாடக்கூடாது என்று ராதா கோபத்துடன் முனகிக் கொண்டது அவன் காதுகளில் விழவில்லை. அவன் கவனம் பூராவும் அப்பாவின் அழைப்பில்தான் இருந்தது.

சமையல் அறையிலிருந்து குதித்தோடி வந்த அவன் வேகம் மாடிப்படியை அடைந்ததும் தடைப்பட்டு விட்டது. அவனால் வேகமாக படியேற முடியவில்லை. மெள்ள மெள்ள காலடி எடுத்து வைத்து பயத்தால் ஹிருதயம் பட படத்துக்கொள்ள படி யேறிச் சென்றான். கடைசிப் படியில் கால் வைக்கும்போது அவன் மனதில் திகில் தோன்றி உற்சாகம் குறைந்து விட்டது.

கிட்டு அறையில் நுழையும் போது விஸ்வநாதய்யர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவரது கையில் கிட்டுவின் கணக்கு புஸ்தகம் இருந்தது. அதன் பக்கங்களை புரட்டிக் கொண்டிருந்தார். கிட்டு அவரை நெருங்கி 'எதுக்கு அப்பா கூப்பீட்டீர்கள்,' என்று கேட்டுக்கொண்டே நாற்காலிக்குப் பின் நின்றான். பயத்தால் பீடிக்கப்பட்டிருந்த அவன் முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பின.

உருட்டி விழித்த கண்களுடன் அப்பா அவனை நோக்கி, 'ஏண்டா கணக்குப் போடாமல் விளையாடிக் கொண்டா இருக்கிறாய், ஹும்!' என்று அதட்டிக் கேட்டார்.

அந்தப் பார்வையும் தொனியும் சேர்ந்து கிட்டுவுக்கு கொஞ்சநெஞ்சம் இருந்த தைரியத்தையும் போக்கி விட்டது.

'' இல்லே அப்பா, செய்திருக்கேன்' என்று நடுங்கிக் கொண்டே பதில் கூறினான்.

' எடுத்துக்கொண்டு வா பார்ப்போம்.'

கிட்டு ஓடிப்போய் சிலேட்டைக் கொணர்ந்து கொடுத்துவிட்டு அப்பாவின் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான். எட்டுக் கணக்குகள் போடப்பட்டிருந்தன. தந்தை ஒவ்வொன்றாக ஜாக்ரதையுடன் சரிபார்த்தார். ஒன்றாவது சரியாக செய்யப்படவில்லை. அவ்வளவும் தப்பிதம். ஒவ்வொரு விடையையும் அவர் அடித்துக்கொண்டு வரும்போது அத்தனை அடிகள் தனக்குக் கிடைக்குமோ என்று கிட்டு கற்பனை செய்து கொண்டான். அவன் தேகம் நடுங்கியது.

தந்தைக்கு வந்த கோபத்துக்கு எல்லை இல்லை. 'வாடா இங்கே,' என்று அழைக்கும் பாவனையில் தலையை அசைத்தார். கிட்டுவுக்கு சந்தேகம் தெளிவாகி விட்டது. தயங்கித் தயங்கி அவர் கைக்கு எட்டும் தூரத்தில் போய் நின்றுகொண்டான். அவன் கால்கள் விட விடத்தன. அடுத்த விநாடி அவன் முதுகில் பல பாகங்களிலும் அவருடைய விரல் அடையாளங்கள் சிவந்த தோலில் பதிந்தன. கிட்டு துடி துடித்துப் போய்விட்டான். அழுவதற்குக் கூட அவனுக்கு திராணி இல்லை.

'அடீ', என்ற உச்சஸ்தாயிக் குரல் கேட்டு, கிட்டுவின் தாய் அங்கு வந்தாள்.

' கணக்கு முழுவதையும் சரியாக செய்தால்தான்

மத்தியான்னச் சாதம். இல்லாவிட்டால் போடாதே," என்ற கண்டிப்பான உத்திரவு அவர் வாயிலிருந்து கிளம்பியது. அவரது உத்திரவின் கண்டிப்பை இத்தனை நாட்கள் பழக்கத்தில் அறிந்திருந்த அவர் மனைவியும் பதில் பேசாது உள்ளே போய்விட்டாள்.

விஸ்வநாதய்யர் சுபாவத்தில் சாந்த குணம் வாய்ந்தவர்தான். அவருடன் பழகியவர்கள் அவரை முன் கோபி என்றோ ஒரு சிடுசிடுத்த முகத்தினர் என்றோ கூற மாட்டார்கள். இளகிய மனதும் அன்பு மிகுந்த ஹிருதயமும் படைத்தவர். ஆனால் கிட்டுவைக் கண்டால் மட்டும் அவருடைய சாந்த குணம் பஞ்சாகப் பறந்துவிடும். அவனை கூப்பிட்டாலும் சரி, பேசினாலும் சரி ஒருவித கடுப்புடன்தான் இருப்பார்.

காரணம் இல்லாமல் இல்லை. குழந்தைகளுக்கு செல்லம் கொடுத்தால் கெட்டுப்போய் விடுமென்றும், கண்டிப்பிலேயே தான் வளர்க்கவேண்டும் என்றும் அவர் மனதில் பதிந்து கிடந்தது. கிட்டுவை கண்டிப்புடன் நடத்துவதற்கு வேண்டிய வழிகளை அவர் கையாளத் தயங்குவதில்லை. எல்லா பெற்றோர்களையும் போல் கிட்டுவும் கெட்டிக்காரனாக ஆகவேண்டும் என்று அவருக்கு ஆசை. அவர் சொல்லிக் கொடுத்தால் ஒரே தடவையில் கிரஹித்துக் கொள்ளவேண்டும். இரண்டாம் தடவை கேட்டுவிட்டால் பிரமாதமான கோபம் வந்துவிடும். 'அடி மேல் அடி வைத்தால் அம்மியும் நகரும்' என்ற பழமொழி அவருக்கு வேதவாக்கு.

ஆனால் கிட்டுவோ அம்மியாவது நகரும் – அவன் நகரமாட்டான். அந்தக் குற்றம் அவன் மீதல்ல; அவனைப் படைத்த பிரமனின் குற்றம். அதிலும் அவனுக்கு கணக்கு என்றால் நஞ்சு. இதுவும் அவனாகச் செய்து கொண்டதல்ல; பிறவிக் குணம். இப்படிப்பட்ட கிட்டுவை அடியின் மூலம் சீர்திருத்தி விடலாம் என்ற தப்பெண்ணம் கொண்டிருந்த அவருக்கு அடியினால்

இன்னும் அவன் புத்தி மந்தித்துப் போகுமே யொழிய சீர்திருந்தாது என்று எப்படிப் புரியும்?

கிட்டு இல்லாமல் ராதாவுக்கு போது போகவில்லை. அவனைத் தொடர்ந்து மாடிப்படி ஏறியவள் அப்பா அவனை அடித்ததை ஒளிந்து நின்று பார்த்துக்கொண் டிருந்தாள். பயம் அவளைப் பற்றிக்கொண்டது. அப்பா அவனை அடித்த காரணம் புரியவில்லை. விரை வாக கீழே இறங்கி அம்மாவிடம் ஓடினாள். 'ஏதுக்கு அம்மா, அப்பா கிட்டுவை அடிச்சா,' என்று இரக்கத் துடன் தாயிடம் வினவினாள்.

'கணக்கு சரியாக செய்யவில்லையாம்; அதற்காக அடித்தாராம்,' என்று தாய் பதில் கூறினாள். ராதா வின் கண்களில் பிரகாசம் ஏறியது. 'அதுக்குத்தானா அடிச்சா,' என்று கேட்டுக்கொண்டே வெளியே ஓடினாள். அதற்கு என்ன அர்த்தமோ?

அதன் பிறகு அவளை சமயலறைப் பக்கமே காணோம்.

கொஞ்ச நேரம் ஆயிற்று. தந்தை மாடியைவிட்டு இறங்கி புழக்கடைப்பக்கம் சென்றார். கிட்டு மட்டும் அவர் நாற்காலி அடியில் உட்கார்ந்து சிலேட்டில் கண் களை பதித்து கணக்குச் செய்து கொண்டிருந்தான். அவன் கண்ணிமைகள் கண்ணீரில் தோய்ந்திருந்தன. அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு கணக்குக்கும் சரியான வகை தெரியாமல் திகைத்துக் கொண்டிருந் தான்.

அப்போது மெல்லிய சப்தம் கேட்டது. யாரோ படியேறி வந்து கொண்டிருந்தார்கள். தந்தைதான் என்று நினைத்து கிட்டு குனிந்த தலை நிமிராமல் வாய் முணு முணுத்து எழுதிக் கொண்டிருந்தான்.

'கிட்டு', என்று மிருதுவான சப்தம்.

தலையை நிமிர்த்திப் பார்த்தான். குழந்தை ராதா வின் முகம் கதவின் வெளியிலிருந்து அறைகுறையாக

தெரிந்தது. அவள் கண்களில் ஒரு பிரகாசம்; சிறு முகத்தில் ஒரு மலர்ச்சி.

'இங்கே வாயேன்' என்று கையை அசைத்தாள். அவள் அன்பு அழைப்பில் ஈடுபட்டு அப்பாவின் கோபத்தையும் கொஞ்சம் மறந்து சிலேட்டை கீழே வைத்துவிட்டு அவளிடம் சென்றான்.

அவள் கையில் ஒரு உடைந்த சிலேட் இருந்தது. அது அவளுடையது. அதை உயர்த்தி கிட்டுவின் பக்கம் நீட்டினாள். கிட்டு ஒன்றும் புரியாமல் அதை கையில் வாங்கி புரட்டிப் பார்த்தான். அதில் தாறுமாறாக வட்டங்களும் கோணங்களும், வளைவுகளும் கிறுக்கி இருந்தது. அதைப் பார்த்ததும் அவனுக்கு சிரிப்பு வந்தது. 'பேஷ், நன்றாக எழுதி இருக்கையே எதுக்கு எழுதினாய்,' என்று அவள் கண்களைப் பார்த்துக் கேட்டான்.

ராதாவின் உதடுகள் உற்சாகத்துடன் விரிந்தன. 'இல்லை, அப்பா வந்து உன்னை கணக்கு செய்யலலேன்னு அடிச்சா இல்லையோ? நான் செய்திருக்கேன். இதைக் காண்பிச்சுட்டு சீக்கிரமாக விளையாட வந்துடு,' என்று கொஞ்சிக் குழறிக் கூறினாள்.

அதுதான் கிட்டுவுக்காக அவள் செய்த கணக்கு.

கிட்டு வாய்விட்டுச் சிரித்துவிட்டான். கணக்கு தான் அவனுக்கு போடத் தெரியாது. தவித்தான். குழந்தையின் அன்பு ஹிருதயத்தையுமா அவன் ஊடுருவி பார்க்க முடியாது? அப்பாவின் அடிக்குத் தான் அவன் மசியவில்லை. ராதாவின் வாஞ்சையால் எப்படி இளகாமல் இருக்க முடியும்? அவளை அணைத்துத் தட்டிக்கொடுத்து 'சரி ஆகட்டும். அப்பா வந்துடுவா. நீ கீழே போய்விடு,' என்றான் கிட்டு.

'சீக்கிரம் வந்துடணும்' பார்த்துக்கோ. புதுப் புது வாழைப்பூ மடல் சேர்த்து வச்சிருக்கேன்' என்று சொல்லிவிட்டு ராதா கீழே போய்விட்டாள்.

சீக்கிரம் விளையாட வந்துவிடுவான் என்று நிமிஷத்துக்கு நிமிஷம் அவனையே எதிர்பார்த்துக்கொண்டிருந்தது அவள் குழந்தை உள்ளம்.

ராதா சென்றபின் கிட்டு கணக்குகளை விட்ட இடத்திலிருந்து செய்ய ஆரம்பித்தான். எல்லா கணக்குகளையும் சரியாக ஒரு நொடியில் செய்துவிடுவதுபோல் அவன் மூளை வெகு வேகமாக வேலைசெய்து கொண்டிருந்தது. அவன் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடிக்கொண்டு இருந்தது. ஆனால் அதன் காரணம் அவனுக்கு தெளிவாக தெரியாது.

'ராதாவின் அழைப்பு' மட்டில் அவன் கவனத்தில் இருந்து கொண்டே இருந்தது.

# சிப்பாய் இதயம்

கைவலி தாங்கமுடியவில்லை. தோளோடு சேர்த்துக் கட்டி இருந்த கைக்கட்டுக்கு உள்ளே இருந்து நரம்புகள் 'விண் விண்' என்று தெறித்துக்கொண்டிருந்தன. ஒவ்வொரு தெறிப்புக்கும் ஒவ்வொரு முக்கல்; முனகல். கையை அசைத்து திருப்பிப் படுக்கக்கூடாதென்று ஆச்ரம டாக்டரின் கண்டிப்பான உத்திரவு.

ஆனால் என் காய வேதனையிலும், தெளிவுபடாத மன வேதனையின் அவஸ்தைதான் அதிகமாக இருந்தது.

அந்த முகம்! ஒரே மாதிரி உடை தரித்திருந்த அத்தனையிலிருந்து இதுமட்டும் இவ்வளவு தெளிவாக என் கண்களில் ஒட்டிக்கொள்வானேன்? புது முகம் இவ்வளவு சீக்கிரத்தில் ஒட்டிக்கொள்ளுமா!

செ! இருக்கவே முடியாது. அது எனக்கு கொஞ்சம் பழகின முகம்தான். அதன் சாயலை எப்போதோ பார்த்து இருக்கிறேன். ஒருவேளை பேசிக் கூட இருக்கேனே? ஆனால் எங்கே, எப்போது? பாழும் மனது, இவ்வளவு நேரமாக, அந்த சம்பவத்திற்கு பின் பல மணி நேரங்கள் ஆகியும் இன்னும் நினைவு காட்டவில்லை.

முதல் அடி முழங்கால் சிப்பியில், வெட்டி வீழ்த்தினதுபோல் விழுந்தது. 'ஸ்...ஹா' என்று வாய்விட்டு வீறிடப் போனவன், எப்படியோ பல்லை இறுக்கிக்கொண்டு விட்டேன். அடுத்த க்ஷணம் வலது முழங்கையில்! கையே ஒடிந்து நொறுங்கினதா? அப்படியே இடதுகை ஓடி அதை அமுக்கிப் பிடித்தது கூட ஞாபகம் இருக்கிறது.

அந்தக் கையணைப்புடனேயே, பல்லை இன்னும் நெருக்கிக்கொண்டு, ஓசையை வெளிக்கிளப்ப விடாமல் தலையை நிமிர்த்தி, அந்தத் தடியையும் பார்த்தேன். அதைப் பிடித்து இன்னொரு அடிக்கு ஓங்கின கையையும் பார்த்தேன். ஏன், உதட்டைக் கடித்துக் கொடுத்த அந்த முகத்தையும் முதல் பார்வையில் அளந்து விட்டேன்.

ஒரே விநாடிப் பார்வைதான்! அந்த முகமும் என் முகத்தில் எகிறி விழுந்தது. இன்னும் ஒரு வீச்சு நேரம் தான். தடியோடு கை என் முகத்தில் விழுந்துவிடும், மூன்றும் தடவை!

அந்த ஒரு விநாடிப் பார்வைக்குள் நான்கு கண்களிலும் எவ்வளவு குழப்பம்; தெளிவு இல்லாத நினைவின் ஓட்டம்!

அந்த முகம்....! எங்கேயோ நான் பார்த்திருக்கிறேனு?—இதுதான் என் முகம் காட்டின வியப்பு.

அதன் எதிரொலி அந்த முகத்திலும்—'நானும் எங்கோ பார்த்திருக்கிறேனு, இல்லை பிரமையா?'

ஓங்கின அந்தக் கை கீழே தணிந்து வரவில்லை. அந்தரத்தில் மேலும் கீழுமாக தடுமாறிக் கொடுத்தது அந்த ஒரு க்ஷணத்துக்கு. குழப்பத்தினிடையே பட்ட ஒரு அவஸ்தையைத்தான் அந்தக் கையில், முகத்தில், என்னிலை நின்ற கண்கள் வலைவீசிப் பிடித்தன.

அந்தக் கண்களும் அப்போதே எவ்வளவு துடிசில் கண் இமைப்பில் மாறுதல் காட்டின; பிரமிப்பு, திகில், ஆச்சர்யம், திகைப்பு மாறி மாறி சுழன்றது அந்த உக்ரமான விழிகளில். என்னை அடையாளம் அறியத் தவித்த யோசனை! நானும் தவித்தேன். ஆனல் உடனே அறிய முடியவில்லை.

சத்யாக்ரகி இடம் விட்டு நகர்வதா? அந்த முகத்தையே பார்த்துக்கொண்டு, வலி தெறிக்கும் முழிகளின் முழுபலத்தையும் உபயோகித்து நிலை நிற்க உறுதி காட்டினேன். அந்த முகம்!

நான் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே மின்னல் வேகத்தில் அதன் மற்றொரு கை தோளை அமுக்கிப் பிடித்துக் கொண்டது. அடுத்த க்ஷணம் சகாக்கள் கூட்டத்திலிருந்து விலக்கி நான் ஒதுக்கப்பட்டுக் கொண்டிருந்தேன்.

கைப்பிடி கொஞ்சம் தளரவும், ஒதுக்கிவிட்ட ஆத்திரம்; வெறி. முன்னேறி மறுபடியும் இரண்டு எட்டுக்கள் வைத்திருப்பேன். அந்தக் கண்கள் என்னைக் கவ்வி விடுவது போல் விழித்தன. அந்த முகம் ?

' நீ வராதே இங்கே. வீணுக இன்னும் அடி படாதே,' என்று சொல்வதுபோல் இருந்தது அந்தப் பார்வை. அடுத்து, இன்னும் பத்தெட்டுக்கள் நான் நெட்டித் தள்ளப் பட்டேன்.

ஒரு ஊதல் சப்தம் பலத்து கிளம்பினது. சிப்பாய் கள் திரும்ப ஒன்று சேருமாறு சார்ஜெண்டின் உத்தி ரவு அது. என்னை நெட்டித் தள்ளின கை அப்படியே இழுத்துக்கொண்டு விட்டது. விறுட்டென்று திரும்பி நான் அந்த முகத்தைப் பார்த்தேன். அந்த முகம் ?

சிப்பாய் ஒருதரம் கண்களை நிலை நிறுத்தி விறைத் துப் பார்த்தான். இனி முன்னேறமாட்டேன் என்று அவனுக்கு தீர்மானமோ என்னமோ ? சார்ஜெண்ட் வேறு, உத்தரவிட்டு விட்டான். ஒரு உறுத்தல் பார்வையுடன் என் அங்கங்களை ஆராய்ந்து விட்டு, விறுட்டென்று திரும்பி ஓட்ட நடையாக போய்விட் டான் அவன். சார்ஜெண்டும், சகாக்களும் இருந்த இடத்துக்கு.

இன்னொரு தரம் அங்கிருந்து திரும்பிய ஒரு பார்வை ! அதற்குப் பிறகு என்னுல் சிப்பாய் கூட்டத் திலிருந்து அந்த உருவத்தை பிரித்துப் பார்க்க முடிய வில்லை.

' ரத்தம் பீறிடுகிறது. வண்டியில் ஏற்று ' என்று அருகில் பல குரல்கள் கேட்டன. கீழே சுணங்கி

விழப்போனேன் போலிருக்கிறது. இரண்டு மூன்று உருவங்கள் சட்டென்று என்னை தாங்கிப் பிடித்து காருக்கு அணைத்துச் சென்றன.

அந்த முகம்! இன்னும் ஞாபகத்துக்கு வரவில்லை...

ஆமாம், இப்போது ஞாபகத்துக்கு வந்துவிட்டது. பார்த்தது மட்டுமில்லை. அதோடு பேசியும் இருக்கிறேன். ஏன், பெயர் கூட ஞாபகம் வருகிறது. மேஹர்சந்த் !

அவனை நான் பார்த்தது மூன்று வருஷங்களுக்கு முன். சென்னையிலிருந்து புறப்பட்ட ரயில் செங்கற்பட்டில் நின்றது. காட்டுத்தனமாக விழுந்து அடித்துக் கொண்டு ஏறினார்கள் மூன்று சிப்பாய்கள். ஒரு வண்டி சாமான்களை தாறுமாறாக உள்ளே எறிந்துகொண்டு, முழுப் பலகையையும் ஆக்ரமித்துக் கொண்டிருந்த என்னை முரட்டுத்தனமாக அலைத்து எழுப்பி, பொய்த் தூக்கத்தைக் கூடக் கலைத்து விட்டது அந்த அநாகரீகக் கூட்டம்.

'மிருகங்கள்' என்று முனகிக் கொண்டே கடுகடுப்புடன் எழுந்து ஜன்னல் ஓரம் சாயவும், அந்த மூன்றும் பலகையை நிரப்பிவிட்டன. புரியாத பாஷை காதைத் தொளைத்தது. அவர்கள் வாய்களில் எரிந்த சிகரெட்டின் புகை மூக்கைத் தொளைத்தது.

நாலாவது ஆள், நான் இருப்பதாக அவர்கள்—அது கூட தப்பு—அவைகள் லக்ஷியம் செய்ததாகத் தெரியவில்லை. மிருக வாழ்க்கையில் பண்பட்ட உருவங்கள் தானே அவை. நாகரீகமும், மரியாதையும் எங்கே தெரியப் போகிறது? உணர்ச்சி மரமரத்துப் போக, வெறிநாய் குணம் மேலோங்கத் தானே பட்டாள வாழ்க்கையே தயாரிக்கப்படுகிறது. மனுஷ சுபாவத்தை அங்கே எப்படி எதிர்பார்க்க முடியும்?

புகையின் அடர்த்தியில் ஏற்பட்ட தொண்டைக் கமறலை அதற்குமேல் தாங்க முடியவில்லை. 'புகையைக்

கொஞ்சம் தள்ளிவிடு' என்று அடுத்து உட்கார்ந்திருந்த சிப்பாய்க்கு சைகை காட்டினேன்.

அவன் என்னை ஒருதரம் விறைத்துப் பார்த்தான். எனக்குக்கூட கொஞ்சம் பயமாக இருந்தது. எதற்காக இந்த மிருகங்களிடம் போய் இதைச் சொன்னோம் என்றுகூடத் தோன்றியது. அவன் என்னவோ தன் பாஷையில் முனகிக்கொண்டான். பக்கத்தில் கிடந்த சிகரெட்டுப் பெட்டியை எடுத்து நீட்டி, 'உபயோகி' என்பதுபோல் தலையை அசைத்தான்.

நான் சிரித்துக் கொண்டே, 'வேண்டாம்' என்று கையை மறுத்தேன். அவன் மீண்டும் வற்புறுத்தினான். என் ஜாடையை தப்பர்த்தம் செய்து கொண்டு விட்டான் போலிருந்தது. அல்லது தெம்பாகவும் இருக்கும் என்று நினைத்து, 'இங்கிலீஷ் தெரியுமா உனக்கு' என்று கேட்டேன்.

'ஓ, தெரியும் எனக்கு. அவர்களுக்குத் தெரியாது' என்று அவன் ஆங்கிலத்தில் சொல்லி முடிப்பதற்குள் ஏற்பட்ட தடுமாறுதல், அவன் தேர்ச்சிக் குறைய நிரூபித்தது.

மறுபடியும் அவன் கை நீட்டி 'புகை பிடியுங்களேன்' என்றான் இங்கிலீஷில். அதன் பின் எங்கள் சம்பாஷணை இங்கிலீஷில் தொடர்ந்தது.

'நான் பிராமணன்; புகை பிடிக்கும் வழக்கம் கிடையாது.'

வியப்புடன் அவன் என்னை விழித்துப் பார்த்தான். 'ஓ, நானும் பிராமணன் தான்' என்று பூணூலை வெளியே இழுத்துக் காட்டினான்.

'உங்கள் சம்பிரதாயம் இருக்கலாம். தென்னாட்டில் இல்லை' என்றேன் நான் மறுபடியும்.

அவனுக்கு அது விசித்திரமாகப் பட்டது. பெட்டியை மற்றவர்களிடம் வீசிவிட்டான். வண்டி முழுதும் புகை மயம். என் வேண்டுகோளை இவனாவது, மற்றவர்களாவது கவனிக்கவில்லை. ஜன்னலுக்கு

வெளியே தலையை முக்கிக் கொண்டு விட்டேன் புகை தணியும் வரை.

சிப்பாய், தான் பிராமணன் என்றது எனக்கு ஞாபகமாகவே இருந்தது. நான் அவனைக் கேட்டேன். ' வடநாட்டில் அதிகம் பிராமணர்கள் பட்டாளத்தில் சேருகிறார்களா ' என்று.

' நிறைய ! இவர்களும் பிராமணர்கள் தான்.'

'தென்னாட்டு பிராமண சமூகத்தைப் பற்றிய ஒரு ஏக்க நினைவு அப்போது என் மனதில் உலைந்தது.

இதிலிருந்து திரும்பின சம்பாஷணை பரஸ்பரம் இருவர் பழக்க வழக்கங்களையும் தெரிந்து கொள்ள விழுந்த ஆசையிலே வழிவிட்டுச் சென்று கொண்டிருந்தது.

அவன் பெயர் மேஹர்சந்த். இருபத்தோறு வயதென்று அவன் சொன்னதைக் கூட சந்தேகிக்கும்படி வளர்த்தியான உருவம். பரிக்ஷை தேருததால் - ஏழாவதோ, எட்டாவதோ படிக்கும்போது—விட்டு விட்டு வீட்டை விட்டு ஓடினவன். எங்கேயோ அலைந்து சுற்றிச் சிப்பாயாகிவிட்டான். அவனும் அவன் சகாக்களும் பூனுப் படை யிலிருந்து நீங்கி திருச்சிப் படையில் சேரப் போய்க்கொண்டிருந்தார்கள். சத்தியாக்ரக அறிகுறிகள் கிளம்பினதன் கெடுபிடி ஏற்பாடுகள் போலும்!

அங்கங்கே யாராவது வண்டியில் ஏறும் உத்தேசத்துடன் கைப்பிடியைத் திருப்புவார்கள். மேஹர்சந்த் பாய்ந்து வேட்டை நாய் போல் கதவுக்குத் தவ்வி, யாரும் ஏறக்கூடாதென்று தன் பாஷையில் கத்துவான், அந்த சப்தத்திலேயே எல்லோரும் பயந்து போய், இவர்களுக்கு நடுவில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் என்மீது ஒரு பரிதாபப் பார்வை செலுத்தி விட்டுப் போய் விடுவார்கள்.

இவ்வளவு தூரம் எவ்வளவோ விஷயங்களைப் பேசித் தர்க்கித்த நிலைமையிலும் மிருக குணம் தான் அவனிடம் மேலோங்கி இருந்ததை நான் கண்டேன்.

திருச்சியில் சகாக்களுடன் பிளாட்பாரத்தில் நின்று என் கையை அவன் குலுக்கினபோது தான் எனக்கு ராணுவக் கையுடன் கைகொடுக்க எவ்வளவு தைர்யம் வேண்டுமென்பது தெரிந்தது.

அந்தக் கையின் அழுத்தத்தை இன்று என் தோள் உணர்ந்தது. அதே மேஹர்சிங்கின் உருவம்தான் என் தலைக்குமேலாக, ஓங்கின கைத்தடியுடன் நின்றுகொண்டிருந்த காக்ஷி இன்னும் கண்களிலிருந்து மறையவில்லை. எப்படி மறையும்? முதல் இரண்டு அடிகளின் பலனை என் அங்கங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும்போது?

போர் முனையில் நான் வந்து நின்றேன். எங்கிருந்தோ சந்தர்ப்பம் எனக்கு நேர் எதிர்முனையில் அவனைக்கொண்டு வந்து நிறுத்தினது. இரண்டு கடமைகள் அங்கே மோதின. அதன் முடிவு என் உடலில் புண்! அவன் மனதில் புண்? அதெப்படி நான் சொல்ல முடியும்? எங்கே, அந்த மிருக உள்ளத்தில் அது பதியவாவது? க்ஷணத்துக்கு ஒரு குழப்பம். அவ்வளவுதான்!

காய வேதனையில் தூக்கம் வரவில்லை. எல்லோரும் கண் அயர்ந்து கொஞ்ச நேரமாகி விட்டது. மணி பத்துக்கு மேல் இருக்கும். ஆச்ரமத்தின் வாசல் கதவு தாளிட்டு இருந்தது. மூலையில், சிறிதாக்கின ஒரு ஹரிக்கேன் விளக்கு மட்டும் நிழல் அசைவைக் காட்டும் அளவுக்கு வெளிச்சம் காட்டிக்கொண்டிருந்தது.

முனகிக்கொண்டே கிடந்தேன். யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. முதல் தட்டுக்கு பேசாமல் இருந்தேன். மறுபடியும் பலக்க தட்டும் சப்தம். அடுத்த படுக்கையில் படுத்திருந்த தொண்டரை எழுந்து போய் பார்க்கச் சொன்னேன்.

விளக்கை பெரியதாக்கிக் கொண்டு வாசல் கதவைத் திறந்து தொண்டர் மறைந்ததும், அறையில் இருள் சூழ்ந்தது. வெளியே பேச்சுக் குரல்கள்

வார்த்தைத் தெளிவில்லாமல் கேட்டன. காய வேதனை யோடு போராடிக்கொண்டிருந்தேன்.

சில நிமிஷங்களில் விளக்கு வெளிச்சம் உள்ளே திரும்பினது மறுபடியும். தொண்டர் மெதுவாக பேசிக்கொண்டே வர, இன்னொரு நிழலும் பின் தொடர்ந்தது.

'யாரது, ராமனுதன்?' என்று படுக்கையில் படுத்தவாறே கேட்டேன்.

அவர் பதில் கிளம்புமுன் பூட்ஸின் கிறீச் சப்தம் அடக்கி கிளம்பினது. 'என்னது, இந்த இருட்டில் பூட்ஸ் சப்தம் ஆச்ரமத்தில்' என்ற நினைப்புடன் கண் களைச் சுழற்றிப் பார்த்தேன்.

'ஆச்ரமத்தில் ஒருவரைத் தேடுகிருர் இவர். நேரில் பார்த்துத்தான் சொல்ல முடியுமாம்' என்ருர் ராமனுதன்.

அதே சமயம் நான்கு படுக்கைகளுக்கு அப்புறம் வந்துகொண்டிருந்த அந்தச் சாயலை ஒரு க்ஷணத்தில் அறிந்துகொண்டு விட்டேன்.

'மேஹர்சந்த்!'

மேஹர்சந்த் திடுக்கிட்டு நின்று சப்தம் வந்த பக்கம் பார்த்தான். தொண்டரும் திகைத்து நின்று விட்டார். அவருடைய கைவிளக்கின் முழு வெளிச்சம் என்மீது விழுந்தது. மேஹர்சந்த் கவனித்து விட்டான். 'உங்களைத்தான் தேடினேன்' என்று இரண்டே எட்டுகளில் பாய்ந்து கட்டிலுக்கு வந்து விட்டான்.

அப்போது உண்டான பூட்ஸ் சப்தத்தில் ஆச்ர மமே விழித்துக் கொண்டது. பாதி ராத்திரியில் ஒரு சிப்பாய் உருவம்! சத்யாக்ரஹ ஆச்ரமத்தில்! அவர் களுக்குத் திகைப்பு!

மேஹர்சந்தின் முகத்தில் ஒரு பிரகாசம் ஏறினது.

'என்னை ஞாபகம் இருக்கிறதா' என்று முதல் கேள்வி போட்டான் அவன் இங்கிலீஷில்.

'இல்லாமலா பேர் சொல்லிக் கூப்பிட்டேன்' என்

றேன் நான் ஹிந்தியில், அவனை வியப்புடன் பார்த்துக் கொண்டே.

நான் ஹிந்தியில் பேசினதும் அவன் வியப்பு அதிகரித்தது. ஹிந்தியிலேயே பதில் கொடுத்தான். 'என்னை நீங்கள் இங்கே எதிர்பார்த்தே இருக்க மாட்டீர்கள்!'

'எப்படி எதிர்பார்க்க முடியும்? என் தலைக்கு நேரே தடியோடு பார்த்து விட்ட பிறகு?'

'அது கிடக்கட்டும். உங்கள் கையை காட்டுங்கள் முதலில்.'

போர்த்தி இருந்த போர்வையை விசிறிவிட்டுப் பாதி எழுந்திருந்திருப்பேன். மேஹர்சந்த் அந்த கட்டைக் கண்டுவிட்டான். 'ஸ்ஹா' என்று பல்லைக் கடித்துக்கொண்டான். முகம் ஒரு விநாடியில் சுண்டி விட்டது. அவன் கொடுத்தது தானே அந்தக் கட்டுப் பாக்யம்!

'கை ஒடிந்தா போச்சு?' என்பது அவன் கேள்வி. அவன் முகத்தில் இரக்கம் தட்டினது.

நான் அவன் முகத்தைப் பார்த்து, 'மூன்றுவது அடியும் விழுந்திருந்தால், அந்த பயம் உண்மையாகி இருக்கும். இப்போது இல்லை' என்றேன்.

மேஹர்சந்தின் காதுகளின் அவை விழுந்ததாகத் தெரியவில்லை. அவன் மேலே பேசினான். 'உங்களை அடையாளம் கண்டவுடன் நான் பிரமித்துப் போய் விட்டேன். காம்பிற்குச் சென்றதும், அந்த இரண்டு அடிகளை என்னால் மறக்க முடியவில்லை. அந்த அடிகளின் வேகம், உபயோகித்த எனக்குத் தெரியும்.'

மேஹர்சந்த் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டான். அந்தக் கட்டுகளை ஒரு தரம் அவன் பார்வை மறுபடியும் வெறித்துப் பார்த்துவிட்டு, என் முகத்திற்கு நேரே திரும்பியது. அதில்தான் என்ன மாறுதல்! அன்று ரயிலில் ஏற வந்தவர்களை விரட்டின மூர்க்கம்! ஓங்கின தடியுடன் என் தலைக்கு நேரே தோன்றின விழிகள்!

அவைகள் எங்கே? இப்போது அவன் முகத்தில் தோன்றின பார்வை!

சிப்பாய் இதயத்தின் ஆழத்திலும் இந்த மனித சுபாவம்!

மறு விநாடி மேஹர்சந்த் எழுந்து நின்றான். 'இன்னும் பதினைந்து நிமிஷத்தில் காம்பில் இருக்கவேண்டும். வருகிறேன். நான் உங்களைப் பார்த்தாகிவிட்டது. வரட்டுமா' என்று சொல்லிக்கொண்டே கால்களைப் பின்னரித்தான்.

இவ்வளவு சீக்கிரத்தில் புறப்பட்டுவிட்டான்.

என் பிரமிப்பு இன்னும் அடங்கவில்லை. அவனை கொஞ்சமாவது அங்கே எதிர்பார்த்திருந்தேனா?

'சரி, சந்தோஷம்.'

என் கையை நீட்டினேன்.

மேஹர்சந்தின் முறட்டுக் கை அதைப் பிடித்து அமுக்கினது.

முறட்டு சுபாவத்தின் பகைப்புலத்திலும், மிருதுத் தன்மை இருப்பதை அந்தக் கை யடிப்பிலே ஒத்துக் கொண்டது மனது.

அடுத்த விநாடி, கதவை நோக்கி கம்பீர நடை போட்டுச் செல்லும் மேஹர்சந்தின் உருவம், ஒரு சிப்பாயின் இதயத்தைத் திறந்து காட்டிவிட்டு வெளி இருட்டிலே மூழ்கிவிட்டது.

# இணைப்புச் சங்கிலி

கணபதி வெளியே புறப்படப்போகும் சமயம் பம்பரமும் கையுமாக வேர்க்க விறுவிறுக்க ராமு ஓடி வந்து "அத்திம்பேரே! உங்கள் எல்லாரையும் சாப்பிடக் கூட்டிண்டு வரச் சொன்னான் அண்ணா, இப்போ" என்று மூச்சுவாங்கக் கூறினான்.

அன்று கணபதியின் மாமனாருக்கு வருஷ திவசம். கணபதி உள்ளூர் மாப்பிள்ளையாக வாய்த்துவிட்டதால், சாதாரண விசேஷ நாட்களுக்குக்கூட மாமனார் வீட்டிலிருந்து எப்பொழுதும் அழைப்பு வருவதுண்டு. எப்பொழுதும்போல் விஸ்வநாதனும் தன் சிறிய தம்பியை அனுப்பி கணபதியை சாப்பிட அழைத்து வரச் சொன்னான். அவன் இதை யதார்த்தமாகத்தான் செய்தான், மனதில் ஒருவித விகல்பமும் இல்லாமல். அப்பொழுது, தனது அந்த சிறிய செய்கையினால் விளைய இருக்கும் பிரமாதத்தை அவன் மனதில் நினைக்கவே இல்லை.

"ஏண்டா! விஸ்வம், நீ தான் ஒருநடை நாலெட்டுத்தானே, போய் கூப்பிட்டுட்டு வந்துடேன்" என்று தயங்கிக்கொண்டே மகனிடம் கூறினாள் தாய்.

"யார் போய் கூப்பிட்டால் என்ன அம்மா? எல்லாம் ராமுவே போய் வரட்டும். அடே ராமு, அத்திம்பேர் எல்லாரையும் சாப்பிடக் கூட்டிண்டு வாடா" என்று மழுப்பிப் பேசிவிட்டான்.

அதற்குமேல் தாய்க்கு அவனிடம் பேசத் துணிவு வரவில்லை. ஜோலியைப் பார்க்க உள்ளே போய்விட்டாள். ராமுவும் அடுத்த தெருவை நோக்கிப் பாய்ந்து விட்டான்.

கணபதி மௌனமாக ராமுவின் அழைப்பை ஏற்றுக்கொண்டான். பதிலே பேசவில்லை. அவன் பக்கம் திரும்பிப் பார்க்கவும் இல்லை. அவன் மௌனமாக இருப்பதைக்கண்ட ராமு மறுபடியும் தான் முன் கூறியதை அவர் முகத்தைப் பார்த்துக்கொண்டே கூறினன்.

அதற்குமேல் கணபதிக்கு மௌனமாக இருக்க முடியவில்லை. இத்தனை நாட்களாக அடக்கிவைத்திருந்த அத்தனை கோபமும், எரிச்சலும் பீறிட்டுக் கொண்டு வந்துவிட்டது.

"ஏண்டா! துரைவாளுக்கு வர ஒழியல்லையோ, விஸ்வநாத அய்யர்வாளுக்கு! ஆத்திலே வெட்டி முறிக்கிருரோ......ஹூம்!"

கணபதி போட்ட இந்த சப்தம் மறு விநாடியே சமயலறையில் இருந்த பார்வதியை அவர்கள் இருந்த இடத்திற்குக் கொண்டுவந்துவிட்டது. இதை எதிர்பார்த்தவள்போல் மௌனமாக நின்று கொண்டிருந்தாள்.

கணபதி அவள் பக்கம் திரும்பி "இந்தா, உன் தமயனுர் சாப்பிடக் கூப்பிட்டு வரச்சொல்லி இருக்காராம். போய் எனக்கும் சேர்த்து சாப்பிட்டு விட்டு வா" என்றுன் ஏளனமாக.

"அதுக்கென்ன, போயிட்டு வரேன்," என்று இரண்டே வார்த்தைகளில் பதில் கூறிச் சிரித்தாள் பார்வதி.

கணபதி அதோடு நின்றுவிடவில்லை. அவன் கோபம் கட்டுக்கு மீறிப்போய்விட்டது. "எத்தனை தரம் நானும் படித்துப்படித்துச் சொல்லி இருக்கிறேன். இடித்துக் காட்டியும் இருக்கிறேன். எனக்குக் கொஞ்சமாவது மரியாதை வைத்திருக்கிருஞ அந்தப் பயல்! என்னை அவன் வீட்டுக் கிள்ளுக்கீரை என்று நினைத்துக் கொண்டிருக்கிருனே! படியேறிவந்து

என்னை சாப்பிட அழைப்பது அவன் கௌரதைக்குக் குறைச்சல். இந்த ஆண்டுப்பயல் வந்து என்னை கூப்பிடுவது எனக்கு குறைச்சல் இல்லை, இல்லையா,"...என்று ஏகத்தாளுக சத்தம் போட்டுவிட்டான்.

கணவன் குணத்தை நன்கு அறிந்திருந்த பார்வதி பதில் பேசாமல் அவ்வளவையும் கேட்டாள். தன்னுல் முடிந்தமட்டில் தன் அண்ணு வேண்டுமென்று செய் திருக்கமாட்டான் என்றும், அவன் இயற்கையே அப்படி என்றும் கூறி, அவனை சாந்தப்படுத்த முயன் ருள். ஒன்றும் பயன்படவில்லை. அவன் பிடிவாதமாயும் உறுதியுடனும் இருந்தான்.

பழைய சம்பவங்கள் சில ஞாபகத்திற்கு வரவும் அவன் கோபம் அதிகரித்ததே யொழிய மட்டுப்பட வில்லை. அவன் வாயிலிருந்து கடைசியாகக் கிளம்பிய வார்த்தைகள் இவை. "உனக்குத்தான் அவன் அண் ணன். நீ வேண்டுமானுல் பிறந்தகம் சென்று கொண் டாடிக்கொண்டிரு. நான் வேண்டாம் என்று சொல்ல வில்லை. ஆனுல் நான் அந்த மரியாதை கெட்ட பயல் வீட்டில் அடியெடுத்து வைக்கப்போவது இந்த ஜன் மத்தில் இல்லை," என்று முடித்துவிட்டான் கண் டிப்பாய்.

பார்வதியின் கண்களில் நீர் ததும்பியது. "உங் களுக்கு இல்லாதது எனக்கு என்ன வந்து விட்டது? நானும் போகவில்லை" என்று அழுதுகொண்டு சமய லறைக்குப் போய்விட்டாள்.

"அடே ராமு! ஒரு வண்டி பார்த்து அக்காவை கூட்டிண்டு போ. அத்திம்பேர் வரவில்லையாம் என்று சொல்லிவிடு" என்று சொல்லிக்கொண்டே தன் மனைவி யின் காதுகளில் விழும்படியாக "ராமு கூப்பிடுறுன். நீ போய்ட்டு வா' என்று அதட்டலாகக் கூறினுன் கணபதி.

" நான் போகவில்லை" என்றாள் பார்வதி அழுகைக் குரலில்.

" நீ போகிறாயா இல்லையா? அது எங்கள்பாடு. உனக்கென்ன அதில்? சமயத்துக்கு நீ போவதற் கென்ன, போய்வா. என் கோபத்தை இன்னமும் கிளப்பாதே" என்று தன்னை ஒதுக்கிப் பேசினான் கணபதி.

கணவன் கோபம் பார்வதிக்கு நன்றாகத் தெரியும். வேறு ஒன்றும் தோன்றவில்லை. குழந்தைகளை கூட்டிக்கொண்டு ராமுவுடன் புறப்பட்டுச் சென்றாள்.

"கணபதி வரவில்லையா" என்று பரிவோடு பார்வதியைக் கேட்டான் விஸ்வம். "ஏண்டா, அத்திம் பேரைச் சொல்லிக் கூப்பிட்டாயா?"

" கூப்பிட்டேன்; அவர் வரவில்லையாம்" என்று கொண்டே ராமு அக்காவின் முகத்தைப் பார்த்தான். அவள் மௌனமாக உள்ளே சென்றாள்.

"ஏன் வரவில்லையாம்?"

"ஏனோ?"

" பார்வதி! ஏன் வரவில்லை கணபதி?" என்று அவள் அருகில் சென்று உசாவினான் விஸ்வம் கவலை யுடன்.

" நீ நேரில் வந்து கூப்பிடவில்லையாம், அதனால்" என்று விர்றென்று கூறி முடித்து முகத்தை அப்புறம் திருப்பிக் கொண்டாள் பார்வதி.

" ராமு கூப்பிட்டது போதா?"

" இன்னம் கைக்குழந்தையை அனுப்பிக் கூப் பிடச்சொல்லு" என்று கூறி, பார்வதி சிரித்தாள். அந்தச் சிரிப்பில் கலந்து ஒலித்தது ஒருவித துக்கம்.

" இத்தனை நாட்களாக......"

" அப்பா இருந்தார். சரியாய் போய்விட்டது."

" இப்பொ?"

"ஆத்துக்குப் பெரியவன் நீ தானே" என்றாள் பார்வதி மறுபடியும் சிரித்துக்கொண்டு.

விஸ்வம் இந்தப் பேச்சை அமைதியுடன் தான் ஆரம்பித்தான். கணபதி வராத காரணத்தை அறியவும் அவன் மனதில் அதிகம் பட்டுவிட்டது. ஒரு அல்ப விஷயத்திற்கு இவ்வளவு பாராட்டுகிறானே என்ற எண்ணம் தோன்றியது.

"சரி அவன் வருவானோ இல்லையோ?"

"நீ போய் அழைத்தால் ஒருவேளை..."

"அதுவும் ஒருவேளை தானோ......?"

"விஸ்வம், மாப்பிள்ளை குணம்தான் உனக்குத் தெரியுமே. அப்பொழுதே சொன்னேனே நீ போய் ஒரு நடை..."

இதை அவள் கூறி முடிக்கவில்லை. விஸ்வம் சட்டென்று அம்மா பக்கம் திரும்பினான். அவன் விழிகள் கோபத்துடன் அவளைப் பார்த்து விழித்தன.

"நான் போய் கட்டாயம் கூப்பிட்டுத் தான் ஆகணுமோ?"

"உன் இஷ்டம்."

"அம்மா! எத்தனைதரம் இப்படி தப்பை வைத்துக் கட்டிக்கொண்டே போகிறது? இவ்வளவு மரியாதை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவனை ஒரு நாளும் திருப்திப்படுத்த முடியாது. அப்பா இருக்கும் போது இவன் படுத்தியபாடெல்லாம் நான் மறந்துவிடவில்லை. என்னால் அதெல்லாம் பொறுக்க முடியாது. சௌஜன்யமாக இருந்து ஒத்துப் போய்க்கொண்டிருந்தால் இருக்கட்டும். இல்லாவிட்டால் போகட்டும். எடுத்ததற்கெல்லாம் நான் போய் அழைத்துக் கொண்டிருக்கமுடியாது. ஆனபடி ஆகட்டும்" என்று படபடத்துக் கூறிவிட்டு அப்புறம் போய்விட்டான். ஒருவர் பிடிவாதத்திற்குமேல் மற்றொருவரது இருப்பதைக் கண்ட பெண்கள் மௌனமாக இருந்துவிட்டார்கள்.

கல்யாணம் ஆனது முதலே கணபதிக்கு ஒரு இத்துத் தவருமல் இந்த மரியாதை கௌரவம் எதிர் பார்க்கும் வழக்கம் நன்ருக பிடிபட்டிருந்தது. ஆசனப் பலகை போடத் தவறியதற்கு ஒருநாள் அவனுக்கு வந்த கோபம்! இன்றைக்கு நினைத்தாலும் அவர்களுக்கு பய மாக இருக்கும். மாமனுர் இருக்கும் வரை இந்த மாதிரி விறைப்புகளுக்கெல்லாம் நல்ல மதிப்பு இருந்தது. பயந்து பயந்து மாப்பிள்ளை மனம் கோணுமல் தாங்கி வந்தார். பழைய கால மனுஷ்யராக அவர் இருந்தது தான் காரணம். அவர் அப்படி வாய்த்ததும் அவன் அதிர்ஷ்டம் என்றே சொல்லவேண்டும். அவர் கால மானபின்பும் அதே மரியாதையையும் உபசாரத்தையும் தன் மைத்துனனிடத்தில் எதிர்பார்த்தான்.

ஆனுல் விஸ்வநாதனே கணபதிக்கு பலவிதத்தி லும் நேர் எதிரிடை. பெரியோர்கள் வாயிலிருந்து வருவதுபோல் இந்தக் காலத்துப் பையன். அதற்கு எவ்வளவோ அர்த்தங்கள் உண்டு. சுருக்கமாகக் கூறப் போனுல், மரியாதை அவ்வளவு பாராட்டத் தெரியாத வன். உபசரிக்கக்கூடத் தெரியாதவன். இவைதான் அவன் குற்றங்கள்—கணபதியின் கண்களில். இந்தப் பயல் தன்னை ஒருபொருட்டாக எண்ணவில்லை, அவ மதித்துவிட்டான் என்ற தப்பெண்ணம் ஊறிப்போய்க் கிடந்தது கணபதியின் மனதில். அந்த சம்பவத்தின் பின்பும் தன்னை நேரில் வந்து கூப்பிட வராத அந்தப் பயல் வீட்டில் காலெடுத்து வைக்கவும் கூடாது என்று தான் முன் கூறியதை ஊர்ஜிதம் செய்துவிட்டான் கணபதி.

எப்பொழுது கூப்பிட்டும் வரவில்லையோ இனி தானும் போய்க் கூப்பிடுவதில்லை என்று விஸ்வமும் இருந்துவிட்டான்.

சில மாதங்கள் கழிந்தன.

விஸ்வம் அதே ஊரில் வக்கீல் தொழில்புரிய ஆரம்

பித்தான். ஆனால் ஒருவர் வீட்டுப்படி மற்றொருவர் ஏறுவது கிடையாது. ஆரம்பத்தில் தெருவில் சந்திக்க நேர்ந்த சில சமயங்களில், ஒப்புக்கு மேலெழுந்த வாரியாக அவர்களுக்குள்ளே நடந்த பேச்சுகூட நாளடைவில் ஓய்ந்து போய்விட்டது. அநேக தடவை கள் நேருக்கு நேர் சந்தித்த போதும் முன்பின் அறி. யாதவர்கள் போல் போய்விடுவார்கள்.

மரியாதையின் அடிப்படையாக எழுந்த ஒரு அல்ப விஷயம் குடும்பத்திலேயே அதிருப்திகரமான ஒரு பெருத்த மாறுதலை உண்டாக்கிவிட்டது. அவர்க ளிடையே நிலைத்திருந்த மனஸ்தாபத்தைத் தீர்த்து வைக்க குடும்பத்தினர் செய்த முயற்சிகள் எல்லாம் பலிதமற்றுப் போய்விட்டன.

ஆனால் ஒரு விஷயம். இருவரும் தங்கள் பகை மையை தங்களுடனேயே நிறுத்திக்கொண்டார்கள். பெண்கள்மீது சுமத்தவில்லை. நாள் கிழமைகளுக் கெல்லாம் குழந்தைகளுடன் அண்ணன் வீடு சென்று வர பார்வதியை அநுமதித்தான் கணபதி. இந்தக் காலத்தில் விஸ்வநாதனுக்கு மணம் ஆகி மனைவி வீடு வந்து சேர்ந்தாள். பரஸ்பர அழைப்புகளின் பயனாக, குழந்தைகள் பெண்களிடையே போக்குவரத்தும், அபி மானமும் அன்பும் இருந்துகொண்டு வந்தது. அதைப் பற்றி விஸ்வமும் கணபதியும் அதிக அக்கரை செலுத்தவில்லை. ஆயினும் அப்பப்போ ஒருவர் மற்றொருவர் குடும்பத்தைப்பற்றி மனைவியர் மூலம் விசாரித்துக் கொள்வதுண்டு. இதனால் அவர்களுக்குள் இருந்த பரஸ்பர வர்ம உணர்ச்சி தளர்ந்துபோய் விட்டது என்பதற்கும் இல்லை. ஒருவரைப்பற்றி மற் றொருவர் பேசுவது சற்று காரமாகவே இருக்கும்.

மேலும் சில வருஷங்கள் கடந்துபோய்விட்டன.

ஒரு விசேஷ நாள் கிழமைக்கு பார்வதி குழந்தை களுடன் அண்ணா வீட்டிற்கு வந்திருந்தாள். போஜ

னம் முடிந்தபின்பு கூடத்தில் எல்லோரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். விஸ்வமும் கூட இருந்தான்.

அப்பொழுது நிகழ்ந்த ஒரு போக்கு சம்பவம் அவர்கள் மனதிலே மேலுக்கு ஆறிவிட்டமாதிரித் தோன்றிய புண்ணைக் குத்திவிட்டதுபோல் ஆகி விட்டது. அவர்கள் மறந்துவிட்டிருந்த பழையச் சம்ப வங்களை ஞாபகத்திற்குக் கொண்டு வந்தது.

இருந்தாற்போலிருந்து பார்வதியின் ஆறு வயதுப் பையன் சந்துரு, என்ன தோன்றியதோ என்னவோ, புதிர்போல் நடுவில் ஒரு கேள்வியைப் போட்டான். "ஏன் அம்மா, அப்பாமட்டும் சாப்பிட வரல்லே?"

பார்வதி திகைத்துப் போய்விட்டாள். குழந்தையின் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. சமாளித்துக்கொண்டு, "வராமே என்னடா, ஏது திடீரென்று உனக்கு இந்த சந்தேகம்?"

"மாமா ஆத்துக்கு நாம்பள்ளாம் வரோமே. அப்பா வரதே இல்லையே."

இதற்குள் அடுத்த பையன் ராஜம் "மாமா மட்டும் நம்பாத்துக்கு வராளோ," என்று எதிர்க் கேள்வி போட்டான். அந்தக் கேள்வி விஸ்வம் மனதில் சுருக்கென்று தைத்ததுபோன்ற ஒரு உணர்ச்சி உண்டாக்கி விட்டது. ஆனால் வெளிக்கு மந்தமாக புன்னகை பூண்டான். பார்வதி பதிலே பேசவில்லை. அவளுக்குள்ளே இருந்து ஒரு நீண்ட பெருமூச்சு எழுந்து வெளிக்காற்றோடு கலந்தது. அதற்குமேல் அங்கே உட்கார்ந்து இருப்பது விஸ்வத்திற்கு வேதனையாக இருந்தது. சரேலென்று எழுந்து வேறு அலுவல் பார்க்கப்போய் விட்டான். தங்கள் கேள்விக்குப் பதில் வராதது கண்டு குழந்தைகளும் அப்புறம் விளையாடப் போய்விட்டன. அந்தச் சிறு சம்பவம் அதோடு போய் விட்டது.

வருஷம் வருஷமாக ஐந்தாறு வருஷங்கள் உருண்டோடிப்போய் விட்டன. ஆயினும் கணபதி விஸ்வம், இருவருக்கும் நடுவே இருந்த பள்ளம் மட்டும் கொஞ்சம் கூட மேடிட்டுப் போகவில்லை. முன்னர் அவர்களை ஒன்று சேர்க்க பிரயத்தனித்த குடும்பத்தினருக்கு அது ஆறின கஞ்சியாகப் போய்விட்டது. இனி அவர்கள் பேசுவது அசாத்யம் என்றே எல்லோருக்கும் நம்பிக்கை.

ஒரு நாள் இரவு மணி பத்து. கணபதியின் வீட்டில் ஒரே பரபரப்பாக இருக்கிறது. குழந்தை முத்துவை சாயந்திரம்முதல் காணோம். கணபதி ஊர் முழுவதும் தேடிப் பார்த்து வந்து விட்டான். வழியில் போலிஸ் ஸ்டேஷனிலும் ரிப்போர்ட் செய்துவிட்டான். முத்து அகப்படவில்லை. பார்வதியோ கண்ணீர் விட்டுக்கொண்டு கதறிப் போய் நிற்கிறாள், மனதில் என்னென்லாமோ கற்பனை செய்துகொண்டு. கணபதி திரும்பத்திரும்ப வெளியேபோய் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தான். பார்வதி மட்டும் தனியே இருந்து மனவேதனைப் பட்டுக் கொண்டிருந்தாள்.

திடீரென்று வாசலில் "அம்மா" என்று குரல் பலக்கக் கேட்டது. அது முத்துவின் குரல்! கைநிறைய பக்ஷணத்துடன் விஸ்வத்தின் கையைப் பிடித்திழுத்துக் கொண்டு குதித்தோடி வந்தான் முத்து.

காணாமற் போன முத்து திரும்பி வந்ததும், அதற்கு மேல் சிறிதும் எதிர்பார்க்க முடியாதபடி எத்தனையோ வருஷங்களாக வீட்டுப் படியேறி இராத விஸ்வத்தின் வரவும், இரண்டும் ஏககாலத்தில் நடக்கவும் பார்வதி ஒரு நிமிஷம் அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டாள் விஸ்வத்தைப் பார்த்துக் கொண்டே. அவனை 'வா' என்று அழைக்கக்கூட அவளுக்கு ஞாபகம் வரவில்லை. முத்துவைக் காணமல் அவள் விட்ட கண்ணீர் ஆனந்தக் கண்ணீராக மாறியது.

"அண்ணு வா வா," என்று தன் ஹிருதயம் முழுவதையும் திறந்து காட்டி அவனை வரவேற்ருள் பார்வதி. "இன்று சாயந்திரம் முதல் இவனை எங்கெல்லாம் தேடறது! துடிச்சுப் போயிட்டோம். நீ எங்கே கண்டே இவனை ?"

"ஆத்துக்கு வந்திருந்தான்."

"ஆத்துக்கா! ஏண்டா உனக்கு வழி தெரியுமா ?" என்று முத்துவின் முதுகில் மூன்று விரல்களால் தட்டிக்கொண்டே கேட்டாள் ஆவலோடு.

"எனக்குத் தெரியாதோ, உன்னை கூட்டிண்டு போகட்டுமா" என்று கூவிக்கொண்டே மற்றக் குழந்தைகளோடு விளையாடப் போய்விட்டான் குழந்தை.

விஸ்வநாதன் இதுவரை மௌனமாக இருந்தான், அவன் மனம் கிளர்ந்திருந்தது. பிறகு மெதுவாக ஆரம்பித்தான்.

"முத்து சாயந்திரமே அங்கே வந்து விட்டானும். இருட்டிய பிறகு திரும்ப அவனைத் தனியே ஆத்துக்கு அனுப்ப அவளுக்கு தைர்யம் வரவில்லை. என் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். இன்றைக்குப் பார்த்து நானும் வெளியேயிருந்துவர இவ்வளவு நாழிகை ஆகிவிட்டது. இப்பொழுது தான் வந்தேன். சமாச்சாரம் சொன்னுள். தேடப்போகிறீர்களே என்று உடனே கூட்டிக்கொண்டு வந்தேன். கணபதி இல்லையோ ஆத்திலே" என்ருன்.

"அவனைத் தேடிண்டுதான் போயிருக்கிருர் வெளியே. வர சமயம்தான்" என்ருள் பார்வதி. கணபதியைப்பற்றி அவன் கேட்டது அவள் மனதில் இன்னதென்று விவரிக்க முடியாத ஒரு மகிழ்ச்சியை அளித்தது.

"சரி நான் ஆத்துக்குப் போயிட்டு வருகிறேன். இன்னும் சாப்பிடவில்லை" என்று கூறிப் புறப்பட எழுந்தான் விஸ்வம்.

"ஏன் அண்ணு இங்கேயே சாப்பிடேன். அவாளும் இன்னும் சாப்பிடவில்லை" என்று துணிந்து கூறி விட்டாள் பார்வதி. தான் சொல்வது என்னவோ போல் இருந்தது அவளுக்கு.

"இல்லே, அவள் காத்துக்கொண்டிருப்பாள்; நான் ஆத்துக்குப் போகிறேன்" என்று விடைபெற்றுக் கொண்டான் விஸ்வம்.

விஸ்வம் போனதும் கணபதி உள்ளே நுழைந்தான். முத்துவைக் காணவும் சரமாரியாக கேள்விகள் போட்டான். பார்வதி சட்டென்று "எதிர்க்க அண்ணுவைப் பார்த்தேளா?" என்ருள்.

"யாரை? விஸ்வத்தையா?"

"ஆத்திலிருந்து முத்துவை இப்பொதான் கூட்டிண்டு வந்து விட்டுட்டுப் போகிருன். இரண்டு எட்டுக்கூடப் போயிருக்கமாட்டான்" என்ருள் கலீரென்று.

கணபதிக்கு திடுக்கென்றது. சரேலென்று வாசலுக்குப் போய் பார்த்தான். அவனைத் தொடர்ந்தாள் பார்வதியும்.

அண்ணு போய்விட்டான்!

கணபதி பார்வதி பக்கம் திரும்பினுன். பார்வதி அவனையே பார்த்தாள். அவள் ஹிருதயத்தில் மகிழ்ச்சி நிரம்பி யிருந்தது. கணபதியின் முகத்தோற்றத்திலிருந்தும் மௌனத்திலிருந்தும் அவனுக்குள்ளே ஏதோ வேதனைப் படுகிருனென்று யூகித்துவிட்டாள் ஒரு நொடியில்.

பார்வதி கணபதியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே, "எங்கண்ணுதானே முந்திக்கொண்டு விட்டான்!" என்ருள். அவள் கண்களில் ஒரு ஒளி தோன்றியது.

கணபதிக்கு மேலே ஒன்றும் பேசத் தோன்ற வில்லை.

அன்றிரவு ஒரு கையில் தன்னையும், மற்ருெரு கையில் விஸ்வத்தையும் பிடித்துக் கொண்டு முத்து நடந்துபோவதாக கனவு கண்டான் கணபதி.

# லக்ஷிய சோதனை

அன்று, ரகுநாதன் படித்துவரும் கலாசாலையின் கடைசி பார்லிமெண்டரி யூனியன் விவாதக் கூட்ட தினம். நவீன கால சமூகக் கொள்கைகளில் தீவிரப் பற்று கொண்டுள்ளவன் ரகுநாதன். பத்திரிகைகள் வாயிலாகப் படித்தும், பெரியோர் பிரசங்கமூலமாகக் கேட்டும் அறிந்திருந்து, அதனுல் ஏற்பட்ட மன விலாசத்தினுல், சமூகத்தில் உள்ள குறைபாடுகளை, அவைகளால் ஏற்படும் பாதகங்களையெல்லாம் களைந்து எறிந்து விட வேண்டும் என்று அவனுக்கு இருந்த ஆத்திரத்தை இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. சமூக சம்பந்தமான எந்த பிரச்னைபற்றிய விவாதத்திலும் அவன் பங்கெடுத்துக்கொள்ளத் தயங்குவதில்லை. இயற்கையாகவே அவனுக்கு விவாதகுணம் அமைந்திருந்தது. ஆகவே அன்றையக் கூட்டத்தில் அவனே அந்த விஷயத்தைப் பற்றின விவாதத்தை ஆரம்பித்து வைப்பதாக இருந்தது.

ரகுநாதன் தன் இடம் விட்டெழுந்து பிளாட்பாரத்தில் போய் நின்றுகொண்டான். அவன் பேசப் போகும் அந்த பிரமாதமான விஷயத்திற்குத் தக்கபடி அவன் முகம் தீவிரக்களை பொலிந்து விளங்கியது. எதிர் வரிசையில் கலாசாலை ஆசிரியர்களும், பின் வரிசைகளில் சகோதர மாணவர்களும், வலது கையோரமாக கூட்டத்திற்கென்று அழைப்பின்பேரில் வந்திருந்த ஊர்ப்பிரமுகர்களும் வீற்றிருந்தார்கள்.

ரகுவின் நண்பன் கிட்டு ஓரத்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் கண்கள் ஜன்னலுக்கு வெளியே எதையோ பார்த்துக் கொண்டிருந்

தன. அந்த விவாதத்தில் அவனுக்கு அவ்வளவு ஆசையோ, அக்கறையோ இல்லையோ என்று சந்தேகிக்கும்படியாக ஆர்வமற்று இருந்தது அவன் முகம். சிறிது அசிரத்தைக் குறி காட்டியது. ரகு பிளாட்பாரத்திற்குச் சென்று நிற்கவும், அவன் உதடுகளில் லேசான புன்னகை கிளம்பியது. அந்த சமயத்தில் அவன் பக்கம் மேடையிலிருந்து திரும்பிய ரகுவின் கண்களைப் பார்த்தவுடன், புன்னகை மறைந்தது. முகம் கீழ் நோக்கிக் கவிழ்ந்தது. காரணம் அவர்கள் இருவருக்கும்தான் தெரியும்.

ரகுவின் பேச்சு ஆரம்பத்தில் சாதாரணமாகத்தான் இருந்தது. போகப்போக சமூகத்தின் மீது அவனுக்குள்ள அத்தனை ஆத்திர உணர்ச்சியும் சேர்ந்து குமுறிக்கொண்டு வருவது போல், வார்த்தைகளின் உத்வேகம் அதிகரித்துக் கொண்டே சென்றது. கண்டன வார்த்தைகள் அவைகளின் முழுவேகத்துடன் உபயோகிக்கப்பட்டன.

ரகுவின் இவ்வளவு வெறுப்புக்கும், கோபத்துக்கும், கசப்புக்கும் ஆளான அந்த விஷயம் சமூகத்தை அரித்துத் தின்று கொண்டிருக்கும்படியான 'வரதக்ஷிணையின் கொடுமை.' இது விளைவித்திருக்கும் பாதகத்தை அவன் நினைத்துக் கொண்டபோது அவன் நெஞ்சம் குமுறியது. பெற்றோர் சிலர் வரதக்ஷிணை கொடுக்க முடியாமல் துடிதுடித்துக் கொண்டு பெண்களைப் பாழும் கிணற்றில் தள்ளுவது போல, கிழவனோ, வியாதியஸ்தனோ என்றுகூட தாரதம்யம் பார்க்காமல் மணம் செய்து கொடுப்பதும், பெற்றோரும், விவரம் அறிந்த பெண்களும் தற்கொலை செய்துகொள்ளும் சம்பவங்களும் அவன் மனக் கண்முன் தோன்றிய போது அவன் மனது துடி துடித்தது.

பெண்களைக் கொள்வதோடு பணமும் கேட்கும் மாப்பிள்ளைகளின் மனப்பான்மையைப் பரிகசித்துப்

பேசினான். அவ்வாறு செய்வதால் விளையும் பாதகங்களால் அவர்கள்மீது விழும் சாபங்களின் பாரத்தை அவர்கள் உணரவேண்டுமென எச்சரிக்கை செய்தான். அந்த ஒரு மணிநேர அவகாசத்தில் அவன் பேசிய பிரசங்கம் அவனது தீவிர சீர்திருத்த மனப்பான்மையை பூரணமாக வெளியிட்டுக் காட்டியது.

ஆனால் அவன் கடைசியாகக் கூறிவிட்டு உட்கார்ந்த அந்த வாக்கியங்களின் எதிரொலி மாத்திரம் சபையினரின் மனதில் தாக்கி அவர்களது உணர்ச்சியை கிளப்பிவிட்டது.

"...இதற்கு திருஷ்டாந்தமாக எந்த இடைஞ்சலையும் பொருட்படுத்தாமல் எதிர்த்து நின்று நான்..." சட்டென்று அவன் பேச்சு அந்த இடத்தில் நின்றுவிட்டது. ஒரு விநாடிக்கு மேல் வார்த்தை கூற அவன் நா எழவில்லை. அவ்வளவு தூரம் அவன் உணர்ச்சி வசப்பட்டுப் போயிருந்தான். அடுத்த விநாடி சமாளித்துக் கொண்டு பேசத் தொடங்கினான்...

"...இதை நிறைவேற்றி உதாரணம் காண்பிப்பேன்!" என்று படபடத்துக் கூறி முடித்து விட்டு விருட்டென்று இறங்கி இடத்தில்போய் உட்கார்ந்து கொண்டான். அவன் பிரசங்கத்தை சபையினர் தம் கர கோஷங்களால் சிலாகித்துக் காட்டினார்கள்.

கூட்டம் முடியவும் ரகுவின் கண்கள் கிட்டு இருந்த புறமாகத் துளாவின. அதே சமயம் கிட்டுவின் கால்கள் ரகுவை நோக்கி அவனை இழுத்து வந்தன; இருவரும் சேர்ந்து கலாசாலைக் கட்டிடத்தை விட்டுப் புறப்பட்டு, எதிரே இருந்த கடற்கரையை நோக்கி நடக்கலானார்கள். ஆனால் இருவரும் வாய்திறந்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. பிரசங்கத்தினால் இருவர் மனதுகளும் கிளர்ந்திருந்தன.

சமூகக் குறைபாடுகளைத் தொலைத்து விடுவதில் கிட்டுவுக்கு உள்ள அக்கறை ரகுவின் அக்கறையைவிடக்

குறைந்ததல்ல. ஆனால் அவன் அபிப்ராயம் ரகுவி னுடையதற்கு முற்றிலும் மாறுபட்டது. ரகு ஒரு லக்ஷிய உலகத்தில் சுற்றிவந்துகொண்டி ருக்கிறான் என்பது அவன் அபிப்ராயம். தற்போதைய கட்டு திட்டங் களுக்கு இடையில், ஒருவன் முன்னேறும் தூரத்திற்கு ஒருவரையரையுண்டு என்ற உண்மை உலகில் தன் நண்பன் இல்லை என்று அவனுக்கு உறுதிப் பட்டிருந்தது.

இதைப் பற்றி அவர்கள் தர்க்கித்திருந்த சமயங் களில் விவாதத்தின் வேகம், அவர்கள் பொறுமையின் எல்லையை பரிசோதித்து விட்டிருக்கிறது. ஆனால் ரகுவுக்கு தனது லக்ஷிய உலகில்தான் நம்பிக்கை. தன் பலம் அறியாமல், சாதனைக் குணம் இல்லாமல், முது கெலும்பற்ற ஒரு சமூகக் கோஷ்டியைச் சேர்ந்தவன் தன் நண்பன் என்பது கிட்டுவைப் பற்றி அவன் அபிப் ராயம். ஒருவரைப் பற்றிய மற்றொருவர் அபிப்ராயம் அப்படி இருந்தது!

கடற்கரை நோக்கி சிறிது தூரம் போகுமுன்னரே அவர்களிடையே நிலவி யிருந்த மௌன நிலைமை தானாக நழுவிப் போய்விட்டது. ரகு முதலில் பேசத் தொடங்கி "கிட்டு, இன்றைய விவாதம் எப்படி" என்று அவன் முகத்தைப் பார்த்துக்கொண்டே கேட்டான்.

"பேச்சுக்கென்ன? கேட்பானேன்" என்று கிட்டு பதில் கூறியபோது அவன் உதடுகளில் விஷமப் புன்னகை தோன்றியது. ரகு மனதில் அந்த வார்த்தை சுருக்கெனத் தைத்தது.

"இந்தா, கிண்டல் பண்ணாதே, ஒழுங்காகக் கூறு!"

"ஒழுங்காகத்தான் பேசுகிறேன். வீறுப்புப் பேச் சைக் கிரியாம்சையில் காட்டும் பொழுதல்லவா தெரியப் போகிறது வண்டவாளம்!"

ரகு கலகலவென்று சிரித்து விட்டான். தன்

கடைசி வார்த்தைகளைக் குறித்து அவன் கிண்டல் செய்கிறான் என்று மனதில் பட்டது. "அடே, நீ எப்பொழுதும் ஒரு சந்தேகப் பேர்வழிதானே. நம்பிக்கையில்லாத ஜந்து!" என்று கூறிப் பரிகசித்தான் ரகு.

"அடே யாரிடம் இந்த கதை யெல்லாம் விடு கிறாய்? இன்றைக்குச் சொல்லுகிற வார்த்தை இது. உன்னால் ஒருநாளும் இதை நிறைவேற்ற முடியாது. எனக்கு நிச்சயம்" எங்று ஓங்கியடித்தான் கிட்டு.

"வாஸ்தவமாக?"

"முக்காலும் முடியாது. முடியாது! தற்பொழுது நம் கைகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை நீ அறியவில்லை" என்றான் கிட்டு.

"நீ ஒரு கோழை!" என்றான் ரகு ரோஸத்தோடு.

"இருக்கலாம்" என்று மட்டும் கூறிவிட்டு கிட்டு சிரித்துக்கொண்டான். தன் பலஹீனத்தை அறி யாதவன் ரகு என்று அவன் மனம் படம் பிடித்துக் காட்டியது. "இதோ பார் ரகு! உன் பெற்றோர் அபிப் ராயம் முதன்மையாக கலக்கப்பட வேண்டும் என்பது உனக்கு ஞாபகமில்லை. அவர்கள் நம்மைப்..."

"ஓ அதை யெல்லாம் ஒரு நொடியில் என் வழிக்கு மாற்றிவிடுவேன். எனக்குச் சந்தேகமே யில்லை; இதுதானா பிரமாதம்?" என்றான் ரகு தன் லக்ஷியத்தில் முழு பலத்தையும் ஊன்றிக் கொண்டு.

"சரி, இதற்குமேல் வார்த்தை பேசுவதில் பிர யோசன மில்லை. காலம் வெகு தொலையில் இல்லை. அதுவரைப் பொறுத்துப் பார்ப்போம்" என்று பேச் சுக்குப் புள்ளிவைத்துப் பேசினான் கிட்டு.

'நான் நிரூபித்துக் காட்டும்பொழுது சொல்வாய்!' என்றான் ரகு விடாமல்.

ஒரு வருஷம் கழிந்துபோய் விட்டது. நண்பர் களின் கலாசாலைப் பிடிப்பு முடிந்து இருவரும் தங்கள்

கிராமம் சென்று விட்டார்கள். இந்தக் காலத்தில் ஒருவரை ஒருவர் சந்திக்கவே சந்தர்ப்பம் வாய்க்க வில்லை. அப்போதைக் கப்போது எழுதிக்கொள்ளும் கடிதங்களே அவர்களுக்குள் தொடர்பை நீடித்துக் கொண்டிருந்தது.

கலாசாலை நாட்களில் நடந்த அந்த சிறிய சம்பவம் அவர்கள் ஞாபகத்திலிருந்து சிறிது சிறிதாக அழிந்து கொண்டிருந்தது. இதர எத்தனையோ விஷயங் களைப்போல. ஆனால் அதற்குக் காரணமாக இருந்த அந்த லக்ஷியம் மட்டும் ரகுவின் மனதில் நாளுக்குநாள் வலுப்பட்டுக்கொண்டே வந்தது.

அன்று ரகு வீட்டில் ஒரே களேபரமாக இருந்தது. மறுநாள் காலமே புறப்பட்டு வருவதாக பெண் வீட்டுக்காரர் ஒருவரிடமிருந்து வந்த தந்தியின் விளைவே அந்த தடபுடல். ரகுவின் தந்தை, தாய், பாட்டி ஆகிய இவர்கள் மூவரும் பேசிக்கொண்டிருந் தார்கள், தம் அபிப்ராயங்களை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டு.

"அவனுக்குத்தான் நல்ல பணம் இருக்கிறதே, நம்ப ரகுவுக்கு கை நிறைய செய்யரதுக்கு என்ன? இதுதானே அவனுக்கு முதல் பொண்ணு. என்ன அலுத்துப் போயிட்டான? செய்யட்டுமே" என்று பாட்டி தோரணையாகக் கூறினள்.

"இல்லை அவன் ரொம்ப ஆசைக்காரன்னு சொல்ரு. பெண்ணுக்கு செய்யாமே வேறே யாருக்கு செய்யப் போரு? செய்தால், அவா பொண்ணு, மாப் பிள்ளை வைத்துக்கொண்டு ஆளுகிருர்கள். நமக்கு என்ன? இதோ வரானே மாப்பிள்ளை. அவன் பாடு; மாமனர் பாடு. வேணுங்கிறதை, கேட்டு வாங்கிக் கட்டுமே" என்று அந்த சமயத்தில் ரகு உள்ளே நுழைவதைப் பார்த்துவிட்டு அவன் தாய் சேர்த்துக் கூறினள்.

ரகு ஒரு கேள்விப் பார்வையுடனே அவர்கள் பக்கம் திரும்பினன். அந்த சமயம் பாட்டி பதிலுக்கு “ அதெல்லாம் இல்லே நம்ப ரகுவுக்கு ஐயாயிரம்—ஐந்து விரல்களேயும் காட்டி—வைச்சாத்தான் மாப்பிள்ளேயாவான். இல்லேயானல் பொண்ணு அவாளது ; பிள்ளே நம்பளது ” என்று ஒருபோடு போட்டாள் ரகுவைப் பார்த்துக் கொண்டே. எல்லோரும் சிரித்தார்கள்.

இந்த வார்த்தைகளேக் கேட்ட ரகு திடுக்கிட்டான். ஆனலும் சமாளித்துக் கொண்டு ‘நான் சொன்னல் போறுமா பாட்டி’ என்றான்.

இந்த ஹாஸ்யத்தை மௌனமாக அனுபவித்துக் கொண்டிருந்த ரகுவின் தகப்பனர் மெதுவாக “அவன் தான் தன் அபிப்ராயத்தை எடுத்துச் சொல்லட்டுமே. சின்னக் குழந்தையா ” என்றார்.

ரகுவின் மனதில் இந்த வார்த்தைகள் சுருக்கென்று பட்டன. இதுவரை விளேயாட்டாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர் வார்த்தைகள் அதற்கு ஒரு புள்ளி வைத்துவிட்டன. பாட்டியும், அம்மாவும் பேச்சை நிறுத்திவிட்டு அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். ரகுவின் மனதில் ஒரு பதை பதைப்பு உண்டாயிற்று. ஏதோ உட்புகுந்து குழப்பியது போலிருந்து. மறு விநாடி அவன் லக்ஷியம் அவன் மனக்கண் முன் தோன்றியது. அவன் முகம் தீவிரமடைந்தது. “என் அபிப்ராயம் தான் முன்னமே தெரியுமே ; திரும்பக் கேட்பானேன் ? ” என்றான் ரகு.

பாட்டி இரண்டடி முன்னுக்குக் காலெடுத்து வைத்தாள். “இந்தாடா ரகு, இத்தனே நாள் தான் கன்னுப் பின்னுன்னு உளறிண்டு இருந்தே. அசடு மாதிரி இப்படி யெல்லாம் உளறுதே ” என்று கடகடவென்று பேசினள் கொஞ்சம் கோபமும், ஆத்திரமும் கலந்த குரலில்.

ரகு அதை லக்ஷியம் செய்யாதவன்போல் சிரித்துக்

கொண்டான். பாட்டி மேலும், "ஏண்டா, யாருடா இந்த காலத்திலே கையிலே பணம் வாங்காமே கல் யாணம் பண்று? நாம் மட்டும்தான் வாங்கப் போறேமோ? ஏதோ கண்ணுக்கு நிறத்தியா செஞ் சாத்தானே நன்னயிருக்கும்? பொண்ணு நன்னு யிருக்குன்னுட்டு பொண்ணை மட்டும் கல்யாணம் பண் ணீண்டு வந்துடறேன் என்கிருயாக்கும்" என்று அடித்துக் கூறினுள் மறுபடியும். எல்லோரும் சிரித் தார்கள்.

"ஏன், நாம் தான் பணம் வாங்காமல் ஒரு புதுவழி செய்து காண்பிப்போமே. நம்மைப் பார்த்து எல்லோ ரும் பாடம் படித்துக் கொள்ளட்டுமே' என்ருன் ரகு தன் லக்ஷியத்திற்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு.

இதுவரையில் பொறுமையாக அவன் தாய் கேட்டுக் கொண்டிருந்தாள். அதற்குமேல் முடியவில்லை. அவன் இப்படிப் பேசியது முதல் தடவையல்ல. எரிச் சலாக இருந்தது அவளுக்கு. 'ஆமாண்டா, நீ ஒரு பைத்தியக்காரன் செய்துட்டா, எல்லோரும் உன்னைப் பார்த்துச் செய்யப்போரு இல்லையோ! உன் பேச்சு எனக்கு வேண்டிக் கிடக்கல்லே!' என்று ஆத்திரமாகப் பேசினுள்.

'நாம் ஒருவர் தான் பைத்தியக்காரராளா இருப் போமே,' என்ருன் ரகு பதிலுக்கு. அம்மா முகத்தில் எள்ளும் கொள்ளும் எதிரே வெடித்தது. "ஆன படிப் புக்கு இதுதான் அடையாளம், சீதனம் வாங்கிவிட் டால் இவன் கௌரவம் தான் போய் விடுகிறது. மற்றவர்களுக்கு வராத கௌரவக் குறைவு இவனுக்குத் தான் வரப்போகிறது" என்று படபடத்துக் கூறினுள். பாட்டி பேசாமல் நின்று கொண்டிருந்தாள். ரகுவின் தகப்பனுரும் கூட.

இனி விளையாட்டாகப் பேசிக்கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை என்று ரகு, "அவர்களிடம் பணம்

வாங்கி நிறையப் போவதில்லை. இதைப்பற்றி அவர்களிடம் பேசவே வேண்டாம்" என்றான் உறுதியோடு.

இதுவரை மௌனமாக நின்ற அவன் தகப்பனார் "ஆமாம், நாம்தான் கையில் ஒன்றும் வாங்கப் போவதில்லையே! பெண்ணுக்கும், பிள்ளைக்கும்தானே செய்யச் சொல்லுகிறோம்" என்றார் அமைதியாக.

ரகு திடுக்கிட்டு அவர் பக்கம் திரும்பிப் பார்த்தான். அவரா இந்த வார்த்தை சொன்னது? யாருக்கு அந்த லக்ஷியத்தில் ஒரு கவனம் உண்டு என்று அவன் சிறிது நம்பிக்கை கொண்டிருந்தானோ அவரா இப்படிப் பேசியது! ரகுவின் தாயும் பாட்டியும் இது விஷயமாக தங்கள் அபிப்ராயங்களை கூறியபோதே, ரகுவின் லக்ஷியத்திற்கு சோதனை ஆரம்பமாகிவிட்டது என்று சொல்லவேண்டும். இப்பொழுது தகப்பனாரின் வார்த்தைகள் அதற்கு முதல் அடியைக் கொடுத்தன. அவன் மனதில் ஒரு வேதனையும், குழப்பமும் உண்டாகி உளைந்தது. தன்னுடைய சாதனைசக்தி பற்றி அவனுக்கு சந்தேகம் ஏற்பட்டதுபோலிருந்தது. அதை சமாளித்துக்கொண்டு, "பணம் கையில் வாங்குவதற்கும் சீர்செய்வதில் நிபந்தனை விதிப்பதற்கும் இரண்டிற்கும் எனக்கு வித்யாசம் தெரியவில்லை" என்றான். இதைக் கூறும்பொழுது அவன் கண்கள் தகப்பனாரையே உற்று நோக்கின என்ன சொல்லப்போகிறாரோ என்ற ஆவலுடன்.

அவர் பேச வாயை அசைக்கு முன்னரே, அம்மாவின் குரல் உச்சஸ்தாயியில் கேட்டது. "இவன் பேச்சைக் கேட்டு சீர்வரிசை ஒண்ணுமில்லாமல், பொண்ணை மட்டும் கல்யாணம் செய்துகொண்டு வந்துவிட்டால் ரொம்ப அழகாத்தான் இருக்கும்! அப்படி அந்தஸ்தை விட்டுக்கொடுத்து, யார் வீட்டுக் கல்யாணமோ போலே—செய்து கொண்டுவர நான் தயாரில்லை" என்று அழுத்தமாகக் கூறினாள்.

அந்த வார்த்தைகளில் 'அந்தஸ்து' என்ற வார்த்தை மாத்திரம்—மலரைச் சுற்றி பறந்துகொண்டிருக்கும் வண்டுபோல்—அவன் மனதில் ரீங்காரமிட்டுக்கொண்டிருந்தது. வாய் முணு முணுத்துக் கொண்டது. சீர்நிபந்தனையின்றி கல்யாணம் செய்து கொள்வது அவ்வளவு நம் அந்தஸ்துக்குக் குறைவானதா? அதில்தானா நம் அந்தஸ்தின் திராசு முனை நிற்கிறது என்று ஆராயத் தொடங்கியது அவன் உள்ளம். அந்தஸ்தைப்பற்றி என்ன விசித்ர அபிப்ராயமடா இது!

ரகு திகைத்துப் போய் பதில் ஒன்றும் கூறுமல் நின்றுகொண்டிருந்தான். "ஆமாம், நம் அந்தஸ்துக்குத் தக்கபடி அவர்களும் செய்தால்தானே ஒரு கௌரவமாக இருக்கும்" என்று தன் சகதர்மிணியின் அபிப்ராயத்தை எதிரொலித்துப் பேசினர் தந்தை.

ரகுவின் மனம் மேலும் குழம்பியது. தன் கக்ஷி பலவீனப்பட்டு வருவது போன்றதொரு உணர்ச்சி அவன் மனதில் இழைந்தது. ஆனால் லக்ஷியத்தை விட்டுக்கொடுக்க அவனுக்கு மனம் வரவில்லை. "ஏன் அது அவர்களுக்குத் தெரியாதோ?......

அதை முடிப்பதற்குள் அம்மா இடை மறித்து, "ஆமாண்டா, யார் கண்டது? இன்னிக்குச் சரி. நாளைக்கு பெண்ணை அனுப்பறபோது காதிலே ஒரு புதுச் சிகப்புத் தோட்டையும், ரெண்டு வளையையும் போட்டு குறத்தி மாதிரி ஆத்துக்கு அனுப்பிச்சு வச்சா யாருக்குடா அவமானம்? நானா அந்தப் பெண்ணை வைச்சு ஆளப் போகிறவள்? ஊர் சிரிக்குமே அப்போ! அப்படி ஒரு நாட்டுப் பெண் எனக்குவர நான் சம்மதிக்க மாட்டேன்" என்று அடித்துப் பேசிவிட்டு விருட்டென்று திரும்பி சமையலறைக்குப் போய் விட்டாள். எல்லோரும் சிரித்தார்கள் ரகுவைத் தவிர்த்து.

என்ன ஆணித்தரமான வார்த்தை! அந்த சில வாக்யங்களில் அவள் அடக்கி பொரித்து விட்ட அந்தக் கருத்துகள்! அதை அளவிட முடியுமா! எதிர்கால வாழ்வு முழுமையையும், அதைப் பற்றிய பெண்மையின் பூரண நம்பிக்கையையும், உலகத்தின் உறுதியற்ற குணத்தையும், சந்தேகத்தையும் படம் பிடித்துக் காட்டின அந்த வாக்யங்கள்!

ரகுவின் குழம்பிய மனம் தத்தளிக்கத் தொடங்கியது. அவன் கட்டிய லக்ஷியக் கோட்டையின் அஸ்திவாரம் கலகலத்து ஆடிக்கொண்டிருந்தது. எந்த நிமிஷத்திலும் தரைமட்டமாகி விடலாம். சந்தேகமேயில்லை. அம்மாவின் அநுபவம் வாய்ந்த அந்த கடைசி வாக்கியந்தான், அவன் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. அதற்கு என்ன பதில் கூறுவது?

அவன் உள்ளம் பலவீனமடைந்தது. அதில் வரைந்திருந்த உறுதி காற்ருேடு கலந்துபோய் விட்டது. அவர்களோடு தர்க்கித்து அவர்கள் மனதை மாற்றிவிட முடியுமென அவன் உறுதி கொண்டிருந்தான். நம்பிக்கையுடன் இருந்தான். மனச்சித்திரம் வரைந்திருந்தான். எல்லாம் இன்று அழிந்துபோய் விட்டன.

அதற்குமேல் ஒரு விநாடி அந்த இடத்தில் தங்கி நிற்க அவனுக்கு முடியவில்லை. சாவதானமாக "உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள். என்னைக் கேட்பானேன்," என்று சொல்லிவிட்டு வாசலை நோக்கிப் போய் விட்டான்.

வாசலில் தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அது கிட்டுவிடமிருந்து வந்த கடிதம். அன்று கிட்டு கூறிய வார்த்தைகள் அவன் ஞாபகத்திற்கு அப்பொழுது வராமலிருக்க முடியுமா!

# அ ங் க ச் சி

“அம்மாமி! இந்த வருஷம் உங்காத்திலே சொலு வைக்கப்போறேளோ? போன வருஷம் வைக்கவே இல்லையே’ என்று ரொம்ப ஆசையோடு கேட்டான் ஹரிஹரன்.

ஹரிஹரனுக்கு வயசு பதினலு இருக்கும். நான்காவது பாரத்தில் படித்துக்கொண்டிருக்கிறன். இருந்தாலும் சதா விளையாட்டுப் புத்திதான். பள்ளிக்கூடம் போகும் நேரமும், டியூஷன் நேரமும் போக மீதி நேரம் முழுவதையுமே அநேகமாக கிட்டிப்புள், பம்பரம், கோலி முதலியன ஆடி, பொழுது போக்குவதில் தான் பிரியம் அதிகம். வீட்டில் ஒரு நிமிஷமும் தன்னந் தனியே இருக்க அவனுக்கு இருப்புக்கொள்ளாது. அவ்வளவு விளையாட்டு மனசு! தனியே வீட்டில் உட்கார்ந்து கொண்டு தன்னேடு சேர்ந்து விளையாடியோ, உறண்டை யிட்டுக்கொண்டோ பொழுது போக்க, தன் வயது சகோதர சகோதரிகளும் இன்றி எவ்வளவு நேரம்தான் இந்த மனசு பித்துப் பிடித்ததுபோல் உட்கார்ந்திருக்கும்?

பணக்காரப் பெற்றேர்களுக்கு ஹரிஹரன் ஒரே பிள்ளை. வேறு உடன் பிறப்புக் கிடையாது. ஒரு பெண் குழந்தை வீட்டைச் சுற்றி வளைய வளைய வந்து கொண்டிருக்க வில்லையே என்ற குறை சதா பெற்றேர் மனதில் இருந்து வந்தது. ஹரியின் குதூகலச் சிறு மனதில் இந்த எண்ணம் அவ்வளவு உருப்படியாகப் பதியாவிட்டாலும் அவனுக்கே நிர்ணயிக்க முடியாத ஒருவித நினைப்பு அவ்வப்போது நிழல்போல் தோன்றி மறுகணம் மறைந்துவிடும். வீதியில் போகும்போது

அடுத்தடுத்த வீடுகளில் அண்ணன் தங்கைகள் விளையாடி, சண்டையிட்டு அடித்துக்கொள்ளும் காட்சிகள் அவன் கண்களுக்குத் தென்படும். ஒரு விநாடி அந்த இடத்தில் நின்று அதைப் பார்த்துவிட்டுப் போய் விடுவான்.

அவன் வீட்டிற்கு நான்கு வீடுகள் அடுத்தாற்போல் இருந்தது நாராயணியின் வீடு. நாராயணி ஆறேழு வயதுக் குழந்தை. ஹரியைப்போலவே பணக்கார வீட்டுப் பெண். அழகும் சூட்டிகையும் பெற்று, செல்வமும் சீருமாக வளர்க்கப்படும் குழந்தை. தெருவில் எத்தனையோ வீடுகளில் குழந்தைகள் இருந்தபோதிலும், ஹரியின் ஹிருதயத்திலே மகிழ்ச்சியும், திருப்தியும் அளித்து ஒரு ஸ்தானம் பெற்றுவிட்ட அன்புருவம்.

இந்த இரண்டு குடும்பங்களுக்குள் ஏற்பட்டிருந்த போக்கு வரத்தும், பழக்கமும், நாராயணியின் அண்ணா ராமமூர்த்தி ஹரிஹரனின் வகுப்புத்தோழனாகி விட்டதும் சேர்ந்து, தன் வீடு வேறு நாராயணி வீடு வேறு, தான் வேறு அவள் வேறு என்று கூடத் தோன்றாதபடி ஒருமை யொலித்தது ஹரியின் மனது. அவ்வளவு அன்பு இணைப்பும், கட்டும் நாளா வசதியிலே ஏற்பட்டு விட்டது, ஹரிஹரனுக்கும் நாராயணிக்கும் நூதனமாக ஏற்பட்ட உறவின் முறையிலே.

பள்ளிக்கூடத் தோட்டத்திலிருந்து காவற்காரனுக்குத் தெரியாமல் அப்பொழுதுதான் மலர்ந்த - நூதன அழகான - ஆனால் மணமில்லாத ஒரு புஷ்பத்தை அபேஸ் செய்து கையில் சுற்றிக்கொண்டு ஹரி திரும்புவான். 'நாராயணி' என்ற குரல் உச்சஸ்தாயியில் அவள் வாசலிலே கேட்டும். நாராயணி குரல் கேட்டு, குதித்து ஓடி வருவாள். அடுத்த நிமிஷம் கையில் புஷ்பம் இன்றி ஹரி தன் வீட்டிற்குள் நுழையப் போவான். 'அம்மா, ஹரி கொடுத்தான்,' என்று

கூவிக்கொண்டே நாராயணி அடுக்குளே நோக்கி ஓடிக் கொண்டிருப்பாள். ஒரு புஷ்பத்திற்கே அப்படி!

நவராத்ரி பண்டிகைக்கு இரண்டு தினங்கள் முந்தின ஒருநாள் மாலை கொம்மாளப் பேச்சில் அடிபட்ட ஒரு விஷயம் ஹரியின் உள்ளத்தை கிளறி விட்டது. பள்ளிக்கூடத்திலிருந்து வீடு வரவும் ஹரி, 'அம்மா, நம்பாத்திலே கொலுவச்சா என்ன அம்மா,' என்று கேட்டான், விளையாட்டாகவோ வேணுமென்றோ. அம்மாவுக்கு குபீரென்று சிரிப்பு வந்துவிட்டது. "நீ வேணு போய் ஊரை அழைச் சுட்டு வறையா? ஒரு புடவை........." என்று இழுத் தாள் கேலியாக.

அந்தக் கேலி அவனுக்குப் பொறுக்கவில்லை. 'போ அம்மா' கேலி பண்ணிண்டு' என்று சிணுங்கிக் கூறிவிட்டு அப்புறம் திரும்பிக்கொண்டான்.

ஹரி திரும்பியவுடன் அம்மாவின் கேலி மறைந்து கவலையாக மாறிவிட்டது. ஒரு நீண்ட பெரு மூச்சு விட்டாள். ஆத்தில் கொலு வைத்து, ஊராரை மஞ் சள் குங்குமத்திற்கு அழைத்து, தேவியை வழிபட ஏது வாக ஒரு பெண் குழந்தை இருந்து, ஹரியின் ஆசை தீர வகை யில்லையே என்ற ஏக்கத்திடையே ஆழ்ந்து விட்டாள். சரேலென்று தேற்றிக்கொண்டு 'ஹரி, நம்ப ஆத்திலே வைக்காட்டா என்ன? நாராயணி ஆத் திலே வைக்கறு; என்ன இப்போ' என்றாள்.

"போன வருஷம் அவாத்திலே வைக்கல்லையே," என்றான் ஹரி.

"போன வருஷம் நாராயணியின் தாத்தா செத்துப் போய்விட்டார். அதனாலே வைக்கல்லே. இந்த வருஷம் வைக்கப்போறாளாம்,"

அதற்கு மறுநாள்தான் ஹரி ஆரம்பத்தில் கேட்ட கேள்வியைக் கிளப்பினான்.

'ஆமடாப்பா, நாராயணி பிடிவாதம் பண்றா.

கட்டாயம் வைக்கணுமாம். யாரு படியெல்லாம் கட்டி பொம்மை எல்லாம் எடுத்து வச்சு அலேக்கொடுத்துக் கொள்கிறது" என்று நாராயணியின் தாய் மேல்பேச் சாக பதில் கூறினுள்.

ஹரியின் கண்கள் மகிழ்ச்சியால் பூரணமாக விரிந் தன. "அம்மாமி, நானும் மூர்த்தியும் சேர்ந்து எல் லாம் செய்துடறோம். நாளைக்கே கட்டாயம் வைக்க ணும் அம்மாமி" என்று வற்புறுத்திக் கூறினுன். அத்தனை ஆசையும், ஆவலும் அவன் விரிந்த கண்களி லிருந்து பொங்கி வழிந்துகொண்டிருந்தது.

மூர்த்தியும் அவனை ஆதரித்தான். அம்மாவும் ஒரு வாருக சிறுவர் வேண்டுகோளுக்கு சம்மதம் தந்துவிட் டாள். தோழர்கள் விளையாடப் போய்விட்டார்கள்.

பண்டிகை தினம் சாயந்திரம் ஜெகஜ் ஜோதியாய் வீசும் தீபாலங்காரத்தினிடையே தேவி வெகு கம்பீர மாக கொலு வீற்றிருந்தாள். நான்கு சிறிய கைகள் சேர்ந்து சிருஷ்டித்திருந்த அந்த ஜோடிப் பின் விமரிசையை கண்டு களித்து வியக்க அந்த தேவ தச்சன் விஸ்வகர்மாவும், அசுர தச்சன் மயனும்தான் வரவேண்டும்! அவ்வளவு அழகாக நவராத்திரி தேவி க்கு கோயில் அமைத்துவிட்டார்கள் சிறுவர்கள்!

முகட்டிலிருந்து படிப்படியாக இறக்கிக் கொணர்ந்து தட்டுகள் வைத்து தரையைத் தொடும் படியாக பத்துப் படிகள்; இயற்கையாகவே சுவர் களில் வர்ணம் தீட்டியதுபோல் பலவித நூதன புஷ்ப வேலைப்பாடுகள்; ஒழுங்காக சித்தரித்து இருந்தது. வர்ணத்தாள்களை ஒட்டுத் தெரியாமல் நேர்மையாகவும், திறமையாகவும் அந்தப் படிகளில் பசையிட்டு ஒட்டி இருந்தது. இரண்டு பக்கங்களிலும் நெருக்கமாக இடை தெரியாமல் தொங்கவிடப்பட்டி ருக்கும் காகிதப் புஷ்பச் சங்கிலிகள்.

மேல்படிகளில் ஒன்றரை அடி உயர்ந்து உயிர்த்

தோற்றம்கொண்டு (பொலியும் மஹாவிஷ்ணுவின் தசாவதார ஸெட், ராம பட்டாபிஷேகம், பஞ்சபாண்டவர்கள், மார்க்கண்டேயர், பார்வதி பரமேஸ்வரான் முதலிய பல பண்நட்டி பொம்மைகள். அடுத்தாற்போல் நம் நாட்டில் பிரதானம் பெற்றுவிட்ட தலைவர்களின் உருவப்பொம்மைகள். அவர்களே நேருக்கு நேர் நின்றுகொண்டிருப்பதுபோல் தோன்றும். அடுத்த படி மரப்பாச்சிகள், வெங்கலப் பீங்கான் பொம்மைகள், பித்தளைச் சொப்புகள் கிழிஞ்சல், சோழி முதலியன வரிசைக் கிரமமாக வைக்கப்பட்டிருந்தன. இவ்வளவுக்கும் கீழே சிறியதாக ஒரு அழகான தெப்பக்குளம். அதன் கரைகளில் விளக்குகள்; ஜலத்தில் மிதக்கும் பலவித நீர்ப்பிராணிகள்; நடுவே ஒரு மைய மண்டபம். அத்தனையும் அந்த நான்கு கைகளின் கைத்திறன் அமைப்பு!

விளக்கேற்றப்போகும் சமயம். கொலு அலங்காரம்செய்துவிட்டு வீட்டுக்குப் போன ஹரிக்கு வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை. அவன் மனசு பூராவும் கொலுவின்மீதே லயித்து மயங்கி இருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் திரும்பவும் நாராயணி வீட்டிற்கு ஓடிவந்து படியேறப்போனான். அந்த சமயத்தில் உள்ளே சப்தமும் இரைச்சலும் கேட்கவே திகைத்து, சிறிது தயங்கி நின்று ஓட்ட வேகத்தை அடக்கி மெதுவாக உள்ளே சென்றான்.

ஒரு மூலையில் கூடத்தோரமாக நாராயணி சிணுங்கிக் கொண்டு நின்றிருந்தாள். அவள் முகத்தில் பிடிவாதமும் முரண்டும் ஓடிக்கொண்டிருந்தன. பரந்த முகம் குவிந்து சுருங்கி இருந்தது. அவளருகில் அம்மாமியும், மூர்த்தியும் நின்று அதட்டியும் தேற்றிக் கொண்டும் இருந்தார்கள். மூர்த்தியின் குரல்தான் ரொம்ப உரக்க கேட்டுக்கொண்டிருந்தது. அதற்கேற்றார்ப்போல் நாராயணியின் முரண்டும் அதிகரித்துக்

கொண்டு இருந்ததே தவிர குறைந்த பாட்டைக் காணோம்,

ஹரி கூடத்திற்குப் போன சமயம், மூர்த்தியின் கோபம் அளவுக்கு மீறிப்போய் விட்டது. "முரண்டு பண்ணுதே என்கிறேன். கேட்கமாட்டேன் என்கிறுயா !" என்று கத்திக்கொண்டே ஓங்கி ஒரு தட்டு நாராயணியின் தலையில் தட்டிவிட்டான். நாராயணி கைகால்களை உதறிக்கொண்டு ஓவென்று அலறத் தொடங்கிவிட்டாள்.

இதைப் பார்த்த ஹரியின் ஹிருதயத்தில் சுருக் கென்ற வேதனை பிறந்தது. வீட்டில் மூர்த்தியைத் தவிர யாரும் நாராயணியைக் கைதொட்டு அடிப்பதை அவன் இதுவரையில் பார்த்ததே கிடையாது. இந்தப் பயல் மூர்த்தி மட்டும் சமயம் போது இல்லாமல் அவளை அழச்செய்துகொண்டிருப்பான். அவன், அன்பும் வாஞ்சையும் இல்லாத ஒரு மிருகம் என்றே ஹரிக்கு உள்ளூர நினைப்பு. இல்லாவிட்டால் இப்படி அழவிடுவானு நாளும் கிழமையுமாக ?

சில சமயம் கோபம் வந்து அவளை அடித்ததற்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு அவனோடு சண்டைக் குப் போய்விடுவான் ஹரி. அவளைத் தேற்றுவான். அவ னுக்கல்லவோ தெரியும் அங்கச்சி ஒருத்தி அவனுக்கு இல்லாத குறையும், அந்த பாக்யம் உடையவர்களைப் பார்த்து அவன் அடையும் பொருமையும்! அந்த சிடு மூஞ்சி மூர்த்திக்கு அந்த பாக்யத்தை அநுபவிக்க எப் படித் தெரியப்போகிறது ?

"ஏதுக்கடா, அவளை அடிக்கிறே" என்று மூர்த்தி மீது சீறி விழுந்தான் ஹரி. அதே சமயம் அவன் கை நாராயணியின் தலையை ஆதரவோடு தடவிக் கொடுத்தது. அவன் கண்கள் ஆவலோடு அம்மாமி யின் முகத்தைப் பார்த்து வினவின, அழுவதன் கார ணத்தை ஆராயும் எண்ணத்துடன்.

"பின்னே என்னடான்ளு? யாரோ பெண் தெருவிலே ஒரு செலுலாய்ட் பொம்மை வாங்கிண்டு போச்சாம். அது வேணுமாண்டான்ளு. இத்தனை இருக்கிறது போதாதாம். இவளுக்கு இவ்வளவு முரண்டா" என்று கத்தினன் மூர்த்தி.

இதை நம்பாமலோ, அல்லது ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளவோ ஹரி அம்மாமியின் முகத்தைப் பார்த்தான். "எத்தனை வாங்கினல்தான் என்ன? அவளுக்கு ஒண்ணு இல்லாவிட்டா ஒண்ணை நினைச்சு அழுதுண்டே இருக்கணும்; வேலை என்ன?" என்று அலக்ஷியமாகக் கூறிவிட்டுப் போய்விட்டாள்.

ஹரிக்கு நாராயணி அழும் காரணம் தெரிந்துவிட்டதும் இதற்குத்தான பிரமாதம் என்பதுபோல் அவன் முகம் அலக்ஷியக் குறி காட்டியது. இரக்கம் நிறைந்த கண்களுடனே நாராயணியின் அழுத முகத்தைப் பார்த்தான். தேம்பிக்கொண்டிருந்தாள். கன்னங்கள் வழியே கண்ணீர் வழிந்து புதுச் சட்டையில் பட்டு சிதறிக்கொண்டிருந்தது.

நாராயணியின் அழுத முகத்தை பார்க்க சகிக்கவில்லை ஹரிக்கு. இந்தப் பிரமாதத்தை வாங்கிக் கொடுத்துவிட்டால் தான் என்ன என்று நினைத்தானே ஒழிய அவள் முரண்டும், வீம்பும் பெரிதாகத் தோன்றவில்லை. அதை அவன் பொருட்படுத்தவில்லை. அவளைத் தேற்றி என்னென்னமோ சொல்லிப் பார்த்தான். மசியவில்லை. அவன் பேச்சிற்குக்கூட அவள் மதிப்பு வைக்கவில்லை. குழந்தை முரண்டிற்கு எல்லை உண்டா? அதுவாக நினைத்து தேறிக்கொண்டாலொழிய அடங்குமா என்ன? என்ன சொல்லியும் கேளாமல் அன்று ஊரழைத்துவர கண்டிப்பாக மறுத்துவிட்டாள் நாராயணி. நயமும் பயமும் ஒரு சிறிதும் பயன்படாமற் போகவே அம்மாவும்

மூர்த்தியும் "எக்கேடு கெட்டுப்போ," என்று வெறுப்புச் சலிப்புடன் கூறிப்போய்விட்டார்கள்.

அவ்வளவு அழகாக ஆசையோடு தாங்கள் ஜோடித்து இருந்ததும், முதல் நாளன்று நாராயணி முரண்டு பண்ணி ஊரழைக்கப் போகாததால் யாரும் வந்து பார்க்கமுடியாமல் போவதும் ஹரியின் மன துக்கு சமாதானப்படவில்லை.

அந்தப் பயல் மூர்த்தியோ மற்ற வீடுகளுக்குப்போய் சுண்டல் வாங்கி வரப் போய்விட்டான். தின்னிப்பயல்! ஹரிக்கு ஒன்றும் ஓடவில்லை. நாராயணியின் அழுத முகம் அவன் எதிர் நின்று வேதனை கொடுத்துக்கொண் டிருந்தது. என்ன செய்வதென்றும் தெரியவில்லை. பேசாமல் எழுந்து நின்று தயங்கிய அடிகளுடன் வீட் டிற்குப் போனான். அவன் மனதில் உருவற்ற யோசனை களும், எண்ணங்களும் தோன்றி அலைத்துக் கொண் டிருந்தன. பார்க்கப்போனால் ஒரு சிறு பொம்மை! இதை வாங்கிக்கொடுக்க மறுக்கிறார்களென்று அம் மாமியையும், மூர்த்தியையும் எண்ணி மனதிற்குள் சலித்துக்கொண்டான். ஆயினும் எப்படித் துணிந்து அவர்களிடம் சொல்லி அதை வாங்கிக்கொடுத்துவிடச் சொல்வது! அவ்வளவு சுதந்திரம் எடுத்துக்கொள்ள அவன் மனதில் துணிவு இல்லை. நினைப்புதானே ஒழிய வெளியிட தைரியம் இல்லை.

சிறிதுநேரம் சும்மா உட்கார்ந்து பார்த்தான். அவ னுக்கு நிம்மதிப்படவில்லை. "ஏண்டா விளையாடப் போகவில்லையா நித்தியம் போலே" என்று அம்மா கேட்டதற்கும் மறுத்து தலையை அசைத்துவிட்டான். விளையாடப்போகும் எண்ணமே அவனுக்குத் தோன்ற வில்லை. யோசித்து யோசித்துப் பார்த்தான். பலதிறப் பட்ட யோசனைகள். சுவற்றோரம் உட்கார்ந்துகொண் டிருந்தவன் திடீரென்று எழுந்தான். கையைத் தட்டிக் கொண்டான். ஏதோ ஒரு வழிக்கு வந்துவிட்டது

போல் முகம் மாறியது. ஓசைப்படாமல் உள்ளே சென்று தன் பெட்டியை மெதுவாகத் திறந்தான். அம்மா சப்தம் கேட்டு 'என்னடா' என்ருள். 'ஒன்று மில்லை' என்று சொல்லிவிட்டு எதையோ எடுத்துக் கொண்டு சரேலென்று வாசலில் பாய்ந்துவிட்டான்.

சிறிதுநேரம் சென்றது. 'நாராயணி!' என்ற பழக்கமான குரல் வாசலில் கேட்டது. இதற்குள் அழுகையை அடக்கி இருந்த நாராயணி ஹரியின் குரலைக் கேட்டு எழுந்து மெதுவாக வாசலுக்குப் போனுள்.

ஹரி ஏதோ ஒன்றை வைத்துக்கொண்டு கையை நீட்டினுன். நாராயணி கவனித்துப் பார்த்தாள். ஸெலு லாயிட் பொம்மை.

"இந்தா நீ கேட்டது. போய் சீக்கிரம் ஊரை அழைச்சுட்டு வரலாம் வா," என்று அவள் கண்களைப் பார்த்துக் கூறினுன்.

நாராயணியின் முகம் மலர்ந்தது. ஹரியைப் பார்த்துக்கொண்டே கைநீட்டி வெடுக்கென்று அதைப் பிடுங்கிக்கொண்டு, நிற்காமல் உள்ளே அம்மாவிடம் ஓடினுள். ஹரியும் பின் தொடர்ந்தான். கைகளைத் தட்டிக்கொண்டே ஐந்து நிமிஷங்களில் தயாராகி, பொம்மையைக் கொலுவில் தன் கையால் வைத்து விட்டு, ஹரியைத் துணைக்கு கூட்டிக்கொண்டு தெரு வழைக்கப் போய்க்கொண்டிருந்தாள் நாராயணி.

தங்கள் வீட்டில் கொலு வைத்து விளையாடவும், தேவியை பூஜிக்கவும் ஒரு பெண் குழந்தை யில்லையே என்ற வருத்தத்தால், அந்த சாயங்கால வேளையில் அளவுகடந்த மனக்கலக்க மனுபவித்துக்கொண்டிருந் தாள் ஹரியின் தாய். ஹரிக்கு அந்தக் கவலையே யில்லை. தன் சொந்தத் தங்கையுடன் கொலுப் பார்க்க ஊரழைக்கப் போவதில்கூட அவன் அவ்வளவு பெருமை யடைந்திருப்பானு என்பது சந்தேகம்தான். அவனுடைய முகம் அப்படிப் பிரகாசித்துக்கொண் டிருந்தது அப்போது.

# வைராகி

கோடைகாலம். சூர்யன் வான உச்சியில் ஊச லாடிக்கொண்டிருந்தான். மேல் திசையை நோக்கியே அவன் கால்கள் இழுத்தன. மேகங்கள் ஓடி ஒளிந் திருந்த இடத்தையே கண்டுபிடிக்க முடியவில்லை. வெயில் சுளீரென்று அடித்துக்கொண்டிருந்தது. உஷ் ணக் காற்று வீசிக்கொண்டிருந்தது. தேகத்தில் பட்ட மாத்திரத்தில் ஒருவித எரிச்சலைக் கிளப்பிவிட்டது. வெப்பத்தின் கொடுமை தாங்கமாட்டாமல் தெருவோர் யாவரும் வீடுகளின் உட்புறத்திலே அடங்கிக் கிடந் தனர்.

தெருவெங்கும் ஒரே நிசப்தமாக இருந்தது நடு நிசியைப்போல. ஆள் நடமாட்டமே காணும். எச்சிற் கலைகளுக்கு 'எங்கே எங்கே' என்று அடித்துக்கொள் ளும் நாய்களும் மாடுகளும்கூட அவை விழக்கண்டும் அசையாமல் நிழலோரங்களில் பதுங்கிப் படுத்துக்கிடந் தன. ஒரு காகத்தைக்கூட காணும் என்ருல் கடும் கோடையின் தகிப்பை என்னென்பது?

'ஒரு ஐந்து நிமிஷத்திற்காவது கார்மேகம் நாற் புறமும் சூழ்ந்து இவனை மறைக்காதா இவன் கொட்டம் அடங்காதா,' என்று முணுமுணுத்துக் கொண்டே வாசலுக்கு வந்தேன்.

எங்கள் வீட்டுக்கு எதிரில் ஒரு பெரிய சத்திரம் உண்டு. அதைச்சுற்றி ஒரு நந்தவனமும்கூட. ஆனல் சாதாரண அரளி, அந்திமந்தாரை, காட்டு ரோஜா இவை போன்ற மலர்ச்செடிகளே மிகுந்திருந் தன. எங்கள் தெருவில் சிறிது குளுமையான இடம் இது ஒன்றுதான். சாப்பிட்டானதும் வெயிற்

பொழுதை போக்குவதற்கு பலர் அங்கே கூடி விடுவார்கள்.

விசாலமான அதன் திண்ணை சங்கப் பலகை போன்றது. வருகிறவர்களுக்கெல்லாம் இடம் கொடுக்கும். மகாராஜன் ஒருவர் அதைக் கட்டிவைத்து விட்டுப் போயிருக்கிறார். அத்துடன் தினம் வழிப்போக்கர் எட்டுப் பேர்களுக்கு சமைத்துச் சாப்பிடுவதற்கு வேண்டிய உணவுப் பொருள்கள் வழங்குவதற்கும் தக்க ஏற்பாடு செய்திருந்தார். அந்த தர்மம் இன்று வரை ஒழுங்காகத்தான் நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

சத்திரத்துத் திண்ணைக்கு நான் வரவும் அஜீரணமய்யரும்—அது சுந்தரமய்யர் என்ற அவருக்கு இடப்பட்ட காரணப் பெயர்—வந்து சேர்ந்தார். எங்கள் திண்ணைப் பேச்சு வழக்கம்போல் ஆரம்பமாயிற்று.

'சாப்பாடு ஆகிவிட்டதா,' என்றேன்.

'ஆகிவிட்டது. ராத்திரிச் சாப்பாடே ஜீரணமாகவில்லை' என்றார் அஜீரணமய்யர் தயங்கித் தயங்கி ஏப்பம் விட்டுக்கொண்டே.

'ஓய்! உமக்கு ஜீரணமாவதற்கு ஒரு வழி சொல்கிறேன், கேளும்.'

'என்ன ஐயா அது?'

'சாப்பிட்டானதும் ஜீர்ணமாகவில்லை ஜீரணமாகவில்லை என்று சஹஸ்ரநாமம் செய்யும். ஜீரணமாகா விட்டால் என்னைக் கேளும்.'

'அப்படியே செய்கிறது. இதுதானா பிரமாதம்!' என்று சிரித்துக்கொண்டே அவர் பதில் கூறினார்.

எங்கள் பொருளற்ற பேச்சு நித்ராதேவிக்குப் பிடிக்கவில்லை போலிருந்தது. எங்கள் கண்களையும் வாயையும் மந்திரத்தால் கட்டிவிட்டாள். அவள் வசமாகிவிட்டோம். சம்பாஷணை தானாகவே நின்றுபோய் விட்டது.

கண்ணயர்ந்து ஒரு குறட்டையாவது விட்டிருப்பேனே என்னவோ தெரியாது. ஏனெனில் 'மகராஜ், மகராஜ்,' என்று இருமுறை கூப்பிட்ட குரல் கணீரென்று என் காதுகளில் பலமாகத் தாக்கியதும் கண்கள் திறந்துகொண்டன. தோரணையும் கம்பீரமும் கலந்த குரலில் யார் அப்படிப் பேசியது என தலைநிமிர்ந்து பார்த்தேன்.

ஒரு பைராகி!

அவன் அங்க அமைப்புகளை நான் இங்கே விஸ்தரிக்கவில்லை. சுருக்கமாகச் சொல்கிறேன். உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை ஒரு முறையல்ல, இருமுறை ஏறிட்டுப் பார்த்தேன். அந்த மஹாராஷ்டிர வீரன் சிவாஜியின் ஞாபகம் தான் வந்தது. மொகலாயருடன் சரிசமானமாகப் போராடிய மராட்டியரின் உருவங்களும் வீரச் செயல்களும் என் மனக்கண்முன் தோன்றின. 'அட, இவனும் அந்த நாட்டினன்தானே. இத்தகைய தேகக்கட்டு வாய்ந்திருப்பதில் ஆச்சர்யம் ஏதும் இல்லையே,' என்று எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டேன்.

'மகராஜ்! வெகு தொலையிலிருந்து வருகிறேன். அகோரமான பசி, தாங்க முடியவில்லை. இந்த சத்திரத்தில் ஏதாவது ஆகாரம் கிடைக்குமா,' என்று மராட்டிய பாஷையில் கம்பீரமாகக் கேட்டான் பைராகி.

எனக்கு ஹிந்தியில் சிறிது பரிச்சயம் உண்டு. பைராகி பேசிய மராட்டி புரியாமல் இல்லை. அவன் பேசிய மாதிரியிலிருந்து அந்த கம்பீரம் அப்பாஷைக்கே தான் உரியதன்றி, களைப்பினாலும் பசியாலும் சோர்வுற்று ஈனஸ்வரப்பட்டிருக்கும் அவனுடைய குரலுக்கு அன்று என்று கண்டுகொண்டேன்.

அவன் மீது இரக்கம் பிறந்தது. அருகில் குறட்டைவிட்டுக் கொண்டிருந்த சத்திரத்து அய்யரை

எழுப்பி; 'ஓய், இன்று விநியோகிக்கவேண்டிய பங்கு களில் ஏதாவது மீதம் இருக்கிறதா,' என்றேன்.

'இன்னும் இரண்டு பேர்களுக்குக் கொடுக்கலாம்,' என்றார் அவர்.

அவனுக்கு ஒரு பங்கு கொடுக்க சிபார்சு செய்தேன். அவரும் சம்மதித்து உணவுப் பொருள்களை எடுத்துவரச் சென்றார்.

எனக்கு அறைகுறையாகத் தெரிந்த ஹிந்தியை வைத்துக்கொண்டு பைராகியுடன் பேச்சு வளர்க்க வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. எனக்கு ஹிந்தி தெரியும் என்று நான் காட்டிக்கொண்டதும் அவன் புன்னகையுடன், 'தங்களுக்கு மராத்தி தெரியுமா? தக்ஷிணத்தில் எங்கள் வடநாட்டு பாஷை தெரிந்தவர்கள் ஆயிரம் பதினாயிரத்துக்கு ஒருவரைக்கூட காண்பது அரிதாக இருக்கிறதே,' என்றான். அவனுக்கும் என்னோடு அதிகம் பேசவேண்டும் என்ற எண்ணம் தோன்றியதுபோலிருந்தது. அவனுடன் பேசி, அவன் ஊர், எங்கிருந்து வருகிறான், எங்கே போகிறான், என்பதுபோன்ற விஷயங்களை கிரஹித்துக்கொண்டேன். பக்கத்தில் இருந்தவர்களுக்கும் அதை தர்ஜமா செய்து சொன்னேன்.

ஒரு ஆளுக்குப் போதிய அரிசி, பருப்பு, உப்பு, புளி, மிளகாய் மற்றும் சில்லுண்டி பதார்த்தங்களுடன் விறகு உள்பட எல்லாம் எடுத்துக்கொண்டு அய்யர் வந்து சேர்ந்தார்.

அவை பைராகி முன் வைக்கப்பட்டன.

பைராகி அவற்றைப் பார்த்ததும் முகத்தை சுளித்துக்கொண்டான். என்னையும், சத்திரத்து ஐயரையும் ஒருதரம் கூர்ந்து பார்த்தான். 'இனிமேற்பட்டு சமைத்து எப்போது சாப்பிடுவது, அதுவரையில் பசி தாங்காதே,' என்பதே அந்தப் பார்வை, சுளிப்பின்

அர்த்தமாக இருக்கலாம் என நான் யூகித்துக்கொண்டேன்.

நான் நினைத்ததற்கு ஏற்ப பைராகி, 'மகராஜ் சமைத்த உணவு கிடையாதா,' என்ருன்.

'கிடையாது, இங்கு இதுதான் வழக்கம்' என்றேன்.

'ஆமாம் இவனுக்கு தயாராக இங்கு சமைத்து வைத்திருக்க வேண்டியதுதானே;' என்று ஏளனமாக சிரித்தார் சத்திரத்து அய்யர்.

அந்த சிரிப்பை பைராகி பொருட்படுத்தவில்லை. 'நல்லது மகராஜ் என்று பதிலிறுத்துவிட்டு அவைகளை எடுத்துச் சென்று சமைக்க வழி தேடாமல், அந்த இடத்திலேயே அவைகளுக்கு முன்னுல் காலை சம்மணம் இட்டு உட்கார்ந்துகொண்டான். எங்களுக்கு ஒன்றும் புரியாமல் திகைப்பு அதிகமாயிற்று. என்ன செய்யப் போகிருனே என்று அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தோம். பைராகி முதலில் அரிசிப் பொட்டணத்தைப் பிரித்தான். அரிசியை பிடிப்பிடியாக எடுத்து வாயில் போட்டுக்கொண்டு உள்ளே செலுத்தினுன். அரிசி முழுவதும் காலியாகிவிட்டது. எங்களுக்கு ஆச்சர்யமாக இருந்தது. நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே பருப்பு, உப்பு, புளி முதலிய இதர சாமான்களும் முறையே அதே கதியை அடைந்தன.

அதிசயத்தால் கண் கொட்டாது பைராகியையே பார்த்துக்கொண்டிருந்தேன். அவன் சாப்பிட்ட மாதிரியிலிருந்து அரைப்பசிகூட தணிந்திராதென்று எனக்குத் தோன்றியது. சத்திரத்து அய்யருக்கும் இந்த சம்பவத்தால் தன்னை அறியாத ஆனந்தம் உண்டாயிற்று. அஜீர்ணமய்யரோ எனக்கு சமீபத்தில் பிரமித்துப்போய் உட்கார்ந்திருந்தார்.

நான் சொல்ல வாயெடுக்கும் முன்பாகவே சத்திரத்து அய்யர் போய் அன்று பாக்கி இருந்த மற்ருெரு

பங்கையும் எடுத்துக்கொண்டு வந்து பைராகி முன் வைத்தார். பைராகியின் கண்களில் நன்றி தோன்றியது. கடவுளை நினைத்து ஒரு கும்பிடு போட்டு தன் நன்றியை வெளிக்காட்டி விட்டு, மகிழ்ச்சியுடன் அவைகளையும் சாப்பிட ஆரம்பித்தான்.

அவைகளை அவன் உட்செலுத்திக்கொண்டிருக்கும்போது என் மனம் எண்ணியதாவது—சாதம் ஒரு கொதி குறைவாக வடித்து விட்டால் விரிசலாக இருக்கிறது, வயிற்று வலி உண்டாகிவிடும் என்றெல்லாம் சொல்லி ஒதுக்கி விடுகிறோமே! இயற்கையில் உண்டான அரிசி பருப்பு, உப்பு, புளி, மிளகாய் முதலியவைகளை, ருசிகளையும் பொருட்படுத்தாமல் பச்சையாக உட்செலுத்தி விடுகிறானே இவன்! ஜீரணம் தான் ஆகுமா? குடலென்ன கல்லா இரும்பா? இவன் ஹட யோகியா? அவர்கள்தான் இப்படிச் செய்வார்கள். கல்லை ஜீரணிக்கக்கூடிய வயது என்று பெரியோர் சொல்லத்தானே கேட்டிருக்கிறோம். இப்படித் தின்பவரை இதுவரை பார்த்ததே இல்லையே! என்று எண்ணமிட்டுக்கொண்டே பிரமித்துப்போய் இருந்தேன்.

ஒன்று விடாமல் தின்று முடித்துவிட்டு பைராகி பெரிய ஏப்பம் விட்டான். அது வாதாபியைத் தின்று கிளம்பிய அகஸ்தியரின் ஏப்பம்! எனக்கு அப்போது தான் சுய ஞாபகம் வந்தது. பக்கத்தில் உட்கார்ந்திருந்த அஜீரணமய்யர் ஞாபகம் வந்தது. 'ஓய்! நீரும் ஏப்பம் விடுகிறீரே,' என்றேன். அவரும் அசட்டுச் சிரிப்பு சிரித்து வயிற்றை தடவிக்கொண்டார்.

மிஞ்சியது விறகுதான். 'ஏன் இதையும் தீர்த்து விடுகிறதுதானே,' என்றேன் பைராகியைப் பார்த்து சிரித்துக்கொண்டே.

அவனும் சிரித்துக்கொண்டான். 'மகராஜ்! பசியின் வேகம் மட்டும் அடங்கி இராவிட்டால் அதை

யும் கூட விட்டிருப்பேனு என்ன,' என்று பைராகி என் ஹாஸ்யத்தை ரசித்து பதில் கூறினுன்.

'என்ன், பசியின் வேகம் அவ்வளவா?' என்றேன்.

'மகராஜ்! அதனுல் மட்டுமன்று. உடல்வலிமை யும் கூடச் சேர்ந்தது. நாளொன்றுக்கு நான் சராசரி நாற்பது மைல்களுக்குக் குறையாமல் நடக்கிறேன்!' என்ருன் பைராகி.

பைராகி நேரே சத்திரத்துக் கிணற்றுக்குச் சென் ருன். கடும் உப்பாக இருந்த ஜலத்தை ஒரு வாளி நிறைய குடித்துவிட்டு, திண்ணையில் படுத்துத் தூக்கம் போட்டான். சாயந்திர வேளை நெருங்கிக்கொண் டிருந்த சமயம், பைராகி விழித்து எழுந்தான். 'மக ராஜ், போய் வருகிறேன்,' என்று விடைபெற்றுக் கொண்டான். அவன் தெருக்கோடியில் சென்று மறையும் மட்டும் அவனையே பார்த்துக்கொண்டிருந்து விட்டுத் திரும்பினேன்.

பக்கத்தில் நின்ற அஜீரணமய்யர் 'என்ன சார், ஆச்சர்யம்! எனக்கு ராத்திரி சாப்......' என்று பழைய பல்லவியை ஆரம்பித்தார். எனக்கு பொறுமை போய் விட்டது.

'ஓய், பைராகியைப்போல் ஜீரணிக்கவேண்டு மானுல் காந்தாரி செய்ததுபோலச் செய்யும். என்னிடம் வந்து கேட்காதேயும்!' என்று படபடப்பாகச் சொல்லி விட்டு துண்டைத் தட்டிக்கொண்டு கிளம்பினேன். எல்லோரும் சிரித்தார்கள்.

அப்போது எனக்குத் தோன்றியது; பாரதபுத்தி ரன் ஒவ்வொருவனும் இப்படி இருந்தால்—

# கொண்டுவந்த சீர்

இரண்டு தனிக் குடும்பங்களுக்கு ஒரு இணைப்பு உண்டாக்கி இருக்கும் அவள் வாழ்க்கை, தணல் மீது வைத்த கால்போல் துடித்துக் கொண்டிருந்தது. பிறந்தகத்தின் ஸ்திதி அறியாத—இல்லை; அறிந்தும் பொருட்படுத்தாத வீடு அவளுக்கு வாய்த்த புக்ககம்; அந்தப் புது சம்பந்தத்தின் குணமறிந்து ஹிதமாக போகத் தெரியாத தாய் அவளுக்கு. தன் மனதில் நிரந்தரமாகத் தங்கிவிடக்கூடிய ஒரு அதிர்ச்சி ஏற்படாமல் இரண்டு போக்குகளுக்கும் அவள் எப்படி சரிக்கட்டிப்போக முடியும்?

சீமந்த சம்பவம் அவள் மனதில் இன்னும் புதிதாகக் கிடந்தது. அம்மா கண்ணும் கண்ணீருமாக ஒரு மூலையில் உட்கார்ந்து இருந்த சித்திரம் இன்னும் பார்வைக்கு முன் மங்கவில்லை. எதற்காகக் குத்தி வாங்கும்படியான வார்த்தையை அவர்கள் உதிர்க்க வேண்டும்—பார்க்கப்போனால் ஒரு அல்ப விஷயத்துக்கு. வேஷ்டியின் ஜரிகை கொஞ்சம் குறைந்திருந்தால் என்ன? 'சவண்டிக்கு' என்ற அவ்வளவு கடுமையான வார்த்தையா அதற்கு? இத்தனை நாள் அவர்கள் விருப்பப்படி எல்லாம் நிறைவேற்றியிருக்கும் அம்மாவிடம் இந்த சந்தர்ப்பக் குறையைப் பொறுத்துக்கொள்ள மனது இல்லையே என்றெல்லாம் சிவகாமு நினைத்து விசாரப்பட்டாள்.

அந்தச் சூடு தணிவதற்குள் இந்தக் கடிதம் அவள் உள்ளூர பயந்தபடியே வந்துவிட்டது. ஒரு பக்கம் ஆத்திரம், கசப்பு இரண்டாலும் அலைபட்டது அவள் மனசு. ஆசைக்கு ஒரு வரையறை ஏற்படுத்திக்கொள்ளாதவர்களிடமிருந்து வேறு என்ன எதிர்பார்க்க

முடியும்? மனக் கசப்புக்குச் சிகரம் வைத்ததுபோல் இருந்த கடிதத்தின்மீது அலக்ஷியம்தான் உண்டாயிற்று அவளுக்கு. அம்மாவிடம் அதைப்பற்றி பிரஸ்தாபிக்கவே இல்லை. அம்மாவை வற்புறுத்தி நாள் பார்க்கச் சொல்லி கடிதம் வந்த ஒரு வாரத்திற்குள் ஒரே பிடிவாதமாக மாமாவுடன் புறப்பட்டு விட்டாள். செய்கையின் விளைவைப்பற்றி அவள் அக்கரைப்படவில்லை. ஆனாலும் திடீர் திடீரென விழித்து அழும் குழந்தை, ரத்தம் ஊறி வலுப்பெறாத தேகத்தின் பலஹீனம், இரண்டும் பிரயாணம் பூராவும் அவளைக் கண்மூடி அமைதிக் கொள்ளவிடாமல் வேதனையைக் கிண்டிக் கிளறிக் கொண்டிருந்தன.

சிவகாமு பிரசவித்து மூன்றுவது மாத ஆரம்பம். ரத்தம் சுண்டிப்போய் வெளுத்து சதைப்பற்று வற்றிப் போயிருந்த அவள் முகத்தில் நீண்டு உயர்ந்த மூக்கு எடுத்துக் காட்டியது. அந்த வெளுப்பை மறைக்க, பூசி இருந்த மஞ்சள் பலஹீனமாக முயன்று கொண்டிருந்தது. மாம்பழக் கதுப்புகள் போல முன்பு சதைப் பிடித்து இருந்த கன்னங்கள் வெயிலில் வாடின சருகுகள் போல சுருங்கிப் போய் நரம்புக் கோடுகளை வெளிக் காட்டின. கண்கள் ஆழத்துக்குப் போயிருந்தன. ரத்த சோபை குன்றிய உதடுகளில் ஓய்வில்லாமல் போட்டுத் தள்ளிய வெற்றிலைக் காவி படிந்து, அவை கரிக்கனல் துண்டுகள் போல் கன்னிப்போய்க் கிடந்தன. பற்கள் வெண்மை சோர்ந்து இருந்தன. சிவப்புப் பொட்டுகள் குத்தின ஒரு மெல்லிய சுங்கடிப் புடவையும், லேசான சுத்த வெள்ளை ரவிக்கையும், ஒடிந்து விழும்போலிருந்த அவள் தேகத்தை மூடி இருந்தன. மழைக் காலத்து மந்தாரமான வானத்துச் சந்திரன் போல சோபை குலைந்த உருவம். பனி மறைத்து பசுமை குன்றித் தெரியும் இயற்கையின் மங்கிய தோற்றமாக விளங்கினாள் சிவகாமு.

இரவின் நீண்ட நேரம் அவளை அம்மாவிடமிருந்து தொலைக்கு நெட்டித் தள்ளிக்கொண்டு வந்துவிட்டது. ஆனாலும் புறப்படுமுன் அடித்த புயலை அவள் இன்னும் மறக்கவில்லை. சம்பாஷணை அத்தனையும் அவள் மனதில் உளைந்து கொண்டிருந்தது. வேதனைக்கும் வலிக்கும் இடையில் அவள் பிரிந்து வந்த அந்த உருவம் அவள் சிந்தனைகளை ஓட்டிக்கொண்டிருந்தது.

"சிவகாமு, இந்த பச்சை உடம்போடு புறப்பட வேண்டும் என்கிறாயே. தேகத்தில் தான் கொஞ்சம் நல்ல ரத்தம் ஊறட்டுமே" என்று அம்மா கண்ணீரோடு கேட்டாள்.

பெட்டிக்குள் புதுப் புடவைகளை மடித்துக் கொண்டிருந்த சிவகாமு அம்மா பக்கம் திரும்பினாள். நான் போய்த்தான் ஆகணும்அம்மா. இவ்வளவு அநுபவம் உனக்குப் போருதா?' என்று மறுபடியும் பெட்டிக் குள் தலையைத் திணித்துக் கொண்டாள்.

"ஆமடி அம்மா, அவர்கள் வீட்டுப் பெண்ணை ஆயுஸ் பூராவும் வைத்துக்கொண்டு சாப்பாடு போடு கிறேன் என்று சொல்லவில்லை. ஊருக்கு உள்ள வழி கூடவா நமக்குக் கிடையாது? பிரசவித்த பெண் இன்னும் இரண்டு மாதம் கழித்து..."

'அம்மா அதெல்லாம் சரிதான். எனக்கும் இருக்க இஷ்டம்தான். ஆனால் கடிதம் வந்த பிறகு ஒரு வினாடி கூட என்னால் தாங்க முடியாது' என்று தீர்க்கமாகப் பதில் கொடுத்தாள் சிவகாமு.

"எல்லோரும் பெண்ணை, பிள்ளையைப் பெற்றவர் கள்தானே" என்று அடி வயிற்றிலிருந்து கத்திவிட் டாள் அம்மா தன்னையும் மீறி. இமை அணைப்பை மீறிக்கொண்டு கண்ணீர் வெளியே வழிந்தது.

ஒரு கடுப்புச் சிரிப்புடன் சிவகாமு அம்மாவைப் பார்த்தாள். அம்மாவின் கண்ணீரையும், வாயையும் அவள்கட்ட விரும்பினாள் போலிருந்தது அவளுடைய

உறுத்தல் பார்வையினுல். தலைக்குமேல் வெள்ளம் போன பிறகு அம்மா அல்ப விஷயத்துக்கு ஏன் அங்க லாய்க்க வேண்டும் என்றுதான் நினைத்தாள்.

அம்மாவின் ஹிருதயத்தில் அப்போது உணர்ச்சிக் குத்தான் இடம் இருந்ததே ஒழிய தர்க்க நியாயத் துக்கு இடம் இல்லை. குடும்ப வாழ்க்கையின் சுகப் போக்கு தடைப்பட்டுப் போயிருந்த நிலைமையோடு மத்ய காலத்தைத் தாண்டின வயதும் கலக்க, எதிர்க் கக்ஷியின் வார்த்தைகளை சுமுகமாக கிரஹிக்கும் சக்தியை இழந்துவிட்டாள். தனக்கு பாதகமான சந்தர்ப்பத்தின் மீதெல்லாம் எரிச்சலையும் ஆத்திரத் தையும் இறைப்பதுதான் அவள் சுபாவமாகிவிட்டது. ஊருக்கு ஒப்ப இன்னும் ஒரு மாதம் இருந்து தன் குழந்தை பச்சை உடம்பைத் தேற்றிக்கொண்டு போகட்டும் என்ற ஒரே ஆசை அவளுக்கு.

அம்மா விருப்பத்தை நிறைவேற்ற அந்தக் கடிதம் இடம் கொடுக்கவில்லை. சிவகாமுவுக்கு எஜமானரிட மிருந்து அவ்வளவு கண்டிப்பாக, புறப்பட்டு வரும்படி உத்தரவு வந்துவிட்டது. அதன் அழுத்தம் சிவகாமு வுக்கு நன்ருகத் தெரியும். கடிதப்படி நடப்பதைத் தவிர வேறு ஒன்றும் உசிதமாகத் தோன்றவில்லை. பிடிவாதம் சாதித்துவிட்டாள்.

அம்மாவின் கடைசி வார்த்தைகளுக்கு என்ன பதில் அவளுக்குத் சொல்வதென்று தெரியவில்லை. சரே லென்று பெட்டியிலிருந்து அந்தக் கடிதத்தை எடுத்து தன்னைப் புறப்பட்டு வரும்படி எழுதி இருந்த அந்த வரிகளை மளமளவென படித்துக் காட்டினுள். அம்மா பக்கம் திரும்பினுள். 'அம்மா! உன் பெண் உன்னுே டேயே எப்போதும் இருக்கணுமானுல் உன் இஷ் டப்படி செய் - இதைப் படித்த பிறகுகூட' என்று வேதனையையும், ஆத்திரத்தையும் கொட்டிக் கூறி

விட்டாள். அந்தப் பதிலைக் கேட்ட அம்மா பிரமித்துப் போய்விட்டாள்.

பக்கத்திலே தூளியில் தூங்கின குழந்தை விழித்து வீறிட்டது. "ஐயோ! பால் போட்ட மறந்துவிட்டேனே அம்மா" என்று சிவகாமு பதறி ஓடிக் குழந்தையை அணைத்து வெளியே எடுத்தாள்.

சிவகாமுவின் வார்த்தைகள், குழந்தையை அணைத்து நிற்கும் அந்த தாய் உருவம் இரண்டும் சேர்ந்து அம்மாவின் கண்களை ஒரு சொடுக்குச் சொடுக்கின. ஒரு வெறித்த பார்வை; குழப்பத்தினிடையே அவள் கண்கள் மிதந்தன. "சரிடி அம்மா, இருக்கிற கவலை போதும், புதிசு வேறே வேண்டாம்" என்று பால் எடுத்துவர சமயலறைக்குச் சென்றாள் கண்களைத் துடைத்துக்கொண்டு.

இந்தத் தடவையும் கடிதத்தில் கண்டிருந்த அந்த விஷயத்தை சிவகாமு அம்மாவிடமிருந்து மறைத்து விட்டாள். நொந்துபோன அம்மாவின் ஹிருதயத்தை அரிக்கும் புழுவாக இருக்க விரும்பவில்லை சிவகாமு. ஒரு திடமான முடிவுக்கு வந்து விட்டாள்.

ஒரு ஜெர்க் கொடுத்து பஸ் வீட்டு வாசலில் வந்து நின்றது. அதன் எதிரொலி கிளம்பினதுபோல சிவகாமு ஒரு அவசரப் பெருமூச்சு விட்டாள். சுரத்து இல்லாமல் நீண்ட பிரயாணம் ஒரு மட்டுக்கு ஓய்ந்தது என்ற அலுப்போடுகூட ஒரு வேதனை அதில் வலித்து வந்ததுபோல இருந்தது.

பஸ் நிற்பதற்கு முந்தியே சிவகாமுவின் கண்கள் சுதாவாகத் திண்ணையைப் பார்த்துவிட்டன. சில மாதங்களுக்கு முன்தான் தான் பிரிந்துபோயிருந்த முகங்கள் எல்லாம் ஆவலோடு தன் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டாள். அத்தனைக்கும் நடுவில் அவள் பார்க்கத் துடித்துக் கொண்டிருந்த

உருவம்! அவள் மனசு அப்படியே பூரித்துப்போய் விட்டது. அந்தப் பூரிப்பிலேயே கண்களை கையணைப் பிற்குத் திருப்பினுள். மார்பில் முகத்தைப் பதித்து கசக்கிக் கொண்டிருந்த அந்த மிருதுவான ஜந்து அவள் முகத்துக்கு நேராகத் தன் இக்கிணிக் கண்களை உருட்டிக்கொண்டிருந்தது. உற்சாகத்தில் குழந்தைக்கு ஆயாசம் ஏற்படாமல் ஒரு குலுக்கு குலுக்கினுள். ஒரு சிறு சிரிப்பு அவள் உதடுகளில் ஏறியது. 'அதோ பர்ரு உங்கப்பா' என்று அதன் காதோடு ஓதிக்கொண்டே அதன் சின்ன முகத்தை அந்த திசையில் திருப்பிக் கொடுத்து அதன் கன்னத்தில் உதடுகளைப் பதித்து ஒத்தி எடுத்தாள்.

பஸ் நிற்கவும் அவள் வேதனையும் நின்றதாலும் குழம்பிய, விவரமில்லாத ஒரு அகப் பதைப்புடனே சிவகாமு கீழிறங்கத் தயாராளுள். மார்பில் பதித்த குழந்தையோடு வெகு நேரமாக முடங்கிக் கிடந்த கால்களை வெளியே இழுக்க முயன்றபோது அவள் அவஸ்தைப்பட்டாள். ரத்த ஓட்டத்திற்கு தயக்கம் ஏற் பட்டிருந்த அந்த அங்கங்கள் தன் தன் வேலையைச் செய்ய மறுத்தன போலிருந்தது. வலி உறுத்தும் பார்வை யோடு ஒத்தாசைக்குத் தலையை நிமிர்த்தித் திண்ணைப் பக்கம் பார்த்தாள்.

"அன்னம்! சீக்கிரம் போய் குழந்தையை கையில் வாங்கு' என்று மாமனுர் குரல் உச்சஸ்தாயியில் கேட் டது. இரண்டே எட்டுக்களில் அன்னம் பஸ்ஸுக்குத் தாவி வந்தாள். சிவகாமு ஒரு வெட்க மகிழ்ச்சிப் பார்வையுடன் 'அக்கா சௌக்கியமா' என்று மெது வாகக் கேட்டாள்.

"வந்தாயா சிவகாமு சௌக்கியமாக. கொடு இப்படி என் தங்கக்கட்டியை" என்று அன்னம் சிவகாமு நீட்டிய குழந்தையை கைகளில் மிருதுவாக அணைத்து வாங்கினுள். 'வாடா கண்ணு" அத்தை

கிட்ட' என்று வாயாறக் கொஞ்சி முத்தமிட்டுக் கொண்டாள்.

சிவகாமு கால்களை இழுத்துச் சரிப்படுத்திக் கொண்டு இறங்கும்போது, 'மாமி வந்துவிட்டாள்' என்று இரண்டு மூன்று குஞ்சுகள் கத்திக்கொண்டு வாசலுக்கு ஓடிவந்தன. புருஷர்கள் எதிரில் பூரணமாக வெளியிட்டுக் காட்ட முடியாத ஒரு லஜ்ஜை கலந்த சந்தோஷ உணர்ச்சியுடன் சிவகாமு தள்ளாடி இறங்கி, முதுகை ஒருதரம் அமுக்கி கொடுத்துக் கொண்டு படியேறப் போனாள்.

"இருடியும்மா இதோ வந்துட்டேன். ஹாரத்தி எடுக்கணும்" ஒன்று கூறிக்கொண்டே அவள் மாமியார் எதிரே நெருங்கி வந்தாள். "அன்னம் குழந்தையை சிவகாமு கிட்ட விட்டுட்டு ஒரு கை பிடி."

'ஹூம்! சீக்கிரம்' என்று அவசரப்படுத்தினார் மாமனார். சிவகாமு கிழக்குப் பார்த்து நின்றுகொண்டாள். அன்னம் குழந்தையை சிவகாமு கையில் விடப் போனபோது திடீரென குழந்தை எக்களித்து அவள் புடவையில் கக்கிவிட்டது. 'அட, அத்தை மேலே எவ்வளவு பிரியம்!' என்றான் சாமிநாதன் பக்கத்தில் நின்றுகொண்டு. எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

ஹாரத்தி எடுத்து முடியவும் அன்னம் மறுபடியும் குழந்தையைக் கையில் வாங்கிக்கொண்டு சிவகாமு பின்வர உள்ளே சென்றாள். கூடத்தில் எல்லோரும் அன்னத்தைச் சூழ்ந்துகொண்டு குழந்தையைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கையில், அதை அடுத்துள்ள தனி அறையில் போய் உட்கார்ந்துகொண்டாள் சிவகாமு. அப்போது மாமியார் அங்கே வரவும் எழுந்திருக்கப் போனாள்.

"எழுந்திருப்பானேன் அம்மா. வேண்டாம். இளம் பிள்ளைத்தாச்சியோன்னு வசனம்கூட உண்டே"

என்று சொல்லிவிட்டுச் சென்றாள். அதற்குமேல் அங்கு நின்று ஒரு குசலப்ரச்ன வார்த்தை கூடப் பேச வில்லை. அதற்குள் கூடத்தில் கிளம்பின களேபர சப்தம் சிவகாமுவின் கவனத்தை இழுத்தது. நிலை ஓரத்திலிருந்து பார்த்துக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

"மூக்கில் இருக்கிற கடுகடுப்பைப் பார்த்தாலே தெரியலையா? சச்ரூபம் அத்தைதான். இல்லையாடா கிட்டு?" என்று கைதட்டிக் கத்தினான் சாமிநாதன்.

"போ அண்ணா போ. காக்காய் மாதிரி நீ இருக்கே. அவன் எப்படி சிகப்பாய் இருப்பான்" என்று எதிர்த்துப் பரிகாசம் செய்தாள் அன்னம்.

"ஏன், அம்மாமி சிகப்புத்தானே அவளைக் கொண்டிருக்கலாமே" என்று கேலி காட்டினான் கிட்டு.

"அன்னத்துக்கு, தான் ரொம்ப சிகப்பு என்று நினைப்புடா கிட்டு" என்றான் சாமிநாதன்.

"உன்னைவிட நான் எவ்வளவோ சிகப்புதான். வா, மன்னியிடம் கேட்கலாம்" என்றாள் அன்னம் குழந்தையைக் கைகளில் ஆட்டிக்கொண்டே.

"ஏன் இப்படி சண்டை? என்னைத்தான் கொண்டிருக்கிறான் குழந்தை—தாத்தாவை" என்றார் சிவகாமுவின் மாமனார் குறுக்கிட்டு.

இதைக் கேட்டுக்கொண்டே சிவகாமுவின் மாமியார் அங்கு வந்தாள். "உங்களையா? வார்த்தை நன்னா இருக்கு. அதுக்கு நம் ஆத்து முகமே இல்லையே. இப்படித்தான் மரத்தட்டு மூஞ்சியும் மொண்ணை மூக்குமா யாருக்கு இருக்கு இங்கே? அது பாட்டியைக் கொண்டிருக்கு."

"யாரை, உன்னைத்தானே?" என்றார் அவர். எல்லோரும் சிரித்தார்கள்.

"என்னைக் கொண்டால்தான் எவ்வளவோ தேவலையே. அந்தப் பெரிய குளத்துப் பாட்டியை. தோசக் கல்லு மூஞ்சியும், சப்பை வாயும், சிடுசிடுன்னு

எப்போதும் இருக்காளே, உங்க சம்பந்தி அம்மா. அவளைக் கொண்டிருக்கு" என்று ஆத்திரத்துடன் கூறி நிறுத்தினாள்.

தனி அறையில் உட்கார்ந்து கொண்டிருந்த சிவகாமுவின் காதுகளில் ஒரு வேகத்துடன் வந்துவிழுந்தது இந்தப் பேச்சு. உற்சாகத்துடன் இதுவரை கேட்டவள் சரேலென்று உள்ளே உடலை இழுத்துக்கொண்டு சுவற்றோடு சாய்ந்து கொண்டாள். தற்போதைக்கு வேதனையையும், சுற்றுணர்ச்சியையும் மறந்துவிட்டு, நினைப்பு இல்லாத நிலையில் இருந்த அவளை அந்த வார்த்தைகள் மறுபடியும் பழைய நினைப்பில் ஆழ்த்திவிட்டன. பஸ்ஸை விட்டு இறங்குமுன் இருந்த வேதனையின் சாயல் இறங்கினது அவள் உள்ளத்தில். சாதாரணத்தில் இதற்கு ஒரு மதிப்புக் கொடுத்ததில்லை என்றாலும், சந்தர்ப்பத்தில் அதன் பாரம் கனமாகத்தான் இருந்தது. அடிக்க இருக்கும் புயலுக்கு இது அறிகுறியா?

வீறிட்டு அழும் குழந்தையோடு அன்னம் அந்த அறைக்குள் நுழைந்தாள். "இந்தாடியம்மா உன் குழந்தை, அழுகுணி. அத்தையைப் பிடிக்கவில்லையாம்" என்று சேர்த்தாள்.

'ஓஹோ, குழந்தையை வச்சுக்கத் தெரியாவிட்டால் சாக்கு வேறயா' என்று ஏளனம் பேசிக்கொண்டே சாமிநாதன் பின்னால் நுழைந்தான்.

சிவகாமு சரேலென எழுந்து அவர்கள் கேலிக்கு முகத்தில் சிரிப்பு வரவழைத்துக்கொண்டு குழந்தையை கைகளில் ஏந்தினாள். அவள் பார்வையின் சுழலில் சாமிநாதன் பார்வை கலந்தது. குழந்தையை விட்டுவிட்டு அன்னம் பட்டென சாமிநாதன் பக்கம் திரும்பினாள். 'அண்ணா மன்னி என்ன சீர் கொண்டு வந்திருக்கிறாள், என்று பார்க்கப் போகிறேன். நீ இங்கே இரு

மன்னிக்குத் துணையாக" என்று கொண்டே கூடத்திற்குப் பாய்ந்துவிட்டாள்.

அதைக் கேட்ட சிவகாமு திடுக்கிட்டு சாமிநாதனைப் பார்த்தாள். அவன் பார்வையின் தோரணை அவள் கண்களில் பயத்தை உண்டாக்கியது. தனிமையில் இருந்தும் பேச்சு ஆரம்பிக்க வாய் துணியவில்லை. அப்படிப்பட்ட பார்வை. அவள் குழப்பத்தை அறிந்துகொண்டவன் போல சாமிநாதனே ஆரம்பித்தான்: "கடுதாசி எழுதினதுக்குக்கூட மதிப்பு கிடையாதோ? சரிதான்," என்று உறுத்துக் கேட்டுவிட்டு, தானும் கூடத்துக்குப் போய்விட்டான்.

சிவகாமு அசையாமல் நின்று கூடம் பக்கமாக மறையும் சாமிநாதன் உருவத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். குழந்தை மார்பில் புரண்டு சிணுங்கி அழவும்தான் தன் ஞாபகம் வந்தது. ஒரு பெருமூச்சுடன் கீழே உட்கார்ந்து எடுத்துவிடப் போனாள். மற்றவர்களுக்குத் தான் தக்க சமாதானம் சொல்ல முடியாது, அவரிடம் சொல்லிவிடலாம் என்று நம்பிக்கை கொஞ்சம் இருந்தது சிவகாமுவுக்கு. சாந்தமாக நின்று அவன் சாவகாசமாகக் கேட்டிருந்தால் ஏதாவது சொல்லி இருப்பாள். திடீரென ஒரு வார்த்தையில் கேட்டுவிட்டு அவன் நகர்ந்ததை அவள் எதிர்பார்க்கவில்லை. அவ்வளவு சுருக்கமான பதிலும் அவள் தயாரித்து வைத்துக் கொள்ளவில்லை.

குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டே தன் உள்ளத்துக்குக் கவலையூட்டிக் கொண்டிருந்தாள் சிவகாமு. சாமிநாதன் கடும்பார்வைதான் அவள் கண் முன் இருந்தது. அவள் பழைய உறுதி பலஹீனப்பட்டதுபோலக் கூடத் தோன்றியது. ஆனால் அவள் அதைச் செய்துவிட்டதற்கு, பலனையும் வரவேற்கத் தயாராகத்தானே இருக்கவேண்டும்!

மார்பணைப்பில் குழந்தை நன்றாகக் கண்மூடி லேசாகக் குறட்டை இழுக்க ஆரம்பித்தது. மெதுவாக எழுந்து நிலைப்படியோரம் நின்று தூளித் துணியை எடுத்துத் தரச் சொல்லிக் கேட்க குழந்தைகளைத் தேடினாள். ஒருவரும் இல்லை. கூடம் நிசப்தமாக இருந்தது. தூளித் துணி சமயலறையை எட்டி இருந்த ஓரத்தில் கிடந்தது. தானே அறையை விட்டுக் கிளம்பி தயங்கி நடந்து அந்தப் பக்கம் போனாள்.

அன்னம் அம்மாவோடு பேசிக்கொண்டிருந்தாள். அவள் வாக்கியத் தொடர்ச்சியின் கடைசி வார்த்தைகள் சிவகாமுவின் காதுகளில் லேசாக விழுந்தன. "என்னம்மா இது? அண்ணாவைக்கூட லக்ஷியம் பண்ணவில்லையே" என்று முடித்தாள்.

சிவகாமு பிரமித்து நின்றாள். அன்னத்திற்கு பதில் அம்மா வாயிலிருந்து உடனே வேகமாகக் கிளம்பிற்று. "ஹூம்! போயும் போயும் இந்தத் தரித்திரத்தின் வீட்டில் சம்பந்தம் பண்ணினோம் பாரு. ஒரு செப்புக் காசுக்கு வக்கு இல்லே" என்று அடித்தொண்டையிலிருந்து அமுக்கிப் பல்லைக் கடித்தாள்.

ஒரு நடுக்கம் சிவகாமுவின் நரம்புகளில் எகிறிப் பாய்ந்தது. கீழே குனிந்து துணியை எடுக்கப் போனவள் அதை மறந்து குழம்பிப் போய் நின்றாள். வார்த்தைகளின் வேகம் தாங்காமல் அலைத்த மனசு கண்களில் நீரைப் பெருக்கிற்று. துணியை எடுக்காமலேயே விருட்டென்று திரும்பி தான் இருந்த அறைக்குச் சென்றாள். கையில் குழந்தையை அணைத்திருந்த ஒட்டுத் துணியை எடுத்துக் கீழே விரித்தாள். மெதுவாகக் குழந்தையை அதில் விட்டாள். குழந்தை தூக்கம் கலைந்து கைகளைப் புரட்ட ஆரம்பித்தது கையால் மிருதுவாகத் தட்டிக்கொண்டே அருகில் உட்கார்ந்தாள்.

அவள் கலங்கின கண்கள் குழந்தையின்மேல் பதிந்து இருந்தன. மனது அந்த வார்த்தைகளையே நினைத்துக் கொண்டிருந்தது. சிறிது நேரம் அப்படியே இருந்தாள். இரண்டும் சேர்ந்து முடிவு காட்டினது போல் திடீரென அவள் முகத்தில் ஒரு அலக்ஷிய மாறுதல் ஏற்பட்டது. கடுப்பாக சின்னச் சிரிப்பு சிரித்தாள். 'ஹூம்! இதோ கொண்டு வந்திருக்கேனே பெரிய சீதனம். இதைவிட வேறே என்ன வேண்டும் இவர்களுக்கு?" என்று குழந்தையின் முதுகில் கடைசித் தட்டு தட்டிக்கொண்டே எழுந்திருந்தாள்.

கண்களிலிருந்து வழிந்த ஒரு சொட்டு குழந்தையின் கன்னத்தில் விழுந்தது. விரலால் அதைத் துடைத்துவிட்டு தன் கண்களையும் முந்தானையால் கசக்கித் துடைத்துக்கொண்டாள். அறையிலிருந்து கிளம்பி பிரயாணச் சாமான்களை அவிழ்த்து வைத்துவிட்டு வீட்டுப் பொறுப்பில் பங்கெடுத்துக் கொள்ளப் போனாள்.

மறைமலை அடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1
42853